# மஞ்சரி

MAY '48

சித்திரை




மாப்பிள்ளையின் திண்டாட்டம்

★

பாக்கெட் ரேடியோ

★

அரிசியே மருந்து

★

மனம் குழம்புவது ஏன்?

★

சிம்மாசலம்

★

கடத்திச்சென்ற பெண்

★

பேய் உண்டா?


-6-
அணா

# அழகும் திறமையும்

மஞ்சள், சிவப்பு, பச்சை, நீலம் முதலிய பலநிறக் கம்பள நூல்கள் ஊடும் பாவுமாக இழைந்து, அற்புதமான சித்திர வேலைப்பாட்டினால் ரத்தினக் கம்பளம் நம்மைச் சொக்க வைக்கிறது. (அட்டைப் படம்.) இதை நெய்த தொழிலாளியின் சலியா உழைப்புக்கும் செயல் திறமைக்கும் இது மங்காத அடையாளம். இதேமாதிரி, பல சுவையுள்ள வெவ்வேறு பாஷைப் பத்திரிகைகளிலிருந்தும் நூல்களிலிருந்தும் அரிய விஷயங்களை வரிசையாகப் பிணைத்து அழகாக அமைத்துள்ள இலக்கிய ரத்தினக் கம்பளம் மஞ்சரி.

நமது நாடு சுதந்தரம் பெற்றதும், வெவ்வேறு கட்சியார் அதை எப்படித் தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்துகிறார்கள், பாருங்கள்: தேவி பேசுகிறாள் (பக். 9). நாடு இரு துண்டானதும் ஏற்பட்ட கொள்ளையில், பல பெண்மணிகள் கடத்திச் செல்லப்பட்டார்கள். இவர்கள் மீண்டும் திரும்பி வந்தால், சமூகம் இந்தச் சோதனைக்குத் தாக்குப் பிடிக்குமா? (பக். 4) உறுதியான பாக்கெட் ரேடியோவை வைத்துக்கொள்ள யாருக்குத்தான் ஆசை இராது? (பக். 70) அழகிய மலை வர்ணனையோடு ஆரம்பிக்கிறது இந்த இதழ்; திறமைசாலியான ஒரு முற்போக்கு எழுத்தாளரின் சிறந்த கதையோடு முடிகிறது.


## மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பார்வை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன் — கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. குமாரஸ்வாமி — குமுதினி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி — கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி — 'ஆர்வி'
கௌரி அம்மாள் — டி. வி. பரமேசுவரன்
மோ. ஸ்ரீ. செல்லம் — ச. கு. கணபதி ஐயர்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

---

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை. 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதாரர்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை "ஸர்க்குலேஷன் மானேஜர்" என்று விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 1] [இதழ் 6

# மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# கனி குலுங்கும் சிம்மாசலம்

**கபில கோபாலராவ்**

தென்னாட்டில் பிரசித்தி பெற்ற விஷ்ணு ஸ்தலங்களில் திருப்பதி ஒன்று. அதற்கு அடுத்த படியாக முக்கியத்துவம் வாய்ந்தது சிம்மாசலம் என்னும் க்ஷேத்திரம். சிங்கவேள் குன்றம் என்று இதைத் தமிழில் வழங்குவது உண்டு. திருப்பதி வேங்கடாசலபதிக்கு முடியிறக்குவது போலவே, தெலுங்கு நாட்டினர் இம்மலையில் குழந்தைகளுக்கு முடி இறக்கி வேண்டுதல் செலுத்துவார்கள்.

சிம்மாசலம் விசாகபட்டினத்துக்குப் பதினொரு மைல் தூரத்தில் இருக்கிறது. மலையின் உயரம் சமுத்திர மட்டத்திலிருந்து 800-அடி.

**நம்முடைய புராதனக் கோயில்கள் வெறும் பிரார்த்தனைக்கூடங்கள் அல்ல; மனிதனின் பண்பாட்டையே உயர்த்தும் கலைக் கோயில்கள். அந்தக் கோயில்களில் ஒன்று சிம்மாசலம் கோயில். இந்த க்ஷேத்திரத்தின் இயற்கை யழகு பல கவிகளின் கற்பனையைத் தூண்டியிருக்கிறது. பல ஓவியர்களுக்கு எழில் நிரம்பிய கற்பனைகளைத் தந்திருக்கிறது.**

கோயிலுக்கு ஏராளமான சொத்து இருக்கிறது. அர்ச்சகர்களுக்கும் மற்றக் கோயில் சிப்பந்திகளுக்கும் சிம்மாசலநாதர் பெயரால் வரும் படி இருக்கிறது.

கடந்த 300-வருஷங்களாக விஜயநகர ராஜவம்சத்தாரே சிம்மாசல நரசிம்ம மூர்த்தியின் கோயிலுக்குத் தர்மகர்த்தாக்களாக இருக்கிறார்கள். இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் பொழுது விஜயநகர அரசர் நரசிம்மருடைய கோயிலுக்கு வருஷத்துக்கு ரூ. 15,000-வரும்படி வரும் ஆஸ்தியைக் கொடுத்தார். தற்காலம் ஸ்வாமியின் வருமானம் 3-லக்ஷம் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்.

ராக்ஷஸ ராஜனாகிய ஹிரண்ய கசிபு சிவபக்தன். அவனுடைய பிள்ளையாகிய பிரஹ்லாதன் விஷ்ணு பக்தன். ஹிரண்யன் பிரஹ்லாதனைக் கடலில் தள்ளிவிட்டான். அவன் திரும்பி வராதபடி மேலே மலையையும் தூக்கி வைத்தானாம். அதைக் கண்ட மகாவிஷ்ணு பொறுமையை இழந்தார். உக்கிர ரூபத்தையுடைய நரசிம்மராக மலையின் ஒரு புறத்தில் நின்றுகொண்டு மற்றொரு பக்கத்

காப்பிரைட்: ஆந்திர பத்ரிகா (தெலுங்கு: 31-3-'48),
7, தம்பு செட்டி தெரு, சென்னை.

தைப் பெயர்த்து எடுத்தாராம். நடுவில் பிளந்துகொண்ட சுரங்கத்தின் வழியாகப் பிரஹ்லாதன் மேலே வந்தானும். பிறகு பிரஹ்லாதன் கட்டிய கோயிலே இது என்று இவ்வூர்த் தல புராணம் கூறுகிறது.

கோயில் கட்டப்பட்ட காலம் நிர்ணயமாகத் தெரியவில்லை. கோயிலில் இருக்கும் கல்வெட்டு மூலமாய், சுமாராகக் காலத்தை நிச்சயிக்கலாம். முதல் குலோத்துங்க சோழன் கலிங்க ராஜ்யத்தின் சில பகுதிகளை ஜயித்ததாக, கி. பி. 1098-99-இல் ஏற்பட்ட சிலாசாஸனம் தெரிவிக்கிறது. அப்பொழுதே சிம்மாசலம் பிரசித்தியடைந்திருக்க வேண்டும். மற்ருெரு சிலாசாஸனம் மூன்ரும் வேலானந்த, கொங்க ராஜாவின் பட்டமகிஷி (1137-56) உக்கிர நரசிம்ம மூர்த்திக்குப் பொன்கவசம் சாத்தியதைச் சொல்கிறது. கீழ்க்கங்க வமிசத்தைச் சேர்ந்த அரசஞன முதல் நரசிம்மன் 1267-68-இல் கோயில் நடுப்பீடமும், முக மண்டபமும், நாட்டிய மண்டபமும் கட்டுவித்தானென்று மற்ருெரு கல்வெட்டுச் சொல்கிறது. கிருஷ்ண தேவராயர் கலிங்கத்தை வென்று நாட்டிய ஜயஸ்தம்பம் ஒன்று இங்கே இருக்கிறது. 'தவளை ஸ்தம்பம்' என்று ஒரு கல்தூண் இருக்கிறது. இதவும் கிருஷ்ணதேவராயரின் கலிங்க திக்விஜய யாத்திரையைச் சேர்ந்ததே. இந்தத் தூணைத் தொட்டால் கால்நடைகளின் வியாதிகள் தீர்ந்துவிடுகின்றன என்றும், மனிதர்களுக்குக் குழந்தைகள் பிறக்கின்றன என்றும் ஜனங்கள் நம்புகிருர்கள்.

மலையின் வடபுறத்தில் ஒரு பள்ளத்தாக்கு இருக்கிறது. இது மலையின் அடிப்புறத்தில் அகன்றும் மேலே செல்லச் செல்லக் குறுகியும் போகிறது. இந்தக் குறுகிய மேல் பாகத்தில் கோயிலும் பிராகாரமும் இருக்கின்றன. மலையின் அடிவாரத்தில் ஒரு ரோஜாத்தோட்டம். அதன் வழியாகக் கோயிலுக்குப் போகும் மார்க்கம். தொடர்ந்து 1000-படிகள் ஏறவேண்டும். இரு புறமும் குளிர்ச்சி தரும் மரங்கள் இருக்கின்றன. கண்ணுக்கு எட்டிய வரையில் பச்சென்ற வயல்களும், அன்னுசித் தோட்டங்களும், நில சம்பங்கி மரங்களும் இருக்கின்றன. வெயிற்காலத்திலும் அன்னுசி, மா, பலாமரங்களில் பழம் குலுங்கி நிற்கும் காட்சி யாத்திரிகர்களின் சிரமத்தைப் பறந்தோடச் செய்யும். இரு புறங்களிலிருந்தும் பல வகைப் புஷ்பங்களின் வாசனை கம்மென்று வீசும். மலையேறியபின் திரும்பிப் பார்த்தால் பச்சை நிறம் படர்ந்த, அழகிய சுற்றுப்புறக் காட்சியும் வெயிலின் பொன்னிறம் படிந்த கிழக்கு மலைத்தொடரின் உச்சியும் சித்திரகலா ரசிகர்களுக்கும் கவிகளுக்கும் தெவிட்டாத இன்பத்தைக் கொடுக்கும்.

படியேறும் வழிகளில் முடிந்த இடங்களிலெல்லாம் விஷ்ணுவின் அவதார ரூபங்களும் மற்றத் தேவர்களின் உருவங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன. கண்ணுக்கு விருந்து செய்யும் இயற்கைக் காட்சியில் யாத்திரையின் களைப்பை மறந்து விடுகிருன் மனிதன். தாகம் எடுத்தால் தணிப்பதற்குத் தெய்வ உருவச் சிலைகளின் மூலம் வந்து விழும் அருவிகள் இருக்கின்றன. வழியில் மூன்று நான்கு இடங்களில் குழாய் நீர் போல இந்த நீர்வீழ்ச்சிகள் இடையருமல் கொட்டிக்கொண்டே இருக்கின்றன. இளைஞர்களும் சிறு குழந்தைகளுங்கூட இந்த நீர்

வீழ்ச்சிகளில் ஸ்நானம் செய்து கொண்டிருப்பார்கள்.

ஆயிரம் படிகளைத் தாண்டிய வுடன் ஆஞ்சனேயர் வாசலைக் காண லாம். அவ்வாயிலின் பக்கத்திலேயே ஒரு பெரிய அருவி ஓடுகிறது. இதன் பெயர் மாதவதாரை. இதன் நீர், வாசலின் இருபுறமும் வழிந்து குளமாகத் தேங்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இங்கே ஸ்நா னம் செய்துவிட்டுக் கோயிலுக்குள் புகவேண்டும். இந்த ஆஞ்சனேயர் வாசலைத் தவிர வேறு 28-வாசல் கள் இருந்தனவாம். இப்பொழுது அவற்றின் சிதிலங்களைக் காணலாம்.

பதினெட்டாம் நூற்றாண்டில், விஜயநகரத்தை ஆண்ட சீதாராம ராஜு, விசாகபட்டினத்துக்குப் பதினொரு மைல் தூரத்தில், மலை யின் அடிவாரத்தில், ரோஜாத் தோட்டம் போட்டானாம். அதற்கு நீர்வீழ்ச்சிகளே ஆதாரமாக இருந் தனவாம்.

ஆஞ்சனேயர் வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் நரசிம்மர் ஆலயம் இருக் கிறது. கோயிலின் முக்கால் பாகம் மலையிலேயே செதுக்கப்பட்டிருக் கிறது. கோயிலில் சிற்பங்கள் அழ காக உயர்தரமாக இருக்கின்றன.

கோயிலின் பீடம் சதுர வடிவமானது. அதன்மேல் பெரிய கோபுரம். முற்றமும் அதில் ஒரு சிறிய கோபுரமும் இருக் கின்றன. எதிரில் பதினாறு தூண் களையுடைய முன் மண்டபம். எதிரே தாழ்வாரம். இது நரசிம்மரின் கோ யில். கோயிலுக்குப் பக்கத்தில் வாகனங்கள். வடக்கே நாட்டிய மண்டபம் இருக்கிறது. ஸ்வாமியின் கல்யாணம் இந்த மண்டபத்திலேயே வருஷந்தோறும் நடக்கும். இந்த மண்டபத்தில் வரிசைக்கு ஆறு ஸ்தம்பங்கள் வீதம் பதினாறு வரிசை யாகக் கருங்கல் ஸ்தம்பங்கள் இருக் கின்றன. இவற்றின்மேல் உள்ள சிற்பங்கள் வெகு அழகானவை.

கோயில் முழுவதும் வைஷ்ணவ புராணக் கதைகளும் தேவதைகளும் வழக்கப்படி சிற்பரூபமாக நிருமிக் கப்பட்டிருக்கின்றன. சிருங்கார ரஸத்தைக்கொண்ட பாணியில் நல்ல நிபுணர்கள் மூலம் செதுக்கப்பட்டி ருக்கின்றன. தெலுங்கு நாட்டில் காணப்படும் சிற்பங்களில் இவை முதன்மை வாய்ந்தவை என்று சொல்லலாம். கோயில் முழுவதும் கருங்கல்லால் ஆனது. எண்ணெய் தடவியதுபோல் வழவழவென்று மின்னும். கோபுரச் சிற்பங்கள் மழையாலும் வெயிலாலும சிதைந் திருக்கின்றன.

ஒவ்வொரு தூணிலும் தாமரைப் பூக்களும் மொட்டுக் களும் தொங்குவதுபோல் சித்திரித் திருக்கிறார்கள். ஓர் இடத்தில் கண்ட உருவத்தை மற்றோரிடத்தில் காண முடியாது.

இந்தச் சிற்பங்கள் மேலே சொன்ன நரசிம்மன் காலத்தில் ஏற்பட்டவை என்பதற்கு நிதரிசனங் கள் இருக்கின்றன. இவற்றை வெகு வாக அந்நிய மதத்தார் அழித்த தாகச் சரித்திரம் கூறுகிறது. இந்தக் கோயிலை அண்டிப் பல ஏழைகள் பிழைக்கிறார்கள். நரசிம்மர் உக் கிரமூர்த்தியாகையால் விக்கிரகத் தைச் சுற்றிலும் எப்பொழுதும் சந் தனம் அப்பியிருப்பார்கள். வருஷந் தோறும் சந்தன யாத்திரை உற் சவத்தின் போது இந்தச் சந் தனத்தை எடுக்கிறார்கள்.



# கடத்திச்சென்ற பெண்கள்

**ராஜரத்ன வா. வி. ஜோசி**

பிற மதத்தார் கடத்திச் சென்று, பலாத்காரமாக மணம் புரிந்து கொள்வதும், இந்த வலுக்கட்டாய மணத்தின் பிறகு பிறக்கும் குழந்தைகளை வைத்துக்கொண்டு தவிப்பதும் ஆகிய ஆபத்துக்களுக்கு ஹிந்துப் பெண்கள் எத்தனையோ காலமாக ஆளாகி வந்திருக்கிறார்கள்; இப்போதும் ஆளாகியிருக்கிறார்கள். ஹிந்து சமூகம் எப்போதுமே இத்தகைய பெண்மணிகளைக் காக்க லாயக்கற்றதாக இருந்து வந்திருக்கிறது. இதற்கு நம் நாட்டுச் சரித்திரமே அத்தாட்சி. இம்மாதிரியான இடுக்கண்களினால் சமூகத்திலே பல புதிய பிரச்னைகள் எழுகின்றன.

இத்தகைய பெண்மணிகளை நமது சமூகத்திலே திரும்பவும் சேர்த்துக்கொள்ளலாமா, கூடாதா? சமூகத்திலும் குடும்பத்திலும் இவர்களுக்குப் பழையபடி மதிப்பு இருக்குமா, இராதா? கட்டாய மணத்தினால் பிறந்த குழந்தைகள் வாழும் வழி என்ன? இந்தப் பெண் எப்படிச் சுத்தமாவாள்? - இப்படிப் பல கேள்விகள்.

சமீபகாலத்தில் இப்படிக் கடத்திச் செல்லப்பட்ட பெண்களுக்கு ஹிந்து சமூகத்தின் நல்லெண்ணத்திலோ இரக்கத்திலோ துளியும் நம்பிக்கை இல்லை. தம்மை விடுவிக்க விரும்பும் தொண்டர்களைப் பார்த்து, "எங்களை யார் திரும்ப ஏற்றுக்கொள்வார்கள்? எங்கள் உறவினர்கள் எங்களைத் தங்கள் வீட்டில் எப்படிச் சேர்த்துக் கொள்வார்கள்?" என்று அந்தப் பெண்கள் கேட்கிறார்கள். அது மட்டுமல்ல; "நம்முடைய நாடு இருக்கும் லட்சணத்திலே, இந்த ஆண்களையே புகலாகக் கொண்டுதான் நாங்கள் அடிமை வாழ்வைக் கடத்திவிடுகிறோமே! இவர்களையும் விட்டுத் திரும்பி வந்தால், வேசித்தொழிலைத் தவிர எங்களுக்கு வேறு பிழைப்புக் கிடையாது! சமூகத்திலே எங்களுக்கு எவ்வித மதிப்பும் கிடைக்காது" என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். நம்முடைய சகோதரிகளுக்கு நம்மிடத்திலே நம்பிக்கை போய்விட்டது என்பது இதனால் நன்றாகத் தெரிகிறது. நமது சமூகம் இந்தத் துர்ப்பாக்கியப் பெண்களின் மீது பழியைச் சுமத்தி, இவர்கள் திரும்பி

காப்பிரைட்: ஸ்த்ரீ (மராட்டி: ஏப்ரல் '48), கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா ஜில்லா.

வரும் வழியை அடைத்து, கொள்ளைக்காரர்கள் குடித்தனம் நடத்துவதற்கு உதவி செய்கிறது!

மற்றச் சமூகங்களிலே இம்மாதிரியான சம்பவங்கள் நடப்பதில்லையா என்ன? ஆனல் அவர்களுடைய சட்டமும் நியாயமும் வேறு. நாலு வருஷங்களுக்கு முன்பு, இங்கிலாந்திலே ஒரு பதினலு வயதுப் பெண்ணை ஒரு சிப்பாய் பலாத்காரம் செய்தான். அவள் கர்ப்பம் தரித்தாள். கர்ப்பத்தைக் கலைப்பதோ சட்டப்படி குற்றம்; வளரவிடுவதோ அவளுக்கு ஆபத்து. அவளுடைய வருங்கால வாழ்க்கையைக் கெடுப்பதைவிட, சட்டவிரோதமாயினும் கர்ப்பத்தைக் கலைப்பதே சிறந்தது என்று ஒரு பிரசித்த டாக்டர் பகிரங்கமாகத் தெரிவித்தார்; சஸ்திர சிகிச்சை செய்து கர்ப்பத்தையும் கலைத்தார். அறிவாளிகளான ஆங்கிலேயரோ ஆங்கில அரசாங்கமோ அதைக் குற்றமாக எடுத்துக்கொள்ளவில்லை. அந்தப் பெண்ணும் பேராபத்திலிருந்து தப்பினள்.

கடத்திச் சென்ற பெண்களைத் திரும்பப் பெறுவதற்கு இன்று ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. சமூகத்திலே தங்களுக்கு மீண்டும் பழைய மதிப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டாலொழிய, இவர்கள் திரும்பிவர மாட்டார்கள். இந்தப் பெண்மணிகளை மீட்டுவரும் கடினமான வேலையைவிட, இவர்களுக்குச் சமூகத்திலும் உறவினரிடையிலும் நல்ல மதிப்பை உண்டாக்கி, மகள், மனைவி, அன்னை, சகோதரி, மருமகள் முதலிய உறவுகளை மீண்டும் கொண்டாடி, இவர்களை அன்போடு நடத்துவதுதான் மிகவும் சிக்கலான வேலை. ஹிந்துக்களின் மனேதைரியத்துக்கு இது ஒரு சோதனைக் காலம். இந்தச் சோதனைக்கு அவர்கள் ஈடுகொடுக்க முடியாதென்றல், கடத்திச்சென்ற பெண்களைப்பற்றிக் கண்ணீர் வடிப்பதிலே என்ன பயன்? இப்படிப் பலவீனரும், பயங்கொள்ளிகளும், ஈரமிலா நெஞ்சர்களுமான உறவினர்களிடத்திலே இந்தப் பெண்மணிகள் எதற்காகத் திரும்பி ஓடிவரவேண்டும்?

**ஹிந்து சமூகத்துக்கு இது கடுமையான அக்கினிப் பரீட்சை. பிறர் கடத்திச் சென்ற நம் சமூகப் பெண்மணிகளைத் திரும்ப ஏற்றுக் கொள்ளலாம் என்று பல மதாசாரியர்களும் மகான்களும் அனுமதி அளித்திருக்கிறர்கள். ஆனல் இந்தச் சகோதரிகளை மீட்பது எப்படி? மீட்டுக்கொண்டு வந்தாலும் சமூகத்தில் உறவினர்களிடையில் இவர்களை அன்போடு நடத்துவார்களா? இந்தக் கேள்விகளுக்கு இன்று சமூகம் நடைமுறையில் பதில் சொல்லவேண்டும்.**

'கடத்திச்சென்ற பெண்களை மீட்போம்' என்று கூறுவதைவிட, 'இந்தப் பெண்களின் உறவினர்கள் ஆதரவோடு இவர்களை வரவேற்று, மரியாதையாக நடத்தத் தயாராக இருக்கிறர்கள்' என்று ஒவ்வொரு தொண்டனும் உறுதிமொழி கூறினல், இந்தத் துர்ப்பாக்கியப் பெண்கள் யாவரும் ஒரு க்ஷணங்கூடப் பிறர் வசத்திலே வாழமாட்டார்கள்; இந்தக் கடுமையான சோதனையிலே, மகத்தான தைரியத்தோடு செல்லரைியான தூய்மைக் கொள்கைகளை உதறி எறிந்தால் தான், ஹிந்து சமூகம் உயிர் வாழ்கிறது என்று சொல்ல முடியும். சமூகத்திலே என்ன சொல்வார்களோ என்ற பயத்தைப் போக்குவதுதான், இன்று சமூகத் தலைவர்களின் முதற் கடமை; பெண்கள் ஸ்தாபனங்களின் முக்கியமான கடமை.

# மனம் குழம்புவது ஏன்?

சுப்பண்ணா

* * * * * * * * * *     * * * * * * * * * *

பல சமயங்களில் காரணமில்லாமலே நம் மனம் குழம்புகிறது. வெளிப்படையான காரணம் ஒன்றும் தெரியாமலே சில விஷயங்களின்மேலும் சில ஆட்களின்மேலும் நமக்கு வெறுப்பு உண்டாகிறது. ஓர் ஊருக்குப் போக முயலும் நமக்குப் பல முறை ரெயில் தப்பிவிடுகிறது. இந்தப் புதிர்களுக்கெல்லாம் இதோ ரஸமான விடை இருக்கிறது.

* * * * * * * * * *     * * * * * * * * * *

சங்கீதத்துக்கும் எனக்கும் ஜன்ம விரோதம். யாராவது பாடுவதைக் கேட்டால் ஓடிப்போய் அவர் கன்னத்தில் இரண்டு அறை கொடுக்கலாமென்று தோன்றும். இதற்குப் பரிகாரம் என்ன?

பதில்: உங்களைப் போலவே நம் தேசத்தில் பலர் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். இதனால் உங்களுக்கு மனச் சமாதானமும் தைரியமும் ஏற்படும். இல்லாவிட்டால் தேச க்ஷேமத்துக்காகவாவது, நீங்கள் நினைப்பது போலவே பலர் பாடுவதைப் பலவந்தமாக நிறுத்திவிட வேண்டும் என்று எனக்கும் தோன்றுகிறது. ஆனால், உங்களுக்குச் சங்கீதத்தில் இவ்வளவு வெறுப்பு ஏற்படுவதற்கு வேறு காரணம் இருக்க வேண்டும். சிறுவயதில் உங்கள் தாய் பாடிய தாலாட்டோ, உங்கள் அக்காவுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுத்த பாட்டு வாத்தியாரின் குரலோ, உங்கள் கையைப் பிடித்தவளின் குரல் விசேஷமோ ஏதாவது ஒன்றுதான் சங்கீதத்தின் மேல் உங்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் வெறுப்புக்குக் காரணமா என்பதை ஆராய்ந்து அறிந்தால் நல்லது. இன்னொரு விஷயம்: நீங்களே தனிமையில் சில சமயங்களில் சற்றுப் பலக்கப் பாடிப் பழகிப் பாருங்களேன். உங்கள் சொந்தப் பாட்டைக் கேட்டு உங்கள் கன்னத்திலேயே நீங்கள் அடித்துக்கொள்ள நேர்ந்து, இந்த அடிகளாலேயே உங்கள் மனத்திலுள்ள சங்கீத வெறுப்பு மாறினாலும் மாறிவிடலாம்.

## 2

என் மாமா துமுக்கூரில் இருக்கிறார். மாமா வீட்டுக்குப் போகவேண்டுமென்று நான் பெங்களூர் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் போதெல்லாம் எனக்கு ரெயில் தப்பிவிடுகிறது. இது ரெயிலின் குற்றமா? என் குற்றமா? தப்பு என்னுடையதானால் இதைத் திருத்திக்கொள்வது எப்படி?

பதில்: பெங்களூர் ஸ்டேஷன் என்று சொல்லுகிறீர்கள். இது பெரிய ஸ்டேஷன். இங்கேயிருந்து ரெயில் குறித்த காலம் மாறிப்

காப்பிரைட்: குறவஞ்சி (கன்னடம்: ஏப்ரல் '48), பளேபேட், மல்லேசுவரம், பெங்களூர்.

புறப்பட நியாயமில்லை. எனவே தப்பு உங்களிடந்தான் இருக்க வேண்டும்; உங்கள் மனத்துக்குள் ஒளிந்துகொண்டிருக்க வேண்டும். உங்களுக்கும் உங்கள் மாமாவுக்கும் ஏதாவது மனஸ்தாபம் உண்டா? உங்கள் மாமிக்கு உங்களைக் கண்டால் ஆகாதா? உங்களைப் பார்த்தால் அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்குமா? நீங்கள் உங்களை அறியாமலேயே ஸ்டேஷனுக்குத் தாமதித்துப் போக இவையே காரணங்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால்...? உங்கள் மாமா பெண்ணை உங்களுக்குக் கொடுப்பதாக நிச்சயித்து வைத்திருந்து பிறகு வேறு இடத்தில் கொடுத்து விட்டார்களா? அப்படி இருந்தால் நீங்கள் துமுக்கூர் போகும் யோசனையையே விட்டுவிடுவதுதான் நல்லது.

## 3

**நா**ன் காந்திக் குல்லாக்காரன். ஆனாலும் ஜாதித் துவேஷம், மதத் துவேஷம் என்னும் விஷவாயு எனக்கு அமுதமாக இருக்கிறது. நான் திருந்த முடியுமா?

பதில்: ஜாதிமதத் துவேஷங்கள் விஷத்துக்குச் சமானம் என்று உங்களுக்குத் தோன்றுவதே நல்ல அறிகுறி. பல காந்திக் குல்லாக்காரர்கள் மனத்தில் இன்னும் இது படவே இல்லை. உங்கள் முன்னேற்றத்தின் முதற்படியை நீங்களே தாண்டிவிட்டீர்கள். சாதாரணமாக ஜாதிமதத் துவேஷத்துக்குத் தாழ்வு மனப்பான்மையே மூல காரணம். அதுதான் பகைமனோ பாவமாக மாறி விடுகிறது. நீங்கள் எந்த எந்த விஷயத்தில் தாழ்ந்தவர் என்பதைக் குறித்து ஒரு குறிப்பு எடுங்கள். உங்கள் ஊரிலுள்ள பலரோடும் மூனைந்து பழகுங்கள். சுய நம்பிக்கையையும் கௌரவத்தையும் உண்டாக்கிக்கொள்ளுங்கள். காந்தி தொப்பியோடு நின்றுவிடாமல் காந்தியின் உபதேசங்களைப் பாராயணம் செய்யுங்கள். காந்தி ரோட், காந்தி கிராமம் என்ற பெயருள்ள இடத்திற்கு உங்கள் வீட்டை உடனே மாற்றிக்கொள்ளுங்கள். உங்களைப் பிடித்திருக்கும் விஷவாயு உங்களை விட்டு ஆகாய மண்டலத்துக்குப் போய்விடும்.

## 4

**நா**ன் ஓர் ஏழைக் குமாஸ்தா. என்றாலும் உடையணிவதில் நான் எஜமானரை மிஞ்சிவிடுகிறேன். இது சரியா? இதனால் என் எஜமானருக்கு என்மேல் பொறாமை உண்டாகாதா?

பதில்: நீங்கள் இப்படியெல்லாம் வீண் குழப்பம் அடையவேண்டாம். ஏழைக் குமாஸ்தாக்களுக்கெல்லாம் பகட்டான உடைகள் எங்கிருந்து எப்படிக் கிடைக்கும் என்பது அவருக்குத் தெரியாதா? உங்களுடைய பகட்டான உடையால் அவர் பெருமைதானே உயருகிறது? 'பகட்டான உடை உடுத்தும் இவர்களை அடக்கியாளும் பாக்கியம் நமக்குக் கிடைத்ததல்லவா?' என்று அவர் மனம் சந்தோஷத்தால் துள்ளும். நீங்கள் விலை உயர்ந்த புதிய தினுசு ஸூட்டுகளை அணிய அணிய அவர் மனம் இன்னும் சந்தோஷப்படும். பொறாமை இருக்கவே இருக்காது. பயப்படாதீர்கள்; இன்னொரு புது ஸூட்டுக்கு ஆர்டர் கொடுங்கள்.

## 5

**நா**ன் ஒரு மாணவன். இன்னும் கல்யாணம் ஆகவில்லை. ஹினிமாஸ்டார் என்றாலே என் மனத்தில் ஒரு மாறுதல் உண்டாகிறது.

தயை செய்து என்னைக் கைதூக்கி விடுங்கள்.

பதில்: அநேகமாக இது நாளாவட்டத்தில் சரியாகிவிடும். கவலை வேண்டாம். "ஏனு சுக, இது ஏனு சுக......" என்ற புரந்தரதாசர் கீர்த்தனையைப் பாடம் செய்து கொள்ளுங்கள். தமிழ்க் கன்னட சினிமாக்களுக்கெல்லாம் போய் முழுப்படமும் பார்த்து வாருங்கள். சிலரைப்போல் நடுவில் எழுந்து வரவேண்டாம். மனம் ஏதோ ஆவதாகச் சொல்கிறீர்களே, அந்தச் சமயத்தில் ஏதாவது ஒரு சிறுகதை எழுதி ஒரு பத்திரிகைக்கு அனுப்புங்கள்.

## 6

**நா**ன் பிரசித்திபெற்ற ஒரு பிரசங்கி. தற்காலத்தில் என் பிரசங்கங்களிலெல்லாம், 'வண்டவாளம்' என்ற பதம் எப்படியோ வந்து புகுந்துகொண்டது. மணிக்கு ஐம்பது தடவை அந்தப் பதம் என் வாயிலிருந்து வெளிப்பட்டு விடுகிறது. அதன் அர்த்தம் என்ன என்பதே எனக்குத் தெரியாது. அதை உபயோகிக்கும் இடம் சந்தர்ப்பம் இவைகளையும் அறியேன். ஆனால் என் பேச்சில் இந்த வண்டவாளம் புகுந்தகொண்டதை மாத்திரம் உணருகிறேன். இதை மாற்றுவதற்கு வழி என்ன?

பதில்: சிவ, சிவா! இதற்குப் பரிகாரம் தேடி 'வண்டவாளம்' என்னும் வார்த்தையையே உங்கள் பிரசங்கத்திலிருந்து எடுத்துவிட்டீர்களென்று வைத்துக்கொள்வோம். அப்புறம் உங்கள் புகழின் சிகரம் கழன்று விழுந்ததென்றுதான் அர்த்தம். அந்த வார்த்தை அடிக்கடி காதில் விழாதிருந்தால் உங்கள் பிரசங்கம் சப்பென்று ஆகிவிடும். அதன் அர்த்தம் எதுவாக இருந்தால் உங்களுக்கு என்ன வந்தது? விட்டுத் தள்ளுங்கள்! இடம், சந்தர்ப்பம் என்று ஏதோ சொன்னீர்களே, அவை வெகு அழகான சொற்கள். அவற்றைக் கவனித்து வண்டவாளத்தை உபயோகியுங்கள். உங்களுக்குச் சர்வ மங்களங்களும் உண்டாகட்டும்.

◦◦◦○✿○◦◦◦

### விச்வதாதா

ஆந்திர மகாபுருஷர்களில் வீரேசலிங்கம் பந்துலுவைப் போல் சமூக சீர்திருத்தம், கல்வியைப் பரப்புவது, ஏழைகளுக்கு உதவி செய்வது இம் மூன்று பெரிய விரதங்களை அநுஷ்டித்தவர் தேசோத்தாரக, விச்வதாதா, கலாப்ரபூர்ண, காசிநாதுனி நாகேச்வரராவ். மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் தேசத்துக்கு வஞ்சனையின்றி உழைத்தவர் இவர். ஆந்திர பத்திரிகையை ஆரம்பித்து நடத்தி முன்னுக்குக் கொண்டுவந்தவர் இவரே. இவர் கேட்டோருக்கு இல்லை என்னாமல் கொடுத்ததைக் கண்ட மகாத்மா காந்தியடிகளே, 'விச்வதாதா' என்று இவரை அழைத்தாராம்.

* * * *

உழவுக்கும் கறவைக்கும் லாயக்கான மாடுகளை மட்டும் வைத்துக்கொள்ள வேண்டும். மிஞ்சின பலவீன மாடுகளால் தீனி நஷ்டம்; காடு அழிகிறது; தவிர, கால்நடைகளின் தொத்து நோயும் பரவும்.

—ஓர் உழவர்.



# தேவி பேசுகிறாள்

புரொபஸர் வி. கே. கோகாக்

**சுதந்தரம் வந்துவிட்டது. பாரத தேவியின் விலங்கு அறுபட்டது. தேவியைத் தேசபக்தி மிக்க சிற்பி கற்பனையால் கண்டு, சிலை செதுக்கி வைக்கிறார். ஆங்கிலேயர், சம்ஸ்தானாதிபதி, லீகர், மகாசபைக்காரர், வியாபாரி, பிச்சைக்காரி, கம்யூனிஸ்ட், கவிஞன் இந்த ஒவ்வொருவரும் தேவியை எப்படிக் காண்கிறார்கள்? அவளைக் கண்டு அவர்களுக்கு உண்டாகும் உணர்ச்சிகள் யாவை? இவற்றுக்கெல்லாம் முடிவு என்ன? தேவியின் திருவாக்கையே கேட்டுக்கொள்ளுங்கள்.**

[பாரதமாதாவின் சிலைக்கு அருகில் அதை அமைத்த சிற்பி யோசனையில் ஆழ்ந்து நிற்கிறான். விளக்கின் ஜோதி வீசுகிறது. பெரிய சாலையின் பக்கத்தில் ஒரு பந்தலுக்குக் கீழே அவ்வுருவம் இலங்குகிறது. நடு நிசிக்குப் பின் சிறிது நேரம் ஆகிவிட்டது.]

**சிற்பி:** திருநாளிலும் பெரிய திருநாள் இது. இந்த நாள் உதயமாகப் போகிறதென்று நூறு நூறு ஆண்டுகளாக நம் நாடு காத்துக் கொண்டு நிற்கிறது. சுவர்க்க இன்பத்திலே பிறந்த விடுதலை இன்று வீசும் தென்றலிலேகூட மணக்கிறது. இதோ அன்னையை ஜனங்கள் கண்டு வணங்கிச் சென்றார்கள். என் சிற்பம் பயனுடையதாயிற்று. என் பிரார்த்தனை நிறைவேறியது.

[ஓர் ஆங்கிலேயன் வேகமாக நடந்து வருகிறான். அவனுக்குமுன் கைப்பெட்டியுடன் வேலையாள் வருகிறான். ஆங்கிலேயன் சிற்பியையும் சிலையையும் பார்த்துவிட்டு நிற்கிறான்.]

**ஆங்கிலேயன்:** ஹல்லோ! இந்தியத் தாயின் மற்றொரு விக்கிரகமா! நன்றாகத்தான் இருக்கிறது!

**சிற்பி:** நீ அதை ஒப்புக்கொள்கிறாயே; சந்தோஷம். இந்த நேரத்தில் நீ எங்கே போகிறாய்?

**ஆங்கிலேயன்:** நான் ஊருக்குப் போகிறேன்; கடைசியாக எங்கள் ஊருக்குப் போகிறேன். (சிரித்துக் கொண்டே) நான் இந்தியாவை விட்டு வெளியேறுகிறேன். சாமான்களையெல்லாம் விற்றுப் பணமாக்கிக்கொண்டேன். சில நாற்காலிகளை மாத்திரம் கொண்டு போகிறேன்; அவை இங்கிலாந்தில் கிடைப்பது அரிது. சில கம்பளித்துணிகளையும் கொண்டுபோகிறேன்; ஊரில் துணிக்கு ஏகக் கசமுசல். கடைசியாக நான் காரைத்தான் விற்றேன். அதை வாங்கினவர் ஸ்டேஷனில் அதைப் பெற்றுக் கொள்வார். அதில் என் மனைவிமக்களை முன்

காப்பிரைட்: திரிவேணி (ஆங்கிலம்: மார்ச் '48),
மல்லேசவரம், பெங்களூர்.

னால் அனுப்பிவிட்டுப் பின்னாலே போகிறேன். டே குசினி, சலோ.

**சிற்பி:** நீ இங்கே அரண்மனையில் வாழ்ந்தாய். அங்கே போய்க் குடிசையில் நூற்றோடு நூற்றொன்றாக வாழ்வாய்.

**ஆங்கிலேயன்:** (முகம் சிவந்தாலும் உணர்ச்சியை அடக்கிக்கொண்டு) ஆ! நீ அப்படிச் சொல்வாயென்று எனக்குத் தெரியும். எங்கள் ஊரை நீ பார்த்ததில்லையே! அது இருக்கட்டும். இங்கிலீஷ்காரன் வெளியேறிக்கொண்டிருக்கிறான். ஆனால் அவன் அதிகாரம் சமாதி பண்ணப்பட்ட இடத்திலிருந்து ஒரு பூதம் கிளம்பிப் பயங்கரமான காரியங்களைச் செய்யும். இது ஒரு ஜோசியம். இதை நினைவில் வைத்துக்கொள். (போகிறான்.)



ஆங்கிலேயன்

**சிற்பி:** கடைசியாக நீ உதைக்கும் உதைக்கு நன்றி, தம்பி. இங்கே வாழும்போது எங்களை மிரட்ட முடியவில்லை; போகும்போதாவது மிரட்டிப் பார்க்கிறாய். நன்றி.

[சம்ஸ்தான அதிகாரி ஒருவர் நெடுஞ்சட்டையுடனும், தலையில் கறுப்புக் குல்லாயுடனும் வந்து சாலையோரத்தில் நின்று சிலையைப் பார்க்கிறார்.]

**சம்ஸ்தான அதிகாரி:** ஆஹா! என்ன இது! அழகான விக்கிரகம்! இந்தியாவே தேவியாகிவிட்டதே! எவ்வளவு கணக்காக உருவம் அமைந்திருக்கிறது! நீதானே இதைச் செய்தாய்? என்ன?

**சிற்பி:** ஆமாம். தாய்முகம் எல்லாப் பிள்ளைகளுக்கும் தெரியும். ஆனாலும் பளிங்கில் இதை அமைக்கும் பேறு எனக்குக் கிடைத்தது.

**சம்ஸ்தான:** உன்னுடைய கற்பனையையும் மாசில்லாத வேலைப்பாட்டையும் பாராட்ட வேண்டும். அது சரி, ஆனால், ஏன் அப்பா, நீ மறந்துவிட்டாயே! இந்த உருவத்தில் இந்தப் பகுதி நான் வாழும் சம்ஸ்தானம். அது சுதந்தர சம்ஸ்தானம் ஆயிற்றே. உண்மையில் இந்த உருவத்தில் அது இருக்கப்படாதே!

**சிற்பி:** (கோபக் குறிப்புடன்) அன்னையின் திருமேனிப் பகுதிகளை வெட்ட விரும்பும் நீ யார்? நரபட்சணத்தைவிட இது கொடிது. ஏ முட்டுக்கட்டைப் பெருமானே, தேவியை வணங்கு. அவளை நமஸ்கரித்து மன்னிப்புக் கேள். உன் வாழ்நாள் முடிவு கிட்டிவிட்டது.

**சம்ஸ்தான:** முடிவைப்பற்றிப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். நான் மன்னிப்புக் கேட்கவேண்டுமா? நீ பேசின பேச்சுக்கு நீதான் மன்னிப்புக் கேட்கவேண்டும். மரியாதைக்குக் காலம் இல்லை. வெள்ளைக் குல்லாயும் வேட்டியும் கட்டிக்கொண்டு அயோக்கியர்கள் ராஜதந்திரிகளாக வேஷம் போட்டு வந்துவிடுகிறார்கள். முட்டாள்கள்!

[போகிறார். முஸ்லிம் லீகைச் சேர்ந்த ஒருவர் வருகிறார். அவர் குல்லாயில் இளம்பிறை உருவம் இருக்கிறது.]

**லீக் ஆசாமி:** அவன் என் தம்பி அவ்வளவு கோபமாகப் போகிறான்? அவனுக்கு என்ன வேணுமாம்?

**சிற்பி:** இந்த மகாதேவியை வணங்கமாட்டானாம்!

**லீகர்:** ஓ! இதுதானா? இதைப் பற்றி நீ ஏனப்பா சங்கடப்படுகிறாய்?

இதோ நான் வணங்குகிறேன். அவனுக்காக, மற்றவர்களுக்காக, உண்மையில் உலகிலுள்ள எல்லோருக்குமாக நான் அன்னையை வழிபடுகிறேன்.

[சிலைக்கு அருகில் செல்லத் தொடங்குகிறான்.]

சிற்பி: (ஆச்சரியத்துடன்) கூடாது, கூடாது. நீ அப்படிச் செய்யும்படி விடமாட்டேன். விக்கிரகத்தை வணங்கக் கூடாதென்று உன்னுடைய மதம் சொல்கிறது.

லீகர்: இருக்கலாம். ஆனால் மற்றவர்களோடு சமாதானமாக வாழும்படி என் மதம் கட்டளையிடுகிறது. ஹிந்து முஸ்லிம் சீக்கியர்களாகிய நாம் அனைவரும் சகோதரர்களே.

[மகாசபைக்காரர் ஒருவர் வேகமாக வருகிறார்.]

மகாசபைக்காரர்: அது பொய்! அவனை நம்பாதே! அவனை நான் முழுதும் கவனித்துக்கொண்டு வருகிறேன். அவன் நாக்கில் தேனொழுகினாலும், இருதயத்தில் இருப்பது விஷம். நம் எல்லைக்கு அப்பாலுள்ள பிறையைத் தொழும் நாட்டில் அவன் உள்ளம் இருக்கிறது. ஆனால் இங்கே தன்னைப் பாதுகாத்துக் கொள்ளச் சொல்வது ஒன்று; செய்வது வேறு. அவன் துரோகி.

லீகர்: பாகிஸ்தானுக்காக நாங்கள் போராடினோம் என்பது உண்மை. ஆனால், உள்நாட்டுக் கலவரத்தை நிலைத்திருக்கச் செய்வதற்காக அப்படிச் செய்யவில்லை. ஒற்றுமையை முன்னிட்டே பிரிவினையை வேண்டினோம். நிலத்தைப் பிரித்துக்கொண்டோம். உள்ளத்தால் ஒன்றுபடுவோம்.



சம்ஸ்தான அதிகாரி

மகாசபைக்காரர்: (அதிகக் கோபத்துடன்) அவனை நம்பாதே! அவன் புல்லில் மறைந்திருக்கும் பாம்பு! உலகத்தில் வேறெங்கும் ஹிந்துக்களுக்குச் சொந்தமான தேசம் இல்லை. நாம் ஹிந்து ராஷ்டிரத்தைச் சமைப்போம். காங்கிரஸ் இந்தியாவின் இருதயத்தைத் துண்டு போட்டுவிட்டது. காங்கிரஸானது...

சிற்பி: (காதைப் பொத்திக்கொண்டு) அண்ணா! காங்கிரஸை விட்டுவிடு. அது என்ன பண்ணியது, என்ன பண்ணவில்லை என்று எனக்குத் தெரியாது. ஆனால் இது மாத்திரம் தெரியும்: இவ்வளவு கொடுமையாகப் பேசி நீ என் உள்ளத்தைக் கீறிவிட்டாய். (கூவியபடியே) அண்ணன்மாரே! தயை செய்து என்னை விட்டு அகலுங்கள்!

மகாசபைக்காரர்: (கோபத்துடன்) உன்னைப்போன்ற கண்ணீர் விடுகிறவர்களும் நிறத்துவேஷிகளுமே தேசத்தைக் குட்டிச்சுவராக்கிவிட்டார்கள். கங்கோத்திரியைப் பணயம் வைத்தும் கைலாச மலையை ஒற்றிவைத்தும் இழந்தீர்கள். பிறையையும் உடுவையும் என்ன செய்யவேண்டும் என்பது எனக்குத் தெரியும். (போகிறார்.)

லீக்: உன் காவிக் கொடியை என்ன செய்யவேண்டும் என்பது எனக்கும் தெரியும். (போகிறார்.)

சிற்பி: (தேவியை நோக்கி) என் தாயே! இந்தக் காட்சிகளைக் காணவா நான் என் இருதய ரத்தத்தைக் கொண்டு உன் உருவ நரம்புகளை நிரப்பி, என் உடம்பு வன்மையைக் கொண்டு உன்னைச் செதுக்கினேன்? கொடுமை! வார்த்தையிலே சொல்ல முடியாத மகா கொடுமை!

[காந்தி குல்லாய், நேரு ஷர்ட்டும் ஜாகெட்டும், உப்பிய பைகள் - இவற்றுடன் வியாபாரி ஒருவன் வருகிருன்.]

வியாபாரி: என்ன அப்பா கொடுமை? சுதந்தரம் வந்திருக்கிறது; இந்தச் சமயத்தில் கொடுமை என்பது இருக்க நியாயம் இல்லையே! நாம் நம்முடைய நாட்டைச் சொந்தமாக அடைந்திருக்கிறோம். சொந்தக் கார், சொந்த எஞ்சின், சொந்த விமானங்கள் எல்லாம் நமக்குக் கிடைக்குமே! தேங்காய், தேங்கா யெண்ணெயோடே நம் வியாபாரம் நிற்குமா என்ன? ஏன் அப்பா, இன்று நம் சம்பாத்தியம் என்ன, சொல்! மிகவும் அழகான பாரத மாதா விக்கிரகத்தை எழுப்பியிருக்கிருய். ஏகப்பட்ட கூட்டம் வந்திருக்கவேண்டுமே!



லீகர்

சிற்பி: (திகைத்து) சம்பாத்தியமா? எதைக் கொண்டு சம்பாதிப்பது?

வியாபாரி: (சிரித்தபடி) ஏன்? இந்த விக்கிரகத்தைக் கொண்டுதான். அதற்குத்தானே இது ஏற்பட்டது? உனக்கு அதிருஷ்டம் இல்லை போலிருக்கிறது. நீ குஷியாகவே இல்லையே!

சிற்பி: கடவுளே! ஏதோ சந்தையில் வைத்திருக்கும் கடையென்று நீ நினைக்கிருய். அப்படியானல் அது தவறு அண்ணு, தவறு. இந்த மகத்தான இரவில் அன்னையின் இந்தத் திருமுகத்தை ஒளிவிளக்கின் உதவியால் இந்த நாட்டு மக்கள் தரிசனம் செய்யும்படி காட்டி அவர்கள் பெற்ற பேற்றை உணர்த்த வேண்டுமென்று நினைத்தேன்.

வியாபாரி: (பிரமித்து) என்ன! இதெல்லாம் உன் சொந்தச் செலவிலே செய்ததென்று சொல்கிருயா? அதுவும் லாபம் இல்லாமலா? உனக்கு ஏதோ மூளைக் கோளாறென்று தோன்றுகிறது. இங்கே பார்: ஆயிரக்கணக்காகக் கொடிகளை விற்று அதைக் கொண்டு நகரத்திலுள்ள பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு மிட்டாய் வாங்கிக் கொடுத்தேன். இந்த ரோடு முழுவதும் நான்தான் விளக்குகளைக் கொண்டு அலங்காரம் செய்திருக்கிறேன். இதையெல்லாம் உனக்கு எடுத்துச் சொல்லிப் பயன் என்ன? வாழ்க சுதந்தர இந்தியா!

சிற்பி: (திகைப்புடன்) என்ன? இந்தத் திருநாளை நீ சில்லறை லாபத்தைச் சம்பாதிக்கவா உபயோகித்துக் கொண்டாய்? இல்லையென்று சொல், சொல் அப்பா! அப்போதுதான் என் ஆத்மா உய்யும்.

வியாபாரி: (பயத்துடன்) வெறும் பொருமையால் இப்படிப் பேசுகிருய். ஒரு காசும் சம்பாதிக்க முடியாத நீ சிரமப்பட்டு நான் சம்பாதிக்கிறதைக் கண்டு வயிற்றெரிச்சல் கொள்கிருய். சுதந்தரம் எதற்காக வந்தது? சுதந்தரம் செல்வத்துக்குத் தலைவாசல். இனிமேல் நாங்களே ஆளப் போகிறோம் — காந்திக் குல்லாயும் நேரு ஷர்ட்டும் அணிந்த வியாபாரிகளாகிய எங்களைத்தான் சொல்கிறேன். இந்திய நாடு இங்கிலாந்தைப் போல வியாபாரிகளின் நாடாக இருக்கப் போகிறது. வருங்காலம் பிரமாதமாக விளங்கப் போகிறது. இதை மனசில் வாங்கிக் கொள் அப்பா! (சிரித்தபடியே) போக எண்ணுகிறேன்.

சிற்பி: பை நிரம்பிய பெருமானே, போய்விட்டு வா. உன் பணத்தை வைத்துக்கொண்டு க்ஷேமமாயிரு.

[கந்தையுடையணிந்து எலும்பும் தோலுமாக ஒரு பிச்சைக்காரி வருகிறாள்.]

பிச்சைக்காரி: சாமி, கடவுள் உங்களைக் காப்பாற்றுவார். சுதந்தரத் திருநாள் இது. தர்மம் செய்யுங்கள். புண்ணியவான்களே, கடவுள் உஙகளைக் காப்பாற்றுவார்.

வியாபாரி: (சிடுசிடுப்புடன்) இந்தப் பிச்சைக்காரர்கள் இருக்கிறார்களே, இவர்கள் பிச்சையெடுப்பதற்கு உரிமை கொண்டாடுகிறார்கள்; பிராணனை வாங்கிவிடுகிறார்கள். சட்டசபையில் ஒரு தீர்மானம் கொண்டு வர வேண்டும். நாம் சுதந்தரம் அடைந்து விட்டோம். ஆகவே சட்டத்தால் பிச்சையெடுப்பதையே ஒழித்துவிட வேண்டும். ஏ பிச்சைக்காரி! (அவளுக்கு ஓர் அணாக்காசைக் கொடுக்கிறான்.) இதோ பார், பாதி ராத்திரி கடந்துவிட்டது. ஆகஸ்டு பதினைந்தாம் தேதி போய்ப் பதினாறும் தேதி வந்தவிட்டது. இனிமேல் நீ பிச்சை எடுக்கவே கூடாது. ஆகஸ்டு பதினைந்துக்கு அப்புறம் இனிய வாழ்வு வாழலாம் என்று நீ நினைத்தாயா? (சிடுசிடுப்புடன் போகிறான்.)



மகாசபைக்காரர்

பிச்சைக்காரி: சுதந்தரத் திருநாளாம்! இன்று எனக்குக் கிடைப்பது ஒற்றை அணாக் காசுதான்! பயமுறுத்தல் வேறு! அட கடவுளே!

சிற்பி: வேறு என்ன கிடைக்குமென்று எண்ணினாய் அம்மா? பணக்காரன் எப்போதும் அப்படித் தான் இருப்பானென்று உனக்குத் தெரியாதா?

பிச்சைக்காரி: பதினைந்து வருஷமாகப் பிச்சை எடுக்கிறேன். எனக்கா தெரியாது? சுயராஜ்யம் வந்திருக்கிறதே, இன்றைக்கு மாறிப் போகுமென்று நினைத்தேன்.

சிற்பி: சுயராஜ்யம் என்பது என்ன?

பிச்சைக்காரி: எனக்குத் தெரியாது. எல்லோரும் ஒரே கொம்மாளமாக இருக்கிறார்கள். அதைப் பார்த்து என்னவோ பிரமாதமான சந்தோஷம் வந்திருக்கிறதென்று நினைத்தேன். துரைமார்களெல்லாம் இன்றைக்கு இந்தத் தேசத்தை விட்டுப் போகப் போகிறார்களாமே; அது உண்மை அல்லவா?

சிற்பி: அல்ல, உண்மை அல்ல. வெள்ளைக்காரர் போகப் போகிறார்கள்; ஆனால் உள்ளூர்த் துரைமார்கள் அவர்கள் பதவியைப் பற்றிக் கொள்வார்கள். வியாபாரிகள் நம்மைக் கடைகளில் ஏமாற்றிக்கொண்டும் டெல்லியிலிருந்து ராஜ்யபாரம் நடத்திக்கொண்டும் இருப்பார்கள். அதைப் பற்றி உனக்கு என் கவலை? இந்தா, இதை வாங்கிக்கொள். (ஒரு ரூபாயைக் கொடுக்கிறான்.)

பிச்சைக்காரி: சாமி, நீங்கள் நன்றாக வாழவேண்டும். கடவுள் உங்களைக் காப்பாற்ற வேண்டும். நீங்கள் இதோ வைத்து வணங்குகிற மகாலட்சுமித் தாய் உங்களுக்கு இன்பமும் செல்வமும் தரவேண்டும்.

சிற்பி: (ஆச்சரியத்துடன்) இது லக்ஷ்மி அல்ல; இது பாரதமாதா; நமக்கெல்லாம் தாய்.

**பிச்சைக்காரி:** ஓகோ, பாரத மாதாவா? ஜே, ஜே, ஜே என்று கோஷம் போடும்போது அவர்கள் சொல்கிறார்களே அதுவா? நினைப்பு வைத்துக்கொள்ளுகிறேன், சாமி! (போகிறாள்.)

**சிற்பி:** (யோசித்துக்கொண்டே) கனவு பொய்த்தது! கற்பனை குலைந்தது! (சிலையை நோக்கி) தேவி, நீ யாருடைய தாய்? பகையை வளர்த்து ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சி அக்கிரமங்களுக்குச் சட்ட பூர்வமாக அணை கோலுவதுதான் சுதந்தரம் என்று எண்ணும் அந்த மனிதர்களின் தாயா? தாய்தந்தை இன்னாரென்றே அறியாத இந்தப் பிச்சைக்காரியின் தாயா? பிரமை கலைந்து நிற்கும் சிற்பியாகிய எனக்குத் தாயா? சொல், தாயே!

[வெறுந்தலை, நேரு ஷர்ட்டு, தொளதொளப்பான பைஜாமா- இவற்றுடன் ஒரு கம்யூனிஸ்ட் வருகிறான்.]

**கம்யூனிஸ்ட்:** (சிரித்தபடியே) சிற்பிகளே விநோதமான சாதி! நல்ல புத்தியோடு இருக்கிற எவனாவது பளிங்குச் சிலை பேசுமென்று நினைப்பானா? உங்கள் குரல் குயிலைப்போலத்தான் இருக்கிறது; ஆனால் மூளை மாத்திரம் அற்புதமான ஆட்டு மூளை! ஓ, இது பாரதமாதாவா! அப்படிச் சொல்லு! ஆஹா! இப்பந்தி ராஜ்யத்தின் உருவத்தை இங்கே பிரதிஷ்டை செய்திருக்கிறாய்.

**சிற்பி:** நீ ராஜ்யத்தைப்பற்றிச் சொல்கிறதில் உண்மை இருக்குமென்றே நம்புகிறேன். கொஞ்ச நேரத்துக்கு முன் ஒரு வியாபாரியைப் பார்க்கிறவரையில் அதை உணரவில்லை. இந்த விக்கிரகத்துக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? இது ராஜ்யங்களையும் நாடுகளையும் கடந்து ஒளிர்வது. அதற்கு அதுவே பொருள்.

**கம்யூனிஸ்ட்:** (புன்சிரிப்புடன்) நல்லது, உண்மையில் இந்த உருவம் இப்பந்தி ராஜ்யம் ஒன்றைக் குறிப்பதோடு நிற்கவில்லை; அதற்கு மேலும் ஒன்று உண்டு. கள்ளச் சந்தைக்காரனின் பொருளாதாரமும் மத வெறியனின் காட்டுமிராண்டிக் கற்பனையும் கலந்தது இது. நீ மயங்கிப்போய், பிறரையும் மயக்கப் பார்க்கிறாய். நான் சொல்கிறேன், இந்த விக்கிரகத்தைக் கீழே தள்ளு; அந்த இடத்தில் ஒரு ரூபாய் கொடுத்து அனுப்பினாயே, அந்தப் பிச்சைக்காரியை நிறுத்து. அநாதையாய், நிற்க நிழலின்றித் திண்டாடும் அவள்தான் இந்தியத் தாய். இந்தப் பந்தலின் பெருமை அவளுக்குத்தான் தெரியும்; இந்த உயிரற்ற விக்கிரகத்துக்குத் தெரியாது.

**சிற்பி:** (அலட்சியமாய்) தேவியைத் தூஷித்து அபசாரம் செய்யும் நீ யாரையா? என்னைத் தனியே விட்டுவிட்டுப் போ. உன்னிடத்திலிருந்து நான் கம்யூனிஸத்தைப்பற்றிப் பாடம் கேட்கப் போவதில்லை.


வியாபாரி

**கம்யூனிஸ்ட்:** சரிதான். மறுபடியும் உன்னைத் தேடி வருவேன் என்பது நிச்சயம். உன்னைப்போன்ற கலைஞர்கள் புரட்சித் தலைவர்களாக இருக்கவேண்டியவர்கள் என்பதை மாத்திரம் ஞாபகம் வைத்துக்கொள், அப்பா!



பிச்சைக்காரி

**சிற்பி:** புரட்சி! இன்னும் ரத்தம் சிந்தவா வேண்டும்? அப்படித்தானே? யார் அறிவார்! ....கழுகுப் பார்வை படைத்த வியாபாரிகள், நரியைப் போன்ற அரசியல்வாதிகள் - இவர்களின் பிடியிலே நாம் இருக்கிறோம். கலையில் தான் சுதந்தரம் இருக்கிறது; கனவு காணும் சுதந்தரம் அது. (சிலையை நோக்கி) என் அன்னையே! நீ வெறும் கற்பனைதான்; கனவுப் பொருள். தேசத்தின் படம், பூமி என்பன தம்முடைய சம்பந்தத்தால் உன்னைக் களங்கப்படுத்திவிடும். தேவி! உன்னுடைய உன்னதமான இடத்துக்கு என்னைத் தூக்கிச் செல்.

[சிலையை நமஸ்காரம் செய்கிறான். கோட்டு, அங்கவஸ்திரம், தலைப்பாகை இவற்றுடன் ஒரு கவிஞன் வருகிறான்.]

**கவிஞன்:** துக்கப்படுகிறாயே அப்பா! இந்தப் பெரிய திருநாள் உன்னுடைய சிரமத்துக்கு ஏற்ற பயனைத் தரவில்லையா? கூட்டிலிட்ட குயிலைப்போல நான் சிறையிலிருந்து பாடினேன். என் பாடல்களை ஆயிரக்கணக்கான மக்கள் வெளியிலே பாடினார்கள். நான் ஜனங்களுக்கு உகந்த கவி ஆனேன். நான் சிறையிலிருந்து வெளியிலே வந்தவுடன் தேசத் தலைவர்கள்கூட என்னிடம் கலந்து ஆலோசிக்கலாயினர். நீ நம்பமாட்டாய். பல இடங்களிலிருந்தும் ஐம்பது பத்திரிகைக்காரர்களுக்குமேல் சுதந்தர மலருக்கு என் கவிதை வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு நல்ல சம்மானம் கிடைத்தது. நாம் வாழ்வது பெருமை தங்கிய காலம், தம்பி. யாருக்குத் தெரியும்..... யாருக்குத் தெரியும்... நான் சுதந்தர இந்தியாவின் முதல் அரசவைக் கவிஞனாக ஆனாலும் ஆகலாம். இப்படித் துக்கத்துடனும் வெறுப்புடனும் இருக்கிறாயே, நீ யார்? நீ பிரதிஷ்டை செய்திருக்கிற உருவம் அழகாக இருக்கிறது. பெரிய நகரங்களின் சதுக்கங்களிலெல்லாம் இந்தியத் தாயின் சிலையை நிறுத்த வேண்டியிருக்கும். அரசாங்கங்களிடமிருந்தும் நகரசபைகளிடமிருந்தும் உனக்கு 'ஆர்டர்' வாங்கித் தரட்டுமா?

**சிற்பி:** (வேதனையுடன்) கவிஞரே, நீர்கூடவா இப்படிப் பேசுகிறீர்? நீர்கூட அந்த முரட்டாத்மாக்களுடனும் சுதந்தரத்தின் சுபிட்சத்தை அட்டைபோல உறிஞ்சுகிறவர்களுடனும் சேர்ந்துவிட்டீரா? உம்மைப்பற்றி உயர்வாக அல்லவோ நினைத்தேன்? வெற்றியினால் நீர் பின்னும் தூய்மையடைவீரென்று எண்ணினேன். தலை திரும்பிப் போகுமென்று நினைக்கவில்லையே! வானில் ஒளிரும் விண்மீன்களையெல்லாம் ஒரு பிடித்த பிடி வெள்ளிக் காசுகளுக்காகத் தத்தம் செய்துவிட்டீரே! அந்தோ! அப்படி நடக்கவேண்டுமென்பது நியதி போலும்! (தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு வேதனையோடு உட்காருகிறான்.)

**கவிஞன்:** (ரோசத்துடன்) என்ன! வாழ்க்கையையும் அதன் இன்பத்தையும் துறந்துவிட்ட சந்நியாசியாக அல்லவா இருக்கிறாய்? கவிஞன் சம்மானம் பெறுவது பாவமா? சிதறிய தேன் துளியை

உண்டுதான் அவன் ஜீவிக்கவேண்டுமோ? முட்டாள் மாதிரி பேசாதே, தம்பி.

சிற்பி: (எழுந்து) உம்மோடு கெட்டிக்காரனைப் போலப் பேசுவதைக்காட்டிலும் முட்டாளாக இருப்பதே நல்லது. உமது சிரமத்துக்கு ஏற்ற சம்மானம் பெறுவதில் எனக்கு ஆட்சேபம் இல்லை. அதே பேராசையாகப் பேசுகிறீரே, அதைத்தான் சொல்கிறேன்; கற்பனையை அடிமையாக்கி, அதன் தெய்விகச் சிறகுகளைக் கொய்கிறீரே, அதைத்தான் ஆட்சேபிக்கிறேன். என் கருத்தைத் தெளிவாகச் சொல்லத் தெரியவில்லை. வார்த்தைகள் என் வசப்படவில்லை. நானே என் வசமாக இல்லை. என்னைத் தனியே விட்டுச் செல்லும். (திரும்பிக் கொள்கிறான்.)

கவிஞன்: (கோபக் குறிப்புடன்) சௌக்கியமாய் இரு. உனக்குப் பிரியமில்லாதபோது இங்கே நின்றுகொண்டு உனக்குத் தொந்தரவு கொடுக்கமாட்டேன். (போகிறான்.)

சிற்பி: அன்னையே, தேவி, என்ன பாவம்! என்ன கொடுமை! எல்லோரும் சிறுத்தை, புலி, சிங்கம், நரி, காட்டுமிராண்டி வயிற்றிலே பிறந்த குட்டிகள், வனவிலங்குகள் ஆக இருக்கிறார்கள். இவர்களெல்லாம் உன்னுடைய மைந்தர்களாக எப்படி இருக்க முடியும்? தெய்விகத் தன்மையுடையவள் நீ, தேசு மிகுந்தவள் நீ, ஒளிக்கெல்லாம் இருப்பிடம் நீ, எல்லா இன்பத்துக்கும் உறைவிடம் நீ. உன் மைந்தர்களா இவர்கள்? சே! இல்லையென்று சொல், தாயே! வாயைத் திறந்து மொழிந்தருள்; இவர்கள் உன் சேய்களாக இருப்பது சாத்தியமா?

[தேவியின் திருவடியில் மரம் போல் விழுந்து மெய்ம்மறந்த நிலையில் இருக்கிறான். ஒரு நிமிஷம் இருளும் மௌனமும் நிலவுகின்றன. பிறகு மெல்ல மெல்லத் தேவியின் திருவுருவத்தின்மேல் ஒளி படர்ந்து நன்றாகத் தெரிகிறது. தேவி பேசத் தொடங்குகிறாள்.]



கம்யூனிஸ்ட்

தேவி: ஆம், இவர்கள் என் பிள்ளைகளே; என் ஊனுக்கு ஊனாகவும் என்புக்கு என்பாகவும் இருப்பவர்கள்.

சிற்பி: (மெல்லத் தலையை நிமிர்த்தித் தேவியைப் பார்க்கிறான்.) இவர்கள் உன் பிள்ளைகளாக இருந்தால் நம்பிக்கை எது? ஒளி எது? மகிழ்ச்சி எது? ஆரவாரம் எது?

தேவி: உள்ளத்திலிருந்து ஊற்றெடுக்கும் நம்பிக்கை உண்டு. கனவிடையே சிறிதும் ஊறின்றி நடக்கக் காரணமாகும் உறுதி உண்டு.

சிற்பி: (கையைத் தட்டி) அவற்றை எப்படி நிலையாக வைத்திருப்பது? தெய்விக உருவே, தெய்விக ஒளியே, சொல். எப்படி அவற்றை நழுவாமல் செய்வது?

தேவி: இவர்கள் யுகயுகாந்தரங்களாக என் பிள்ளைகளாக இருக்கிறார்கள். நேற்று முளைத்தவனே, எப்படி என் என்று கேட்கும் உரிமை உனக்கு இல்லை. ஆக்கு; நீ பார்ப்பாய். பார்; நீ ஆக்குவாய்.

சிற்பி: (கை குவித்து) நிஷ்களங்க சொரூபியே, வானுலகத் திருவுருவே, யுகங்கள் சென்ற காலத்தோடு கலந்து கடலில் இட்ட

சிறு கற்களைப் போல் மறைந்தன. இன்று திருநாளிலும் திருநாள். கோல் பிடிப்பவர் கூட்டத்திடையே, கோலெடாத கையினர் சிங்காதனத்தில் உள்ளனர். நிச்சயமாக இப்போது ஒரு மாறுதல் இருக்கவேண்டாமா?

தேவி: இருக்கவேண்டும் என்பது உண்மைதான் மைந்தா; ஆனால் பொய்யாக முடிந்த பல உதயங்களை நான் பார்த்துச் சில சில காலம் ஏமாந்து போயிருக்கிறேன். வயசு ஏற ஏற எனக்கு அறிவு அதிகமாகிறது. உதயத்தின் உண்மையைக் காலை நேரம் வந்தபிறகு நிச்சயிக்க வேண்டும். எல்லையற்ற சூன்யமான இடத்தை நான் அமைதியுடன் பார்க்கிறேன்; சுழன்றுகொண்டேயிருக்கும் உள்ளீடில்லாத காலத்தை நான் தொடுவதில்லை. நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்; வானத்து நட்சத்திரங்களிடையே நான் ஏகாங்கியாகப் பிரயாணம் செய்தபடி வாழ்கிறேன். என்றாவது ஒரு நாள் கலைஞனது கனவாகிய ஒளிமயப் பொய்கையில் திருமஞ்சன மாடுகிறேன்; உன் கனவில் ஆடினேனே அப்படி. குழந்தாய், என் வதனம் உன் உள்ளத்திலே தோற்றுவதைக் கண்டாய்; அதனால்தான் பரபரப்படைந்து அமைதியை நீ இழந்துவிட்டாய்.



கவிஞன்

சிற்பி: (கைகளை நீட்டி) ஆனால், தாயே, இன்று உண்மையில் பெரிய நாள் அல்லவா? புதிய உதயமாயிற்றே, புதிய ஆனந்தமாயிற்றே?

தேவி: அது சரி; சரியல்ல என்றும் சொல்லலாம். குழந்தாய், நான் இப்போது நிலத்தருகே வரலாம். அதனால் என் உயர்வு போகாது. ஏதோ ஒரு சுப முகூர்த்தத்தில் திடீரென்று அற்புதம் தானே நிகழுமென்று நீ காத்திராதே. தேசத்திலுள்ள அறியாமையாகிய பாறையைத் தகர்த்து அதன் ஆத்மாவை மறைத்திருக்கும் மண்மேட்டைப் பறித்து விடுகிற வரையில் எல்லா நாளும் ஒரு மாதிரிதான் இருக்கும். தொடுவானத்தைப் பார்த்துக்கொண்டே நட.

சிற்பி: (வேதனையும் ஆர்வமும் தோன்ற) தாயே, தொடுவானம் மேலே மேலே போகுமே; அப்போது என்ன செய்வது? இப்போது காணும் தொடுவானம் மற்றொன்றைக் காட்டி மறையும்; அதைப் பற்றினால் பின்னுமொன்றைக் காட்டி மறையும்; இப்படி ஒன்றைவிட்டு ஒன்று பற்றிக் கானலைத் தேடித் திரிவதா?

தேவி: கவலைப்படாதே, மைந்தா. புனிதத் தல யாத்திரையின் புகழ் உனக்குக் கிடைக்கட்டும்; வழி வகுத்து நடந்து பெறும் வீர மரணம் உனக்குக் கிடைக்கட்டும். தெய்வத்தை ஒத்த ஒன்றைத் தேடிச் சென்றால் நீயே தெய்வமாவாய். வழி நெடுகிலும் என் திருமுகம் உனக்கு உற்சாகமூட்டும்; உன் நாக்கு உலர்ந்து போகும்போது என் கை உனக்குக் குளிர்நீரை வழங்கும்.

சிற்பி: (முன்னாலே அடியிட்டு) ஆனால் தாயே, ஜகன்மாதா, உலகின் பிறப்பிடமே, இந்தக் களிமண்ணை, இந்தச் சிறுகண்டத்தின் மண்ணை எப்போது மாற்றி உருப்படச் செய்

வாய்? நாட்டின் மைந்தரும் பெண்களுமாகிய ஒவ்வொருவருடைய கண்ணிலும் உன் கண்ணொளி எப்போது ஒளிரும்? இந்தப் பழந் திருவடிவத்தை, இந்த மூலப் பேரழகை ஒவ்வொரு வீட்டுத் தொட்டிலிலும் வைத்துத் தாலாட்டிப் பாராட்டுவதை என்று பார்க்கப் போகிறோம்?



நமஸ்கரிக்கும் சிற்பி

தேவி: மைந்தா, அந்த நாளில் இந்தப் பூமி சுவர்க்கமாக மாறும்; மனிதன் தேவனாகிவிடுவான். அந்த நாள், திருநாளில் பெரிய திருநாள், இனியும் உதயமாகலாம். பொறுத்திரு; அந்த நம்பிக்கையால் ஊன்றி முயற்சி செய். தேசத்தின் பலஹீன உடம்பாகிய மாமிசத் தோண்டியிலிருந்து வானத்தின் எழில்வண்ணம் இனியும் உதயமாகி மலரலாம்.

சிற்பி: ததாஸ்து!

[தேவியின் திருவுருவம் மெல்ல மறைகிறது. சிற்பி நின்றபடியே கைகளை நீட்டிக் கொண்டு சிலையைப் பார்க்கிறான். தெய்வத் தோற்றம் அதனுள்ளே கலந்துவிடுகிறது.]

(திரை)

## எழிலின் வெற்றி

"எழில் என்பது சாரமற்ற ஒரு பொருள்; தானாக இயங்கும் வல்லமை அதற்கு இல்லை. அது ஒரு மாயம்; ஏமாற்றம். பலவீனங்களை மறைக்கும் திரை அது."

"இதென்ன, இப்படிச் சொல்கிறீர்களே? எழில் என்பது உலகத்தில் மிக உயர்வான ஒரு பேருண்மை. எழிலைப் பேராபத்தாக எண்ணி நம் நாட்டுப் பெரியோர்களும் புல்வர்களும் மனித வர்க்கத்துக்கே தீங்கிழைத்துவிட்டார்கள்.''

"ஐயா, தாங்கள் மயக்கத்தில் இருக்கிறீர்கள். மனிதர்கள் எப்போதுமே உடலழகை வழிபட்டுத்தான் வந்திருக்கிறார்கள். எழிலுக்குப் பகையாக விஷத்தைக் கக்கியவர்கள்கூட மனத்துக்குள்ளாக அதைப் போற்றிக்கொண்டே இருந்திருக்கிறார்கள். எழில் அவர்களைப் பரீட்சித்தபோதெல்லாம், அதுதான் அவர்களின் பெருந்தவத்தை வென்றிருக்கிறது. ஆயினும், எழில் வெறுமே புறக்கண்களைத்தான் கவர முடியும். ஞானிகளின் அகக்கண்களுக்கு முன்னால் அதற்கு எவ்வித மதிப்பும் இல்லை."

—'ரகசியம்'.

* * *

இலைகளினின்றும் உண்டாகிய புஷ்பத்துக்கும் இலைக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரந்தான் புஸ்தகத்துக்கும் பண்பட்ட உள்ளத்துக்கும்.

—கா. சி. வேங்கடரமணி.

# மாப்பிள்ளை ஐயாவின் திண்டாட்டம்

சசீந்திரநாத் அதிகாரி

* * * * * * * * * * * * *

**உலகம் புகழும் கவியரசர் என்ற முறையில்தான் ரவீந்திரரை நமக்குத் தெரியும். அவர் தம் ஜமீன் குடிகளோடு எப்படி நடந்து கொண்டார் என்பதை இதோ ஒரு சம்பவம் தெரிவிக்கிறது. 'கிராம வாசி ரவீந்திரர்' என்னும் நூலிலிருந்து எடுத்த ஓர் அத்தியாயத்தின் சுருக்கம் இது. பிரமத் சௌதுரி, ரதீந்திரநாத் டாகுர், நந்தலால் வசு ஆகியவர்கள் வாயிலாக அறிந்த விவரங்களைக் கொண்டு இதை ஆசிரியர் எழுதியிருக்கிறார். அவருடைய அநுமதி பெற்றது இந்த மொழிபெயர்ப்பு.**

* * * * * * * * * * * * *

மகாகவி ரவீந்திரநாதர் இலக்கியப் பணியில் அதிகமாக ஈடுபட்டிருந்த காலம் அது. ஐரோப்பா, அமெரிக்கா, சீனம், ஜப்பான் முதலிய தேசங்களில் சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டியும் இருந்தது. ஆகையால் தம் ஜமீன் காரியங்களைக் கவனித்துக்கொள்ளப் பாரிஸ்டர் பிரமத் சௌதுரி (இப்போது பிரபல கதாசிரியர்) என்பவரை அமர்த்திவிட்டுப் போனார். பிரமத் பாபு கவியரசரின் தமையனார் மாப்பிள்ளை. இந்தச் சமயத்தில் யாராவது ஜமீன் அலுவலாகத் தம்மிடம் வந்தால் கவி, "மாப்பிள்ளை ஐயாவைப் போய்க் கேட்டுக்கொள்ளுங்கள்" என்று சொல்லிவிடுவார்.

சிலாயிதஹ் ஜமீனில் சில நிலங்களைக் குடிகளுக்குக் குத்தகையாக விடுவது வழக்கம். சிலர் ஆத்திரப்பட்டு அதிகத் தொகைக்கு ஏலம் எடுப்பார்கள். முதலில் கொஞ்சம் பணம் செலுத்தி மீதியை அறுவடையானதும் கட்டலாம். எல்லா நிலமும் ஒரே மாதிரி இருக்குமா? சில பேர் வாசி நன்றாக விளையும்; சிலர் அதிருஷ்டம், ஒன்றுமே கைக்குக் கிட்டாது. இப்படி நஷ்டப்பட்டவர்கள் ஜமீன்தார் கை காலைப் பிடித்துக் கெஞ்சிக் குத்தகைப் பணத்தை வஜா செய்யும்படி வேண்டிக்கொள்வார்கள். லாபம் அடித்தவர்கள் சில பேர்கூட இப்படி வந்து ஏமாற்றப் பார்ப்பார்கள். இவ்வளவு பெரிய ஜமீனில் இவைகளையெல்லாம் கவனிப்பதென்றால் லேசான காரியமல்ல. இத்தனை காலமாக ரவீந்திரரே இந்தப் பொறுப்பை ஏற்றுத் தண்டக் கணக்குவழக்குகளைத் தீர்ப்பது வழக்கம். அதற்குப்பின் 'புண்ணிய நாள்' கொண்டாடுவார்கள். அன்று ஜமீன்தாரும் குடிகளும் கலந்து பழகுவார்கள்; விருந்து நடக்கும்.

இம்முறை 'புண்ணிய நாளு'க்குப் பத்துப் பன்னிரண்டு நாட்களுக்கு முன் மாப்பிள்ளை ஐயா பெரிய பல்லக்கில் வந்து இறங்கினார். ஜமீன் மாளிகையில் மலைபோல் குவிந்து கிடந்த தஸ்தாவேஜுகளைப் பார்த்ததும் பிரமித்துவிட்டார். காரியம் இவ்வளவு பிரமாதமாக இருக்கும் என்று அவர் எண்ணவே இல்லை. ரவீந்திரரும் அதே சமயம் படகு மார்க்கமாக அங்கே வரப்போவதாகத் தந்தி கிடைத்தது.

அவரை வரவேற்கத் துறையில் குடிகள் கூடிவிட்டார்கள். ஜமீன் மாளிகை வாசலிலும் ஏராளமாகக் கூட்டம். மாப்பிள்ளை ஐயாவுக்கோ ஒன்றுமே புரியவில்லை. இருந்தாலும் தஸ்தாவேஜுகளைப் பரிசிலனை செய்வதில் கவனம் செலுத்தினர். இன்னும் இரண்டு மூன்று தினங்கள் கழித்து அவர்கள் குறைகளைக் கவனிப்பதாகப் பிரமத் பாபு குடிகளுக்குத் தெரிவித்துவிட்டார். ரவீந்திரர் மேல்மாடியில் வந்து நின்றதும் எல்லோரும் வணங்கினர்கள். அவரும், "மாப்பிள்ளை ஐயா எல்லாவற்றையும் சரியாகப் பார்த்துக் கொள்வார்" என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்.

மாப்பிள்ளையோ கொஞ்சம் கொஞ்சம் பேராக வரவழைத்து அவர்கள் வாக்குமூலத்தை வாங்கிக் கொண்டார். ஆனல் உத்தரவு பிறப்பிக்கவில்லை. ஜனங்கள் வெளியே வந்ததும், "இதென்ன, இப்படி ஒன்றும் சொல்லாமல் சும்மா அனுப்பிவிட்டாரே!" என்று பேசிக் கொள்ளலானர்கள். சில பேர் குத்தகைப் பண வஜா விஷயமாகவும், சிலர் வேறு ஏதோ குறை சம்பந்தமாகவும், சிலர் ஏற்கனவே 'டிக்ரீ' ஆகிவிட்ட தொகையைப் பற்றியும் புகார் செய்துகொண்டார்கள். இதில் எதை, எப்படித் தீர்ப்பது என்பதுதான் சங்கடமாக இருந்தது. நடுக்கடலில் சிக்கியவன்போல் தத்தளித்தார் மாப்பிள்ளை ஐயா! இந்த நிலையில் உத்தரவு எப்படிப் பிறப்பிக்க முடியும்?

சின்ன மாமனரிடம் கேட்கலாம் என்று மேல்மாடிக்குப் போனலோ அவர் (கவியரசர்) இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். வேறு கவனமாக ஏதோ இரண்டொரு வார்த்தை பேசினரே தவிரத் தெளிவாக ஒன்றும் சொல்லவில்லை. பிரமத் பாபுவுக்கு, "மனுஷர் வேணுமென்றே நம்மை ஆட்டிவைத்து வேடிக்கை பார்க்கிருர்; மாயாவி!" என்று பட்டது. ஜமீன் காரியஸ்தர், குமாஸ்தா முதலியவர்களுடன் கலந்து பேசிப் பார்த்தார். முன்னே ஒரு தரம் கவியின் தந்தை இறந்தபோது அப்படித் தள்ளுபடி செய்திருக்கிற சங்கதி தெரியவந்தது. அப்புறம் இந்த மாதிரிச் சிக்கல் எதுவும் ஏற்பட்டதில்லை. ஆகவே, ரவீந்திரரைக் கேட்டால்தான் விஷயம் தெரியும். ஆனல் அவரோ தம் தலையில் இதைப் போட்டுவிட்டு ஹாய்யாக இருக்கிருர். பிரபல பாரிஸ்டர் பிரமத் பாபு இப்படித் திணறிக் கொண்டிருந்தார்!

'புண்ணிய நாளு'க்கு இரண்டு நாட்களுக்கு முன் சாயங்காலம் ரவீந்திரர் ஆற்றங்கரையோரம் உலாவச் சென்றிருந்தார். அப்போது சில குடிகள் அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். "என்ன சமாசாரம்?" என்று கவி விசாரித்ததும் அவர்கள், "நாங்கள் எங்கள் குறைகளைச் சொல்லியும் மாப்பிள்ளை ஐயா உத்தரவு கொடுக்காமல் சும்மா இருக்கிருரே!" என்று முறையிட்டுக்கொண்டார்கள். ரவீந்திரர் யோசனையில் ஆழ்ந்தார். மனித சுபாவம் அவருக்கு நன்ருகத் தெரியும். ஜமீன் உத்தியோகஸ்தர்களின் சங்கதியைக் கவனித்திருக்கிருர் அல்லவா? அந்தச் சுழலில் அகப்பட்டுக்கொண்டு மாப்பிள்ளை அவதிப்படுகிருர் என்று அறிந்துகொண்டார். "நாளைக் காலை எல்லோருமே வாருங்கள். நானே இருந்து உங்கள் குறைகளைக் கவனிக்கச் சொல்கிறேன் மாப்பிள்ளை ஐயாவிடம்" என்ருர். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் அவர்

சொன்னபடி காலையில் வந்து ஆஜரானார்கள்.

மறுநாள் காலை எழுந்ததுமே கவியரசர் பிரமத் பாபுவைக் கூப்பிட்டார்; "இன்னும் வஜா என் பண்ணவில்லை? ஏதாவது சிக்கல் இருக்கிறதா?" என்று கேட்டார். ஒரு வாரமாகத் தவித்துக்கொண்டிருந்த மாப்பிள்ளை ஐயாவுக்கு இப்போது தான் கரை தென்பட்டதுபோன்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவர் தஸ்தாவேஜுகளையும் வாக்கு மூலங்களையும் கவியிடம் கொண்டுவந்து காண்பித்து விவரமாக எல்லாவற்றையும் சொன்னார். பிறகு ரவீந்திரர் நிதானமாகவும் தெளிவாகவும், எப்படிச் செய்தால் ஜமீன்தாருக்கும் சரி, குடிகளுக்கும் சரி, திருப்தி ஏற்படுமோ அந்த முறையையெல்லாம் எடுத்துக் கூறினார். பிரமத் பாபுவுக்கு அப்போதுதான் கவியரசரின் அபார அநுபவமும் திறமையும் தெரிந்தன. ஜமீன் காரியஸ்தரும் குமாஸ்தாக்களுங்கூட, "இன்னும் எவ்வளவோ விஷயம் பாபுவிடத்தில் நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது!" என்று அடக்கமாகச் சொன்னார்கள்.

குடிகள் கீழே காத்துக்கொண்டிருந்தார்கள். அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. ஜமீன்தார் பாபு மேல்மாடியிலிருந்து இறங்கி வந்து குடிகளோடு ஒருவராக நின்று கொண்டார். அவர் முகத்தில் ஓர் அபூர்வப் புன்னகை தவழ்ந்தது. கண்களில் குதூகலம் தாண்டவமாடியது. "எல்லோரும் மாப்பிள்ளை ஐயாவிடம் போங்கள்; இனிமேல் அவர் கவனிப்பார், பாருங்கள்; கவலைப்படவேண்டாம். நானே முன்னே இருந்து ஒவ்வொருவர் குறையையும் தீர்த்து வைக்கும்படி செய்கிறேன்" என்று சொல்லிவிட்டுக் காவற்காரர்களை நோக்கி, "யாரையும் திட்டவோ அடிக்கவோ கூடாது தெரிகிறதா? ஒவ்வொருத்தராக உள்ளே விடுங்கள்" என்று உத்தரவிட்டார்.

இப்போது மாப்பிள்ளை ஐயா மடமடவென்று எல்லோர் பிராதையும் தீர்த்துக்கொண்டே போனார். கவிதாமே வாயிற்படி அருகில் நின்றுகொண்டு, "இப்போது நீ போ!", "அப்புறம் நீ" என்று ஒவ்வொருவராக அனுப்பிக்கொண்டே வந்தார். எல்லோரும் அவரவர்கள் குறை தீர்ந்து சிரித்த முகத்தோடு திரும்பி வந்தார்கள். மாப்பிள்ளை ஐயா ஜமீன்தாராகவும், 'பெரிய ஐயா' குடிகளின் சார்பாக உழைக்கும் தனிப்பட்ட ஒருவராகவும் மாறிய அந்த அற்புதக் காட்சியை என்னவென்று வர்ணிப்பது!

அந்த முறை 'புண்ணிய நாளை' எல்லோரும் வெகு உற்சாகமாகக் கொண்டாடினார்கள். இப்போதுகூடப் பழைய குடிகள் சிலர் இந்தச் சம்பவத்தைப் பற்றிப் பேசி, ரவீந்திரருடைய மேலான குணத்தை எண்ணி ஆச்சரியப்படுவது உண்டு.

**கடன் வாங்கப் போகிறவனுக்குத்தான் பணத்தின் அருமை தெரியும்.**

* * *

**சந்தேகம் வரும்போது உண்மையைச் சொல்லிவிடு.**

# சொல் பொருந்துமா?

கீழே வரும் சொற்களைப் பலர் உபயோகப்படுத்துகிறார்கள். பல சமயங்களில் அவை பொருத்தமாக அமைவதில்லை. தனியே கொடுத்துள்ள வார்த்தைகளில் பொருத்தமானவற்றைப் பின்னே கொடுத்துள்ள வாக்கியங்களில் பொருத்திப் பாருங்கள்.

**வார்த்தைகள்:**

1. பாராட்டுதல்
2. வாழ்த்துதல்
3. புகழ்தல்

**பொருத்த வேண்டிய வாக்கியங்கள்:**

(க) அரசன் வீரம் அந்தப் போரில் வெளிப்பட்டது கண்டு அவன் பெருமைகளையெல்லாம் எடுத்துப் புலவர்.......

(ங) மாணக்கன் இவ்வளவு குறுகிய காலத்தில் இலக்கணத்தைத் தெரிந்து கொள்ளும்படி செய்த ஆசிரியரை....த்தான் வேண்டும்.

(ச) நெடுங்காலம் இந்த உலகத்தில் இருந்து தொண்டு புரிய வேண்டுமென்று ...னார்கள்.

**வார்த்தைகள்:**

4. அரை
5. அறை

**பொருத்த வேண்டிய வாக்கியங்கள்:**

(ஞ) என்ன இருந்தாலும் இவ்வளவு துணிச்சலாகக் கன்னத்தில் ...ந்திருக்கக் கூடாது.

(ட) ...யில் வேட்டி இருப்பதும் இல்லாததும் தெரியாமல் வேறு கூத்தாடினால், அவனைப் பைத்தியமென்று சொல்லாமல் என்ன சொல்வது?

(ண) ....யுங் குறையுமாகச் செய்துவிட்டுக் கூலியைக் கொண்டா என்று கேட்கிறாயே, இது நியாயமா?

(த) அரிசிச் சோறு சமைக்க ஆகாவிட்டால் ...த்து மாவாக்கி உப்புமாப் பண்ணிச் சாப்பிட வேண்டியதுதான்.

**வார்த்தைகள்:**

6. அவசரம்
7. ஆத்திரம்

**பொருத்த வேண்டிய வாக்கியங்கள்:**

(ந) அவன் செய்த குற்றத்தை நினைந்து ...துடன் ஓடினான்.

(ப) என்னதான் சொல்லுங்கள், எந்தக் காரியத்தையும் ...ப்பட்டுச் செய்தால் சீர்குலைந்துதான் போகும்.

**வார்த்தைகள்:**

8. அவா
9. ஆர்வம்
10. ஆவல்

**பொருத்த வேண்டிய வாக்கியங்கள்:**

(ம) ஊராருடைய சொத்தெல்லாம் தனக்கே வரவேண்டுமென்ற ...உடையவனுக்குக் கடவுள் அருள் எளிதில் கிட்டாது.

(ய) குழந்தையைப் போய்ப் பார்க்கவேண்டும் என்ற ... தாய்க்கு இருப்பது இயற்கைதானே?

(ர) தமிழில் ...இருக்கிறதென்று சொன்னால் திருக்குறளைப் படிக்க ஏன் யோசிக்கிறீர்கள்?

(ல) என்னுடைய நண்பனுக்கு நான் நன்மை பெற வேண்டும் என்பதிலுள்ள ...அளவிட முடியாதது.

[விடை 67-ஆம் பக்கம் பார்க்க]

# சித்தார்த்தன் துறவு

மகாகவி அசுவகோஷர்

**மகாகவி அசுவகோஷருடைய ‘புத்த சரிதம்’ என்ற மகாகாவியம் பிற்காலத்துக் கவிகள் பலருக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறது. அந்த மகோன்னதமான காவியத்தின் முக்கியப் பகுதியை இங்கே சுருக்கமாகத் தந்திருக்கிறோம். இதிலிருந்தே அசுவகோஷருடைய கற்பனை வளமும் வர்ணனைத் திறமும் நன்கு விளங்குகின்றன.**

சிறிது நேரத்திற்கெல்லாம் உலகத்திற்கே கண்ணாகிய கதிரவன் உதித்தான். அப்பொழுதுதான் சித்தார்த்தன் தான் சேர்ந்த இடம் பார்க்கவரின் ஆசிரமம் என்று உணர்ந்தான். அங்கே அமைதியாக உறங்கும் மான்களையும் கவலையற்று வாழும் பறவைகளையும் பார்த்த சித்தார்த்தனின் உள்ளம் குளிர்ந்தது. அவன் களைப்புத் தீர்ந்தது. குதிரையிலிருந்து கீழே இறங்கிக் குதிரையை அன்போடு தட்டிக்கொடுத்தான். தன்னைப் பின்தொடர்ந்து ஓடி வந்த சந்தனை அன்பு பொழியும் கண்களால் பார்த்துச் சொல்லலானான் :

“அப்பா, சந்தா, இந்தக் குதிரை கருடன்போல் வேகமானது; என்னிடம் உள்ள பக்தியால் அன்றோ இதைப் பின்தொடர்ந்து வந்தாய்! நான் பெரும் காரியம் ஒன்றில் மனத்தைப் பறி கொடுத்திருந்த போதிலும் உன்னை மறக்கமாட்டேன். உன்னைப் போன்ற சேவகர்கள் கிடைப்பது அரிதிலும் அரிது. சிலருக்கு எஜமானனிடம் பக்தி இருக்கும். ஆனால் உதவி செய்யத் திறமை இராது. சிலருக்குத் திறமை இருக்கும்; பக்தி இருப்பது கஷ்டம். இரண்டும் உன்னிடம் குடிகொண்டிருக்கின்றன. பற்றுதல் இழந்த என் மனத்திற்குக்கூட உன்னிடத்தில் பற்று உண்டாகிறது.

“நீ ஒரு பயனையும் கருதாமல் என்னிடம் அன்பு பாராட்டுகிறாய். உலகில் குலத்திற்காகப் பிள்ளையை வளர்க்கிறார்கள். தன்னைப் போஷித்துக் காப்பதற்காகப் பிள்ளை தகப்பனை நேசிக்கிறான். இவ்விதம் ஒன்றுக்கு ஒன்று ஆசையால் கட்டுண்டு கிடக்கிறது. உன்னைப் போல் காரணமற்ற பந்து கிடைக்க மாட்டான். எனக்கு மிகவும் பிரியமான காரியத்தை நீ செய்துவிட்டாய். நான் விரும்பிய காட்டிற்கு வந்துவிட்டேன். குதிரையை ஓட்டிக்கொண்டு திரும்பிவிடு” என்று கூறிக்கொண்டு சித்தார்த்தன், தன் ஆபரணங்களைக் கழற்றி அவனிடம் கொடுத்தான். தன் சிரசில் அணிந்த மாணிக்கத்தை எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு சொல்லலானான் :

“சந்தா, இந்த மாணிக்கத்தை எடுத்துக்கொண்டுபோய் அரசரிடம் கொடுத்து அவரிடம் நீ, ‘கிழத்தன்மையையும் மரணத்தையும் ஒழிப்பதற்கே காட்டிற்கு வந்தேன். சுவர்க்க சுகத்தில் ஆவல் கொண்டோ, தங்களிடம் அன்பில்லாமலோ, கோபம் கொண்டோ நான் நாட்டைத் துறக்கவில்லை. ஆகவே என்னைக் குறித்து வருந்தவேண்டாம். நாம் எவ்வளவு நாள் சேர்ந்திருந்தாலும் பிரிவு ஒரு நாள் நிச்சயம். என் மனமோ

மோக்ஷத்தை நாடுகிறது. வருத்தத்தை விடுவதற்காக வெளி வந்த என்னைக் குறித்து வருந்துவது சரியல்ல. பணத்திற்காக எவ்வளவோ பந்துக்கள் கிடைப்பார்கள். தர்மம் செய்யப் பந்துக்களோ மிகவும் துர்லபம். இல்லை என்றுகூடச் சொல்லிவிடலாம். நான் சிறு வயதில் வந்துவிட்டேன் என்று கூட வருந்த வேண்டாம். உயிர் சஞ்சலமாக இருக்கும்பொழுது தர்மத்திற்கு அகாலம் என்பது கிடையாதல்லவா? எல்லாக் காரியத்திற்கும் இடையூருக மரணம் காத்திருக்கும்போது வாழ்வை நம்புவது மதியீனம்' என்று கூற வேண்டும்.

"சந்தா, நீ இவ்விதம் அரசரிடம் சொல்லி அவர் என்னை மறந்துவிடச் செய். என்னிடம் இல்லாத துர்க் குணங்களைச் சொல்லியாவது அவரை வருந்தாமல் இருக்கச் செய்" என்று சித்தார்த்தன் சொல்லி முடிக்கவும், சந்தன் மிகவும் வருத்தத்தோடு கை கூப்பிக்கொண்டு எஜமானனை வேண்டத் தொடங்கினுன்: "அரசே, தங்களுடைய இக்கொடிய நிச்சயம் கல்நெஞ்சையும் கரைத்துவிடும். அன்பினுல் கனிந்த உள்ளத்தைப் பற்றிக் கேட்பானேன்? அரசர் பிள்ளையிடம் மோகம் கொண்டவர். அன்பே உருவானவர். வயது முதிர்ந்தவர். நாஸ்திகன் தர்மத்தை விட்டுவிடுவது போல அவரை விடுவது சரியல்ல. நன்றி கெட்டவன் உபகாரத்தை மறப்பதுபோல் நீங்கள் தாயை மறப்பதும் முறையல்ல. வருத்தமுற்றவன் புகழை அலக்ஷ்யம் செய்வதுபோல் நீங்கள் ராகுலனைக் கவனியாமல் உதறுவதும் தர்மமா? காட்டில் உங்களை விட்டுக் கொதிக்கும் மனத்தோடு நான் எப்படி நகரம் செல்வேன்? அரசரிடமும் அந்தப்புரத்திலும் நான் தகுந்த பதிலை எப்படிச் சொல்ல முடியும்? உங்களைப்பற்றிக் குறை கூறச் சொன்னீர்கள். நான் எப்படி இல்லாததைச் சொல்வேன்? நம்புகிறவர் யார்? சந்திரனிடம் உஷ்ணம் இருப்பதாகக் கூறினுல் நம்புகிறவர் உண்டா? ஆகவே, தயை செய்து வீட்டிற்குத் திரும்புங்கள்" என்ருன்.

இப்படி வருத்தமுற்றுச் சந்தன் கூறிய சொற்களைக் கேட்டுச் சித்தார்த்தன் சிறிதும் கலங்கவில்லை. மீண்டும் உண்மையை விளக்கி அவனைப் போக வேண்டினுன். "சந்தா, வீணுக வருந்தாதே. நான் மோக்ஷத்தை விரும்பி உங்களை விடவில்லை என்றே வைத்துக்கொள். ஆகிலும் சாவு நம்மைப் பிரிக்காமல் விட்டுவிடுமா? இலைகளுக்கு உடன் பிறந்த நிறங்கூட மாறிவிடுகிறதே. மற்றவரின் பிரிவைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? நீ போ. நான் மரணத்தையும் வென்றுதான் வீடு திரும்புவேன். வெற்றி கிடைக்காவிட்டால் காட்டிலேயே இறந்தாலும் இறப்பேன். இது என் தீர்மானம்" என்ருன்.

சந்தனிடம் இப்படிக் கூறிய சொற்களைக் கேட்டுக் கந்தகன் என்ற குதிரை சித்தார்த்தன் திருவடிகளை நாவினுல் நக்கிப் பெருமூச்சு விட்டது. அதன் அன்பை உணர்ந்து, "நீ என்னை இங்கே சுமந்து வந்தது எனக்குப் பேருதவி. அதன் பயன் உனக்குத் தாமதியாமல் கிடைக்கும்" என்று கூறிக்கொண்டே உறையிலிருந்து மணிவாளை உருவித் தன் நீண்ட முடியைக் கிரீடத்துடன் அறுத்துக் கீழே தள்ளினுன். அங்க வஸ்திரத்தையும் அணிகளையும் கழற்றி ஆகாயத்தில் எறிந்தான். தேவர்கள் இதைக் கண்டு ஆனந்தக் களிப்புற்று அவனை வாழ்த்தினர்.

எழுத்தும் படிப்பும் தெரியாத கிராம மக்கள் சில சமயம் அற்புதமான கவிதையை இயற்றிவிடுகிறார்கள். அதுதான் நாடோடிப் பாட்டு. பிஹார் மாகாணத்திலே வாழும் மக்களின் பல வித உணர்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன—

# பிஹார் நாடோடிப் பாட்டுக்கள்

மாயா குப்த

விவாகம்: பிஹாரில் விவாக காலத்திலே பெண்களிடையே வழங்கும் சில நாடோடிப் பாடல்கள் கருத்து அமைந்தவை; உள்ளத்தையும் கவரும் தன்மை உடையவை. இப்போது காலம் முன்னேறியிருப்பதற்கேற்ப மனிதர்களுடைய ருசியும் மாறியிருக்கிறது. இருந்தாலும் நாடோடிப் பாட்டுக்களில் மாறுதல் அதிகமாக ஏற்படவில்லை. இதனால் இக்காலத்தவருக்கு அவற்றின் பாவத்தை அவ்வளவாக ரஸிக்க முடிகிறதில்லை. கண்ட பேர் தமக்குத் தோன்றினபடி இவைகளைப் பாடுவதால் அர்த்தம் சில சமயம் அனர்த்தமாகிவிடுகிறது. இந்த விஷயத்தில் பாட்டிமார்களை நாம் போற்றவேண்டும்; அவர்கள் பழைய ரீதி கெடாதபடி ஜாக்கிரதையாகப் பாடுகிறார்கள்.

விவாகக் காட்சியை வர்ணிக்கும் ஒரு பாடல் இது:

காட்டுமூங்கில் கொண்டுவந்து
கலியாணப் பந்தலிட்டு
நாட்டியுள்ள தோரணத்தில்
நயமான அன்னம்ஆட
ஆட்டினள வாகச்செய்த
ஆனைகள்நிற் கச்சாணம்
போட்டுமுற்றம் மெழுகப்பெற்றுப்
பொலிவோடு விளங்கியதே!
மருமகனும் பந்தலின்கீழ்
வந்துதான் அமர்ந்தவுடன்
அருமையான கன்னிதனை
அலங்காரம் செய்தங்கே
விருப்புடனே அழைத்துவந்து
வீற்றிருக்கச் செய்தனரே;
பருவமகள் நெற்றிதனில்
பொட்டிட்டுப் பார்த்தனரே.

—இப்படி மண்யானை செய்து வரிசையாக விவாகப் பந்தலின் கீழ் வைப்பது அங்கே வழக்கம். அந்தக் காலத்தில் ராஜ மாளிகைகளில் இப்படி யானைகளை நிறுத்தியிருப்பார்கள். அதைப் பின்பற்றிச் சாதாரண மக்கள் இப்படிச் செய்தும் இருக்கலாம்; அல்லது சுப காரியத்துக்கு யானை நம் நாட்டிற்கு உகந்த ஜந்து என்ற காரணத்தாலும் இருக்கலாம்.

வேறொரு பாட்டில் ராமாயணத்தைப்பற்றிய குறிப்பு ஒன்று காணப்படுகிறது. பல பாடல்கள் இப்படி இதிகாசக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன.

ஏங்கிநின்றாள் கன்னிகையும்
இளவேனில் வந்தவுடன்;
பாங்குடைய வரன்தேடிப்
பெற்றோரும் அலைதல்கண்டு,
'தாங்காணக் கரியரென்றே
தயங்காமல் அயோத்திக்கு
நீங்கள்சென்று ரகுவரனை
நிச்சயந்தான் செய்யும்'என்றாள்.

காப்பிரைட்: பிரபாஸி (வங்காளி: அக்டோபர், '46),
120/2, அப்பர் ஸர்க்குலர் ரோட், கல்கத்தா.

இதுபோலவே சிவபெருமானைக் குறித்தும் சில பாடல்கள் உள்ளன:

மணப்பெண்:
**புலியின்தோல் ஆடையாகப்**
**புறப்பட்டே காளைமீது**
**சலியாமல் ஏறிமகா**
**தேவன்வர, "யாரிங்கே**
**கலியாணப் பிள்ளையெனக்**
**கொண்டுவந்தீர் சொல்லும்இங்**
**பலிதேரும் பித்தன்தனை?- [தப்**
**பகைவர்நீர்!" என்றழுதாள்.**

அதற்குத் தாய்:
**அருங்குழந்தாய்! கேளாய்நீ!**
**அதிகாலை எழுந்தேநான்**
**வருத்தும் பனியுடைய**
**மாசிதனில் நீராடி**
**'உருவத்தில் நாரணன்போல்**
**உன்புருஷன் இருக்க'என**
**விருப்பமிகப் பாடுபட்டேன்**
**விதியையார் வெல்வதம்மா?**

**பொன்னைத்தா னங்கொடுக்கப்**
**பாவாய்! முடிந்திருந்தால்**
**மன்னன் மகன்போல**
**மருமகனும் கிடைத்திருப்பான்.**
**கன்னல் மொழி!முறத்தில் [டாய்!**
**கொண்டுவந்தே பிச்சையிட்**
**இன்னவன்தான் கிடைத்திட்டான்**
**இதுமுன்செய் வினையென்றாள்.**

பிறகு மணமகள் முக்காட்டை விலக்கி வரனைக் காண்கிறாள். பொன்மேனி இளங்குமரனாக அவன் காட்சியளிக்கிறான். அவன் கிழவன் அல்ல என்று பெண் அறிந்ததும், வரனைத் தேடிவந்த பிராம்மணனுக்குப் பொருள் கொடுக்க முன் வருகிறாள். தந்தையின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கிறாள்.

இந்தப் பாடல் ஒருவேளை மணப்பெண்ணுக்கு ஆறுதல் அளிக்கவோ, நம்பிக்கையூட்டவோ ஏற்பட்டிருக்கலாம்; அல்லது வெளிப்பார்வைக்கு விகாரமாக இருக்கும் வஸ்துவில்தான் உண்மையில் இனிமை பொதிந்திருக்கிறது என்பதை அறிவுறுத்தவும் உண்டாகியிருக்கலாம்.

பிஹாரில் இன்னுங்கூடப் பால்ய விவாகம் சில இடங்களில் நடந்து வருகிறது. அந்த மாதிரி ஒரு விவாகப் பந்தலுக்கு அருகில் ஒரு பள்ளம் தோண்டி, கைகால் கழுவிக் கொள்ள அதில் ஜலம் நிரப்பியிருக்கிறார்கள். மணமகன் உட்கார்ந்ததும் பச்சைக்கிளி ஒன்று அவன் கையில் வந்து அமர்கிறது. அப்படி இருக்கும் மருமகனைக் கண்டு மாமி,

**"என்றனுக்கு வாய்த்தானே,**
**இப்படியோர் மருமகனும்;**
**தன்கையில் கிளியேந்தித்**
**தானும் மணமகள்போல்"**
**என்றதுமே ரோஷமுடன்,**
**"எனக்கிந்தப் பறவைஏன்?**
**சென்றதுபார் காட்டிற்கே"**
**என்றதனைப் பறக்கவிட்டான்.**

வரன் குழந்தையாக இருந்தால் தானே மாமி இப்படி உரிமையுடன் பேச முடியும்? வயதான மருமகனிடத்தில் இவ்வளவு துணிச்சலாக எப்படிப் பேசுவாள்!

பெண் புக்ககம் போதல்: எந்தத் தேசத்திலும் பெண் புருஷன் வீடு செல்லும் காட்சி உருக்கமாக இருக்கும். அதை வருணிக்கும் ஒரு பாடல் பின்வருமாறு:

**பதுமமலர் வாடிப்போச்சு!**
**பொழுதுமிகச் சாய்ந்துபோச்சு!**
**மதுப்பொழிகிற நிலவெழுந்தது!**
**மாலைவேளை மங்கலாச்சு!**
**வதுவுடனே வீடுசெல்ல**
**மணமகனும் ஆவல்கொள்ள,**
**புதுமையான பச்சைநிறப்**
**பல்லக்கேறிப் பெண்புறப்பட,**

அங்கே கூடிநின்ற பெற்றோரும் சுற்றமும் அவளை வழியனுப்புகிறார்கள். பல்லக்கின் பின்னால் வெகு தூரம்வரையில் வீட்டுப் பசுவும்

தமையனும் தொடர்ந்து வருவதைக் கண்டு மணப்பெண்:

"போய்வா, அண்ணே வீட்டுக்கு,
பசுவையும் இட்டுச்செல்.
தாய்தானும் அவ்விடத்தில்
தனியே கிடந்திடுவாள்"

என்றும்,

"அயல்வீடு புகுவதுதான்
அழகாகும் பெண்களுக்கு.
வயல்வீடு வாசலுடன்
வாழ்வதுதான் உனக்கழகு"

எனவும் சொல்லியனுப்புகிறாள்.

"அருமை மகளேஎங்கே
உன்னை அனுப்பினேனே?
வருவையோ என்றனது
மனங்குளிர மறுபடியும்?"

என்று வீட்டில் தாய் கதறியழ,

"சேரிடம்போய்ச் சேர்ந்தாளவள்
சிந்தை கலங்குவதேன்?"

என்று அண்டை வீட்டுக்காரி ஆறுதல் கூறுகிறாள். இருந்தாலும் தாயுள்ளம் கேட்கிறதா?

**பிள்ளைப்பேறு:** கடைசியாக மாமியும் மருமகளும் வீட்டில் தத்தம் அதிகாரத்தை நிலைநாட்டப் பார்க்கும் காட்சியை வர்ணிக்கும் ஒரு பாடலில் சற்றுக் கீழ்த்தரமான ஹாஸ்யம் இருப்பினும் எடுத்துரைக்க வேண்டியது அவசிய மாகும். பெரும்பாலும் புருஷர் நடமாட்டமிராத பின்கட்டில் அக்கம் பக்கத்துப் பெண்கள் எல்லோரும் கூடிப் பரிகாசம் பண்ணிப் பாடும் பாட்டு இது.

மாமி தான் கண்கொட்டாமல் கவனித்து வந்தும் மருமகள் கர்ப்பவதியானதைக் கண்டு,

"மருமகளே! மருமகளே!
மோசக்கார மருமகளே!
கருப்பவதி யானதெப்போ?
குழந்தைதந்த திருடன்எதோ?"

என்று கேட்கிறாள். அதற்கு மருமகள்,

"மாமியாரே! மாமியாரே!
வலைஒன்று பின்னித்தாரும்.
நாமினிமேல் கள்வன்தனை
நடுங்காமற் பிடித்திடலாம்"

என்று சொல்கிறாள். இரவு வெகு நேரமானதும் வண்டு தேனை நாடி வருகிறது. பெண்ணின் வலையில் பிள்ளையாண்டான் சிக்குண்டதும் வெட்கங்கெட்ட அந்த மருமகள் மாமியை அழைத்து,

"பிள்ளைதந்து சென்றவனைப்
பிடித்துவிட்டேன் மாமியாரே!
கள்ளத்தனம் செய்தபயல்
கையதனில் சிக்கிவிட்டான்"

என்று கூவுகிறாள். உடனே மாமி வந்து அங்கே தன் மகனைக் கண்டு வெட்கமும் கோபமுங்கொள்கிறாள். தாய்க்குப் பிள்ளைமேல் அதிகாரம் இனிப் போய்விடுமோ என்ற திகில். இளமருமகள் அவன் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டாள்; பிள்ளை பெற்றதும் அவளுக்கு அந்த வீட்டில் இதுவரையில் இராத உரிமை ஒன்று ஏற்பட்டுவிடுகிறதல்லவா?

## மானும் கலையும்

அமுதகவிராயர் என்பவர் சேதுபதியைப் பாடிப் பரிசு பெற்றார். சேதுபதி மன்னர் அவருக்கு மானூர் என்ற ஊரை மானியமாக விட்டார். புலவர், "இந்த மானுக்குக் கலை வேண்டாமா?" என்று கேட்டார். உடனே சேதுபதி, "அதுவும் உண்டு" என்று சொல்லிக் கலையூர் என்ற ஊரையும் புலவருக்கு வழங்கினாராம்.



# நகைச்சித்திரம்



“கண்ணேல்லியோ, கொஞ்சம் பொறு. அம்மாவைச் சமாதானம் பண்ணிப்புட்டு, ஒன் கிட்ட வறேன்.”

—மனோஹர்.



“ஆத்திலே தண்ணி எவ்வளவு இருக்குது?”

“நான் குடிச்ச ஒரு வாய் போக மிச்சம் அப்படியே இருக்குதுங்க.”

—கிர்லோஸ்கர்.



டாக்டர்: “ஓஹோ! பையன் காந்தக் கல்லை அல்லவா முழுங்கியிருப்பான் போலேயிருக்கு!”

—கிர்லோஸ்கர்.



“அம்மா, எங்கே கொஞ்சம் நேரே காமிராவைப் பாருங்க.”

“இத்தனை நேரமும் அதைத்தான் பார்த்துக்கிட்டிருக்கேன். வேறே எங்கும் பார்க்கலை.”

—வஸந்த்.



சமாதானம்! —கிர்லோஸ்கர்.

ஆந்திரமெங்கும் சமீபத்தில் ஒரு பெரியாருக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடினார்கள். அவர்தாம் சமூக சீர்திருத்தத்துக்கு—

# வழி காட்டிய வீரேசலிங்கம்

தரிசி சுபத்திரம்மகாரு

தென்னிந்தியாவில் அப்பொழுது இருள் கவிந்திருந்தது. நவயுகத்தின் அருணோதயம் பிறக்கவில்லை. ஜாதி மதத் துவேஷம் தலை தூக்கியிருந்தது. அதிலும் ஆந்திரதேசத்தில் பச்சைக் குழந்தைகளுக்கும் தொண்டு கிழங்களுக்கும் முடிந்துவைக்கும் கல்யாணங்கள், விதவைகளான பெண்களுக்கு நிர்ப்பந்தம், பல பெண்ணை ஒருவன் மணப்பது, தாசித் தொழில் போன்ற பல அநியாயங்கள் மலிந்திருந்த சமயம். திக்கற்ற அநாதைகளின் முறையீடு வானைப் பிளந்து கொண்டிருந்தது. அப்படிச் சமூகம் அந்தகாரத்தில் மூழ்கியிருந்த சமயத்திலேதான் ஸ்ரீ கந்துகூரி வீரேசலிங்கம் பந்துலு பிறந்தார். இவர் 16-4-1848-இல் பிறந்து 1919-ஆம் வருஷம் இறந்தார்.

பந்துலு 12-ஆம் வயதில் ராஜ்யலக்ஷ்மி என்னும் உத்தமியை மணந்தார். ராஜ்யலக்ஷ்மிக்கு வயது அப்பொழுது எட்டு. அவர் தெலுங்கிலும் வடமொழியிலும் நல்ல ஞானம் பெற்றவர். நான்காம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபொழுதே, கவிதை இயற்றும் திறமை பெற்றார். அவர் நல்ல புகழ் பெற்றதுடன் அன்பின் உருவம் என்றும் பெயரெடுத்தார். அவருடைய கவிதைகளிலும் இந்த அன்பே வடிவெடுத்திருந்தது.

பெண்களுக்கு அறியாமையே அணிகலன் என்று சொல்லி வந்த அந்தக் காலத்திலேயே ராஜ்யலக்ஷ்மி நன்றாகப் படித்தாள். கணவன் மனைவி என்பதன் பொருளை அறியாமலேயே அவர்களுக்குள் சலியாத ஒற்றுமை வளரத் தொடங்கியது. முதலிலிருந்தே இருவரும் உயிர்த் தோழர்களைப் போலப் பழகிவந்தார்கள்.

ராஜா ராம்மோகன ராயின் கொள்கை சிறு வயதிலேயே பந்துலுகாருவின் மனத்தில் வேரூன்றி விட்டது. அவர் சீர்திருத்தவாதியானதற்கு அதுவே காரணம். எல்லாவிதச் சீர்திருத்தங்களும் உருப்பெற வேண்டுமானால் அதற்குப் படிப்பே முக்கிய சாதனம் என்று வீரேசலிங்கம் அறிந்தார். அதனால் பண்டிதரும் பாமரரும் சுலபமாகத் தெரிந்துகொள்ளும் நடையில் நூற்றுக்கு மேலாக நூல்கள் இயற்றியிருக்கிறார். வாயால் பேசி வந்த சீர்திருத்தங்களைப் பிரத்தியக்ஷமாகச் செய்யவும் இவர் முன் வந்தார். தம் மனைவி தம் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு உதவுவாளா என்று முதலில் வீரேசலிங்கம் சந்தேகித்தார். ராஜ்யலக்ஷ்மியும் முதலில், 'அநாதி காலமாய் வந்த கட்டுப்பாடுகளை விடுவதாவது! விதவைகளுக்குக் கல்யாணம் எதற்காக?' என்றுதான் தர்க்கித்து அவஸ்தைப் பட்டாள். ஆனால் அவர் மனைவிக்கு

காப்பிரைட்: கிருஹலட்சுமி (தெலுங்கு: 15-2-'48),
கேஸரி குடீரம், ராயப்பேட்டை, சென்னை.

ஞானேதயம் ஆகும் முன்பே பந்துலு காரியத்தில் இறங்கிவிட்டார்.

வெகு சீக்கிரத்திலேயே ராஜ்யலக்ஷ்மியின் ஒத்துழைப்பும் கிடைத்தது. சுற்றிலும் பெண்கள் படும் கஷ்டம், கணவரின் சீர்திருத்தப் பற்று, கண்டிப்பான நடத்தை ஆகிய எல்லாமாகச் சேர்ந்து அந்த அம்மாளையும் மாற்றிவிட்டன.

அவர் எத்தகைய துணிச்சலான வேலைக்கு இறங்கினாலும் சரி, அவள் அவருக்கு உற்சாகமூட்டிவந்தாள். மிகச் சிக்கலான சமயங்களிலும் அவருக்குப் பக்கபலமாக நின்று அவருடைய காரியங்களை நிறைவேறச் செய்தாள்.

முக்கியமாக விதவா விவாகம் செய்யும் முயற்சியிலிருந்து கணவரைத் தடுக்குமாறு, பந்துமித்திரர்களும், அவளை வளர்த்த மாமாவும், ஊர்ஜனங்களும் ராஜ்யலக்ஷ்மியிடம் கேட்டுக்கொண்டார்கள். ஜாதிப் பிரஷ்டம் செய்துவிடுவோமென்று பயமுறுத்தினார்கள். அந்தப் பத்தினி அதற்கெல்லாம் அசையவில்லை. அவர்களுடைய அஞ்ஞானத்தை நினைத்துச் சிரிப்பாள்.

வீரேசலிங்கம் பந்துலு ராஜமகேந்திரவரத்தில் விதவைகளுக்கு மறு விவாகம் செய்துவைக்கிறார் என்ற செய்தி ஆந்திர தேசமெங்கும் பரவிவிட்டது. வெகு தூரத்திலிருந்து பிரயாணக் கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு இளம் விதவைகள் அங்கே வருவார்கள். அக்காலத்தில் ரெயில் வசதி இல்லை. மாட்டு வண்டிகள் மூலமாகவும் நடந்தும் வாரக்கணக்கிலும் மாதக்கணக்கிலும் பிரயாணம் செய்து வருவார்கள். வழியில் திருடர் பயம்.

அந்நிலையில் கஞ்சம் ஜில்லாவிலிருந்து இரு பிராம்மண விதவைப் பெண்கள் வந்தார்கள். பாதிவழியில் கையில் காலணாக்கூட இல்லாமல் தவித்ததால் ஒருத்தி விஜயநகரத்தில் தங்கிவிட்டாள். மற்றொருத்தி மாத்திரம் பிடிவாதமாக ராஜமகேந்திரவரத்துக்கு வந்துவிட்டாள்.

நடு மத்தியான்னம்; இரண்டு மணி. ராஜ்யலக்ஷ்மி தன் கணவர் கட்டிய வீட்டுக் கிருகப்பிரவேசத்துக்காக வீட்டிலிருந்து சிநேகிதிகளுடன் புறப்பட்டுக்கொண்டிருந்தாள். தெருவில் கால் வைத்தாள். எதிரே புழுதி படிந்த உடம்புடனும், வாடிய முகத்துடனும், அழுக்கேறிய புடைவையுடனும், பரந்த தலையுடனும் அந்தப் பெண் வந்தாள். உடனே அவளை வீட்டுக்குள்ளே அழைத்துக்கொண்டுபோய்க் குளிக்கச்செய்து நல்ல புடைவை கொடுத்தாள் ராஜ்யலக்ஷ்மி. வீட்டில் சாதம் இல்லாததால் பக்கத்து வீட்டிலிருந்து வாங்கிச் சாப்பாடு போட்டாள். தன் பிரயாணத்தை நிறுத்திக்கொண்டு கூடவந்தவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டாள். ஆதரவுடன் அப்பெண்ணின் வரலாற்றையெல்லாம் விசாரித்தாள். அதற்குள் கணவர் வந்துவிடவே, "உங்களுக்கு ஒரு நல்ல செய்தி" என்று நடந்த விஷயங்களைச் சொன்னாள். பிறகு அந்தப் பெண்ணுக்கும் சோமநாதராவ் என்பவருக்கும் கல்யாணம் செய்துவைத்தார் பந்துலு.

அவர்கள் வீட்டுக்கு எதிரிலேயே நெறி தவறிய பெண்களுக்கென்று ஒரு ரக்ஷணசாலை ஏற்படுத்தினார்கள். அவர்களில் படிக்கத் தெரியாதவர்களுக்குப் படிப்புக் கற்றுக்கொடுத்தார்கள். கல்யாணம் செய்துகொள்ள விரும்பியவர்களுக்குக் கல்யாணம் செய்துவைத்தார்கள். சில பெண்களைச் சிசுஹத்தி

செய்யும் பாவச் செய்கையிலிருந்து காப்பாற்றினார்கள்.

ஒரு நாள் இந்தப் புண்ணிய தம்பதிகள் இருவரும் வெளியே போயிருந்த சமயத்தில் தெருவில் பெரிய கூட்டம் ஒன்றைக் கண்டார்கள். கன்னத்து எலும்புகள் முறிந்து ரத்தம் வழிய நின்ற இளம் வயதுள்ள ஒரு தாசிப்பெண்ணை இரு கிழவிகள் பிடித்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அவர்கள் ஏறிய வண்டியை நிறுத்தி ராஜ்யலக்ஷ்மி விவரம் விசாரித்தாள். "அவள் தேவடியாள். ஒரு விடனை ஏமாற்றியதன் காரணமாக அவன் அவளை அடித்து நொறுக்கி விட்டான்" என்று யாரோ சொன்னார்கள். ராஜ்யலக்ஷ்மியின் மனம் தவித்தது. இதற்கு என்ன செய்வது என்று கணவரைப் பார்த்தாள்.

அவர், "நாம் கிழவர்களாகிவிட்டோம். நம்மால் என்ன செய்ய முடியும்?" என்றார்.

"அதனால் என்ன? நாம் அதைரியப்பட வேண்டியதில்லை. நாம் செய்வதை உறுதியோடு பின்வாங்காமல் செய்தால் தவறாமல் வெற்றி கிடைக்கும்" என்று உற்சாகப்படுத்தினாள் ராஜ்யலக்ஷ்மி. இருவருமாகச் சேர்ந்து தம்மாலான உதவியை அவளுக்குச் செய்தார்கள்.

கடைசியில் பந்துலுகாருவின் மனமாகவே மாறிவிட்டாள் அவர் சகதர்மிணி. ஆண், பெண் என்ற பேதமோ, குலம், மதம் என்ற பேதமோ இல்லாமல் ராஜ்யலக்ஷ்மி சேவை செய்ய ஆரம்பித்துவிட்டாள். ஒரு நாள் நடுவெயில். வெயிலின் தாபத்தாலும் பசியாலும் சோர்ந்துபோன ஒரு பஞ்சமன் தெருவில் கொதிக்கும் மணலில் சுருண்டு விழுந்துவிட்டான். கணவர் வீட்டில் இல்லை. 'கீழே விழுந்தவனைத் தூக்கச் சகாயம் செய்யுங்கள்' என்று அக்கம் பக்கத்தார் உதவியைக் கோரினாள் ராஜ்யலக்ஷ்மி. யாரும் வரவில்லை. அந்தச் சமயத்தில் அவர்களுடைய ஆப்த நண்பராகிய ஸ்ரீராமுலு என்பவர் வரவே அவருடைய உதவியைக்கொண்டு அவனைத் தூக்கிப் போய்த் தன் வீட்டுத் திண்ணையில் படுக்கவைத்தாள். பிறகு அவனுக்குச் சைத்தியோபசாரங்கள் செய்து ஆகாரம் கொடுத்து அனுப்பினாள்.

வீரேசலிங்கம் பந்துலு தம் சுய சரிதத்தில், "ஐம்பது வருஷ காலம் சந்தோஷமாக என் கஷ்ட சுகங்களை இன்பமாக ஏற்றுக்கொண்டு உண்மைத் தோழியையும் குழந்தையையும் போல் என்னை ஆயிரம் கைகளைக் கொடுத்து ஆதரித்தாள் என் மனைவி" என்று புகழ்கிறார்.

வீரேசலிங்கம் பந்துலுவைப்பற்றிச் சுப்பிரமணிய பாரதியாரும் தம் 'சந்திரிகை'யில் வெகுவாகச் சிலாகித்து எழுதியிருக்கிறார்.

லட்சியத்தின் பெருமையெல்லாம், அது எட்டக் கூடாத நிலையில் இருக்கும் வரையில்தான். அது கிட்டாவிட்டால் பிறகு அதற்கு லட்சியம் என்று என்ன பெயர்?

—பிரேம்சந்த்.

தெரிந்தவரைப் புகழ்வதும், தெரியாதவரை இகழ்வதும் சிறுமை. தெரிந்தவரை இகழ்வதும், தெரியாதவரைப் புகழ்வதும் அநுசிதம்

'யோசிக்கும் வேளையில்'

யானைகளுக்குப் பேர் போனது மலையாளம்.
அவற்றினுள்ளும் கீர்த்தி பெற்றது கோபாலன்.

# மலையாளத்து யானை

ஏ. எஸ். மேனன்

கோபாலன் தன் சொந்தக்காரருடைய உயர்ந்த அந்தஸ்தைக் குறிக்கும் அடையாளம்; ஜனங்கள் பெருமையோடு பாராட்டும் உடைமை. பிற யானைகளைப் போல உள்ளூரில் மாத்திரம் தெரிந்ததல்ல. சொந்த ஊர்க்காரருக்கு ஒரு பெருமை தருவதோடு கேரள மாகாணத்துக்கே கௌரவத்தை அளிக்கும் பிராணி. மலையாளிகளில் ஒருவருடைய செல்வ நிலையைக் குறிக்க, "அந்த யானைக்குச் சொந்தக்காரர் இருக்கிறாரே, அவருக்கு இவர் சொந்தக்காரர்" என்று பேசிக்கொள்வார்கள்.

யானையின் சொந்தக்காரனுக்குத்தான் அதை வாங்குவதற்கும் விற்பதற்கும் உரிமை உண்டு என்பது உண்மை; அதுவும் மூன்று நாலு மோட்டாரின் விலையைக் கொடுத்து வாங்க வேண்டும். இருந்தாலும் யானை வந்தது என்றால் கிராமவாசிகளுக்கே ஒரு குதூகலம். ஆடவரும் மகளிரும் வீட்டை விட்டு வந்து அதைத் தொட்டுக் கும்பிடுவார்கள். எல்லா விக்கினங்களையும் போக்கும் மகா கணபதியின் திருவுருவத்தை உடையதல்லவா அது?

சென்ற ஆறு வருஷ காலமாக, எல்லாவற்றிலும் சிறந்தது, அழகியது, உயர்தரமானது என்று பரிசுகளைத் தட்டிக்கொண்டு போயிருக்கிறது கோபாலனென்னும் களிறு. சேர்ந்தாற் போல் பல வருஷங்களாகத் தொடர்ந்து பரிசைப் பெறுவதென்பது நாம் நினைப்பது போல் அவ்வளவு சுலபமான காரியம் அன்று. ஒவ்வொரு வருஷமும் கேரள நாட்டிலுள்ள யானைகளைத் திருச்சூரில் பூரம் உற்சவம் நடக்கும் போது கொண்டுவருவார்கள். இரண்டாந்தர மூன்றாந்தரப் பிராணிகளை ஒதுக்கிவிடுவார்கள். ஊர்வலத்தில் முதல் தரமான யானைகளே வர முடியும். சாதாரண ஆசாமி யானையின் தோற்றத்தைக் கண்டு பிரமித்துப் போகிறான். ஆனால் விஷயம் தெரிந்தவனுடைய கண்ணுக்கு அதோ வாலில் குறை, இதோ காதில் குற்றம் என்று தெரியும். அழகிய உருவம் இருந்தாலும் உயரம் குறைவாக இருக்கலாம்; இரண்டும் இருந்தாலும் சுபாவம் தகராறாக இருக்கும். எல்லா லட்சணங்களும் பொருந்தியதாகக் கிடைப்பது அரிது. கூடலத்துப்புரம் கோபாலனென்னும் களிற்றினிடம் எல்லாம் பொருந்தியிருப்பது கேரளத்தின் பாக்கியம்.

சில சமயங்களில் கொச்சி மகாராஜாவும் திருவிதாங்கூர் மகாராஜாவும் கோபாலனுக்கு அழைப்பு அனுப்புவதுண்டு; அரசர்கள் விருந்தாளியாக அழைப்பது எதற்கு?

காப்பிரைட் : மைஸிண்டியா (ஆங்கிலம் : 8-2-'48),
1—ஏ, ஸௌத் பரேட், பெங்களூர்.

அக்களிற்றரசனுடைய ஒத்தாற் போன்ற எழிலைக் கண்டு களிக்கத் தான். வேறு வாகனத்தில் போகாமல் கால்நடையாகவே தன் பிரயாணத்தை நடத்தும் களிற்றரசனுக்கு அரசர்கள் இடைவழியில் தங்குவதற்கு வசதியான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பார்கள். உள்ளூரிலிருந்தாலும் வெளியூரிலிருந்தாலும் கோபாலனுக்குப் போதிய அளவு ஓய்வு இருக்கவேண்டும். அதிகமான தேக சிரமத்துக்கு உள்ளாகும்படி அதை வைக்கமாட்டார்கள். உணவுப் பங்கீடு அதன் விஷயத்தில் இல்லை. ஒவ்வொரு நாளும் எட்டு அல்லது பத்துப் படி அரிசியைத் திட்டமாகக் கொடுத்துவிடவேண்டும். சாப்பிட்ட பிறகு நாம் முறுக்குச் சீடை தின்கிறோமே அப்படி அது இலையையும் பனமரத்தின் உள்ளேயுள்ள சோற்றையும் தின்ன வேண்டும். பழக்கப்பட்ட யானைகளெல்லாம் பிரம்மசாரிகள். கோபாலனும் அப்படித்தான். அதற்கேற்றபடி ஜோடி கிடைத்தால் அதன் அபிமானிகளுக்கு எத்தனையோ சந்தோஷமாகத்தான் இருக்கும். ஆனால் யானை உலகத்தில் காதல் மிகவும் ஆழ்ந்த உணர்ச்சி. ஒரு களிறு காட்டில் தன் வாழ்நாள் முழுவதும் சுதந்தரமாக வாழ்ந்தாலும் பெண்யானையோடு பல வருஷங்கள் பழகித்தான் காதலை உணர்த்த வேண்டும். பல சோதனைகளினிடையே தன் காதல் உறுதியை வெளியிட்ட பிறகே அதனை மனைவாட்டியாகக் கொள்ள முடியும். காதல் விஷயத்தில் நவீன ஆடவனோ பெண்ணோ யானைமாதிரி இருக்க விரும்பமாட்டார்கள். மணத்தின் பின்புகூடச் சந்ததிகள் மிகவும் குறைவாக இருக்கும்; ஒரு கன்றுக்கும் மற்றொரு கன்றுக்கும் இடையே பல வருஷங்கள் இருக்கும்.

கோபாலனை வளர்க்கும் குடும்பத்தினர் அதன் பிறந்த நாள் விழாவை ஒவ்வொரு வருஷமும் கொண்டாடுகின்றனர்; பிறந்த நாள் தெரியாவிட்டாலும் தங்கள் வீட்டுக்கு வந்த நாளையே அதன் ஜன்மதினமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அகஸ்மாத்தான பொருத்தம் பாருங்கள்: கோபாலனுடைய பாகனுக்கும் கோபாலனென்றே பெயர். அவன் நாயர் குலத்தினன். கொச்சி சம்ஸ்தானத்தில் உள்ள கூடலத்துப்புரத்திலிருக்கும் ஒரு நம்பூதிரிக் குடும்பத்தின் உடைமை இந்தக் களிறு. அதை வீட்டுக்குச் சொந்தமான சொத்தாக எண்ணாமல் வீட்டுக்குப் பெரிய மனிதனாகவே பாவிக்கிறார்கள். இந்தக் குடும்பம் ஆதியில் அவ்வளவு சுபிட்சமாக இல்லை; கோபாலன் வந்த பிறகு லக்ஷ்மீ கடாட்சம் பொங்கியது. அதனால் அந்த யானையின் புகழ் எங்கும் பரவியது.

கேரளத்தில் உற்சவ காலம் வந்துவிட்டால் கோபாலனுக்கு அபாரமான கிராக்கி. முன்னடியே கோபாலனை ஏற்பாடு செய்யப் போட்டி போடுவார்கள். உற்சவத்தில் அது அப்படி ஒன்றும் சிரமமான காரியத்தைச் செய்வதில்லை. பொன்னும் வெள்ளியும் பட்டும் இணைந்த அலங்காரங்களோடு சில மணி நேரம் சுவாமிக்கு வாகனமாக இருந்து, கொட்டுமேளத்துடன் ஊர்வலம் வரவேண்டும்; அவ்வளவுதான். இதற்குக் கிடைக்கும் ஊதியம் ஹைகோர்ட்டு வக்கீலுக்குக் கிடைக்கிற அளவில் குறையாது. இந்த வகையில் வருஷந்தோறும் ஆறாயிர ரூபாய்க்குக் குறையாமல் கோபாலனுக்குக் கிடைக்கும். மற்ற யானைகளைப்போல வேறு தொழில் செய்ய அது போவதில்லை. உற்சவ காலம்

முடிந்துவிட்டால் சொஸ்தமாக வீட்டுக்கு வந்து இளைப்பாறும்; தேக சுகத்துக்கு வேண்டிய வைத்தியத்தைச் செய்துகொள்ளும். தை முதல் சித்திரை வரையில்தான் அதற்கு வேலை; ஊர் ஊராக உற்சவத்துக்குப் போகும். எங்கே போனாலும் அதற்கு ஆசார உபசாரம் நடக்கும்; எல்லோரும் மகிழ்ச்சியோடு வேண்டிய சௌகரியத்தைச் செய்து கொடுப்பார்கள்.

வீட்டில் கோபாலனுக்குத் தினமும் இரண்டு தடவை ஸ்நானம். நிறைய அரிசியும் நெய்யும் உண்ணும்; மற்றச் சமயங்களில்தான் பனஞ்சோறும் இலையுணவும் இருக்கவே இருக்கின்றன. வீட்டில் சின்னக் குழந்தை முதல் எல்லோரிடமும் விளையாடுவதில் அதற்குப் பிரியம். அவர்கள் அதனோடு விளையாடி வெல்லம், தேங்காய், வாழைப்பழம் ஆகியவைகளைத் தருவார்கள். வீட்டிலே என்ன பட்சணம் பண்ணினாலும் வீட்டுக்குப் பெரிய அம்மாள் அதில் பெரும் பகுதியைக் கோபாலனுக்காக வைத்துவிடுவாள். மாலையில் தன் நடுங்கும் கையாலேயே அவள் அதற்கு அதைக் கொடுப்பாள். ஆடியிலும் ஐப்பசியிலும் வருஷம் இரண்டு முறை அதற்கு வைத்திய சிகிச்சை நடைபெறும். இந்தக் காலங்களில் அது தன் சைவ விரதத்தை விடுத்து ஊனையும் கள்ளையும் நுகரும்படி இருக்கும்.

கம்பீரமாகத் தலையை நிமிர்த்தி நிற்கும் கோபாலனது உயரம் பதினைந்து அடி. இரட்டைக் கட்டிலில் விரிக்கும் படுக்கையை அதன் முதுகில் சௌகரியமாக விரித்துப் போடலாம். இத்தகைய உருவத்தை வண்ணப்பொலிவோடு பொன் ஆபரணங்களால் புனைந்து பார்க்கும் போது அதன்பால் மாட்சியும் சௌந்தரியமும் இணைந்து விளங்கும். கலைஞர் அதன் உருவத்திலிருந்து இழைவையும் குழைவையும் கற்கலாம்; மங்கையர் அதன் நடையழகைக் கற்கலாம். அதன் பிரமாண்டமான ஆகிருதியைக்கொண்டு அதன் ஸ்வபாவத்தை நிர்ணயிக்கக் கூடாது. நிலையான இனிய ஸ்வபாவமும், குலாவி வசீகரிக்கும் குணமும், அமைதியான நிலையும் உடையது அக்களிறு. குழந்தைகளைக் கேட்டால்கூடக் கேரளத்தில் பிரசித்தமான யானைகளின் பெயரை வரிசையாகச் சொல்வார்கள். ஆனால் அவற்றின் தந்தங்கள் யாவும் கொலையால் கறைபட்டவை. கோபாலன் தந்தம் அத்தீங்கை இதுகாறும் இழைத்ததில்லை.

கேரள நாட்டுநாகரிகத்தில் உள்ளபடி யானை வளர்க்கும் கலையை வேறு எங்கும் காண முடியாது. கொஞ்சம் கேரளத்தை விட்டுக் கிழக்கே சென்று தமிழ்நாட்டைப் பாருங்கள்; அங்குள்ள கோயில் யானைகளைப் பார்த்தால் இந்த உண்மை தெரியவரும். அங்கெல்லாம் கோயிலுக்கு வேண்டிய கொட்டு மேளத்தோடும் நாயனத்தோடும் ஒன்றாக யானை இருக்கிறது. வெறுமனே உயிர் வைத்துக்கொண்டு, பிறருக்கு அபாயம் விளைவிக்காமல், வாழ்வதற்கு மாத்திரம் ஏற்றபடி புல்லையும் வைக்கோலையும் அதற்குப் போடுகிறார்கள். ஏற்கனவே காட்டில் குஷாலாகத் திரியும் தன் இனத்தினின்றும் பிரிந்த துன்பம் போதாதென்று, இங்கே நாட்டில் புல்லையும் வைக்கோலையும் தின்று அதை உயிர் வாழப் பண்ணுவது தண்டிப்பதற்குரிய குற்றம். ஜஸ்டிஸ் ஜாக்ஸன், யானைக்குத் தீங்கு செய்தால் மனிதனுக்குத் தீங்கு செய்ததாகவே எண்ணித் தண்டனை

கொடுக்கவேண்டும் என்று சொல்லி யிருக்கிறார். தமிழ்நாட்டில் யானை களைப் புல்லும் வைக்கோலும் போட்டு ஆடுமாடுகளைப்போல் வளர்க்கிறார்கள்; ஆகவே வளர்ப்பு மிருகங்களைப்போல அது சாதுவாக எங்கே வேண்டுமானாலும் திரியும் படியாகிவிட்டது.

மலையாளத்தில் பருமனும் பலமும் மிகவும் அதிகமாக ஏற்படும்படி சிரத்தையாக யானையை வளர்க்கிறார்கள். இதனால் ஜனங்களுக்கு அபாயம் உண்டாகலாமென்பது உண்மையே. ஆனால் மனிதனிடத்தில் உள்ள இழிந்த பயங்கொள்ளித் தனத்துக்கு அவனிடம் உள்ள கலையுணர்ச்சி கல்தாக் கொடுத்துவிடுகிறது. எப்போதோ வரலாமென்று அஞ்சும் அபாயத்தை மறந்து அந்தக் காட்டு விலங்கை மகிழ்ச்சி தரும் அழகுருவமாக வளர்க்கிறார்கள்; குடும்பத்திலே ஒருவனாக எண்ணுகிறார்கள். மனிதனுடைய உணர்ச்சிகளை உணர்ந்து பழகும் உத்தமமான மிருகம் யானை. மனிதனுடைய பழக்க வழக்கங்களைப் போன்ற வாழ்க்கை முறையை உடையது அது.

மனிதனுக்குப் பூரண ஆயுளென்பது நூற்றிருபது வருஷங்களென்று சொல்கிறார்கள்; யானைக்கும் அப்படித்தானும். நாகரிகம் உள்ள மனிதன் ஏகதார விரதம் உள்ளவன்; நாகரிகமற்ற யானைகூட அத்தகையதுதான். மனிதன் உண்ணும் உணவுகளையே அதிக அளவில் யானை உண்ணுகிறது. நோயுற்ற மனிதனுக்கு எந்த வைத்திய சிகிச்சை பண்ணுகிறார்களோ அதையே யானைக்கும் பண்ணுகிறார்கள்; மருந்தின் அளவில் மாத்திரம் வித்தியாசம்.

சுருங்கச் சொன்னால் உடல்நிலையிலும் மனநிலையிலும் மனிதனும் யானையும் பல வகையில் ஒப்புமை உடையவர்கள். ஆகவே மலையாளத்தில் உள்ளவர் கோபாலனைப்போல ஒரு யானை கிடைப்பதாக இருந்தால் மனைவியைப் பெறுவதில்கூட அவ்வளவு கவலை கொள்வதில்லை என்பது என்ன ஆச்சரியம்?

### நிறுத்தல் குறிகள்

பிரபல நகைச்சுவை ஆசிரியர் மார்க் ட்வேன் என்பவருக்கு, வார்த்தைகளின் எழுத்துக்கூட்டல், நிறுத்தல் குறிகள் என்றாலே மகா வெறுப்பு. ஒரு முறை அவர் தமது கையெழுத்துப் பிரதிகளை ஒரு பிரசுரகர்த்தருக்கு அனுப்பும்போது, பின் கண்ட கடிதத்தையும் அனுப்பினார்:

"கனவான்களே;...*' ";... ";: — : ... (2) !.,; இந்தக் குறிகளை உங்கள் சுவைக்கு ஏற்றபடி, உடனுள்ள என் கையெழுத்துப் பிரதிகளில் அங்கும் இங்கும் அள்ளித் தெளித்துக் கொள்க."

—ஹை கார்ட்னெர் (பரேட்).

* * *

பெரியோர்களின் குறைகளே மூடர்களின் ஆறுதல்.

—டிஸ்ராலி.

* * *

பூனைக்கு மருந்து வாங்க யானையை விற்காதே.

—ஆப்பிரிக்கப் பழமொழி.

# அரிசியே மருந்து

★

**அரிசிச் சோறு தின்பவன் என்றால், நமக்குக் கேலி. ஆனால், மனக் கவலைக்கும், ரத்தக் கொதிப்புக்கும் அதுவே நல்ல மருந்து என்கிறார்கள் அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள். 'புல்லடின் அவ் தி நியூயார்க் அகாடமி அவ் மெடிஸின்', 'ஸதெர்ன் மெடிகல் ஜர்னல்' ஆகிய அமெரிக்கப் பத்திரிகைகளின் சில கட்டுரைகளை ஆதாரமாகக் கொண்டது இந்தக் கட்டுரை.**

நாகரிகம் வளர வளர மக்களிடையே வியாதிகள் அதிகரிக்கின்றன; சாவும் அதிகரிக்கிறது. நாகரிக வாழ்க்கை ஆத்திரமும், பரபரப்பும், தொல்லைகளும் நிறைந்த வாழ்க்கையாகிவிட்டது. சக்திக்கு மீறின வேலை, மனத்தை அரிக்கும் கவலை, மனக் கோளாறு இவைகள் இந்தக் காலத்தில் சகஜமாகிவிட்டன. ஒவ்வொரு வருஷமும் சுமார் 5,00,000 அமெரிக்கர்கள் இந்த நாகரிக வியாதிகள் காரணமாகச் சாகிறார்களாம். ரத்தக் கொதிப்பு, ரத்தக் குழாய்கள் தடித்துப் போவது, ரத்தம் கட்டிதட்டிப் போவது இந்த வியாதிகள் இந்தக் காலத்து வியாதிகளே.

மற்ற வியாதிகளை எல்லாம் அடக்கி ஆண்டு அவற்றால் பலர் சாகாமல் தடுக்கும் சிகிச்சை முறைகளைக் கண்டுபிடித்து வைத்திய சாஸ்திரம் வெற்றி பெற்றுவிட்டது. ஆனால் இந்த நாகரிக வியாதிகள் எந்த முறைக்கும் அசைந்து கொடுப்பதாகவே தெரியவில்லை. இவற்றுள்ளும் ரத்தக் கொதிப்புத்தான் இன்று உலகில் மிகப் பலரைக் கொல்லும் வியாதிகளுள் முதன்மை ஸ்தானம் பெற்றிருக்கிறது.

இருந்தாலும் நம்பிக்கையே இல்லாமல் போய்விடவில்லை. இந்த வியாதிகளைப் போக்க மருந்துகளை இன்னும் கண்டுபிடிக்காவிட்டாலும் சில பத்திய ஆகாரங்களால் இவைகளைக் கட்டுப்படுத்தலாம் என்று அமெரிக்காவில் சில வைத்திய நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். உதாரணமாக, "நரம்புத் தளர்ச்சியால் படபடப்பு ஏற்படும் போது, மாமிச ஆகாரத்தை நினைக்காதே. நாலுவாய் அரிசிச் சோற்றையோ, சாக்கலேட்டையோ சாப்பிடு. இந்த ஆகாரம் வியாதியைச் சமனப்படுத்தி உன் ஆயுளையும் நீட்டிக்கும். நரம்புத் தளர்ச்சியின் வேறொரு பெயர்தான் ரத்தக் கொதிப்பு. இந்த விதிகளை அநுபவத்துக்குக் கொண்டுவருவது கஷ்டமாகத்தான் இருக்கும். ஆனால் இந்த விதிகளை அநுசரிப்பதால் பலன் ஏற்படுவது நிச்சயம். விஷயம் இதுதான்: இந்த மாதிரி நரம்புத் தளர்ச்சி வியாதிகளுக்கு, புரோடீன், கொழுப்பு, உப்பு இவைகள் அதிகமாகச் சேரக் கூடாது; கார்போஹைட்ரேட், சர்க்கரை இவைகள் அதிகமாகச் சேரவேண்டும்" என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

நமக்கு அரிசிச் சோறு சகஜமான ஒன்று. ஆனால் அமெரிக்க வைத்திய நிபுணர்கள் இதன் பெருமையை

விஞ்ஞான ரீதியான பரிசோதனை யால் இப்போது கண்டறிந்து சொல்லியிருப்பது நாம் பெருமைப் படக் கூடிய விஷயம் அல்லவா?

அளவுக்கு மீறிய ரத்தக் கொதிப் புக்குச் சிகிச்சை என்ன என்ற விஷயமாக, மான்ட்ரீல் சர்வகலா சாலை வைத்திய நிபுணரான டாக் டர் ஹேன்ஸ் டபிள்யூ. செல்யி என்பவரும், வட கரோலினாவைச் சேர்ந்த டர்ஹாம் டியூக் ஸர்வ கலாசாலை வைத்திய நிபுண ரான டாக்டர் வால்டர் கெம்ப் னர் என்பவரும் தீவிரமான ஆராய்ச்சியைச் சண்டை நடக்கும் போதே தொடங்கினார்கள்.

பிரிட்டனில் விமானத் தாக்குதல் நடந்தபோது பொது மக்களிடையே வயிற்றுப் புண் வியாதி பல மடங்கு அதிகரித்தது என்ற விஷயத்தை அறிந்து கொண்ட பிறகு டாக்டர் செல்யி தம் ஆராய்ச்சியைத் தொடங்கினார். அரிசிச் சோற்றை நிறையச் சாப்பிடும் சீனர்க ளிடையே அளவுக்கு மீறிய ரத்தக் கொதிப்பு என்ற வியாதி மிக அரி தாக இருப்பதை டாக்டர் கெம்ப்னர் கண்டார். இதற்குப் பின் இவர் ஆராய்ச்சியைத் தொடங்கினார்.

வயிற்றில் புண் ஏற்படுவதற்கு என்ன காரணங்களோ அவைகளே தாம் ரத்தக் கொதிப்பு வியாதிக்கும் காரணங்கள். இதுவேதான் நரம் புத் தளர்ச்சி.

டாக்டர் செல்யி சில எலிகளைக் கொண்டு பரிசோதனை நடத்தினார். பூர்ணமான சோர்வு ஏற்படும் வரை யிலும் எலிகளுக்கு வேலை கொடுத் தார். பிறகு இதன் பலனை ஆராய்ந் தார். முதுமையில் உதவும் சேம நிதி, தன் ஆரோக்கியம், பல வகை யான பயம், உடற் சோர்வு, மனச் சோர்வு முதலியவை பற்றிய கவலை களால் ஒரு வியாபாரி எவ்வளவு சோர்ந்து, அலுத்து, எதிலும் பற் றில்லாமல் மனம் முறிந்து போகி றானோ அதே நிலை இப்படி வேலை வாங்கப்பட்ட எலிகளுக்கும் வந்து விட்டது.

இப்படிப்பட்ட மனமுறிவு ஏற்படு வதற்குக் காரணம் 'கிளேண்ட்' சம் பந்தமானது என்ற முடிவுக்குக் கடைசியில் டாக்டர் செல்யி வந் தார். மனிதர்களுக்கோ மிருகங் களுக்கோ, கோபமோ பயமோ ஏற் படும்போது 'அட்ரினல் கிளேண்டு' என்ற ஒரு கிளேண்ட் அட்ரினலின் என்ற ஒரு திரவத்தை நிறையக் கொட்டிவிடுகிறது. இது ரத்த ஓட் டத்தில் மிகுதியாகக் கலப்பதனால் தான் மனமுறிவு அல்லது ரத்தக் கொதிப்பு ஏற்படுகிறது.

இந்த அட்ரினல் கிளேண்டுகள் மூத்திரக் காய்க்கு மேலே இருக்கின் றன. இவைகளின் வேலை, அட்ரி னலின் என்ற ஒரு திரவத்தைச் சுரப்பதுதான். இந்தத் திரவம் இரு தயத்தையும் ரத்த ஓட்டத்தையும் பாதிக்கும். இந்தச் சுரப்பு ஓர் அள வுக்கு உட்பட்டிருந்தால் இதனால் நன்மைதான் உண்டாகும். இது ஊக்கத்தைக் கொடுக்கும்; அபா யத்திலிருந்து தப்ப வழி காட்டும்; பகைவனை எதிர்த்துப் போராடத் திறமை கொடுக்கும். ஆனால் இந் தச் சுரப்பு அடிக்கடி ஏற்பட்டு அள வுக்கு அதிகமாகிவிட்டால் பலன்: மனமுறிவு, நரம்புத் தளர்ச்சி, ரத்தக் கொதிப்பு இப்படி அபாய கரமானதாகத்தான் முடியும்.

எலிகளைக் கொண்டு பரிசோ தித்தே இந்த உண்மையையும் டாக்டர் செல்யி நிரூபித்தார். மற்ற அம்சங்களில் சாதாரணமாக வாழும் எலிகளின் உடம்பில் இவர் நிறைய அட்ரினலினை 'இஞ்ஜெக்ட்' செய் தார். இந்த எலிகளுக்கு முன் சொன்ன மனமுறிவு, நரம்புத்

தளர்ச்சி, ரத்தக் கொதிப்பு முதலிய எல்லாக் கோளாறுகளும் உண்டாகி விட்டன.

நாகரிக வாழ்வின் தேவைக்கும் அவசரத்துக்கும் தொல்லைக்கும் தாக்குப் பிடிப்பதற்காக உடம்பில் நிறைய அட்ரினலின் சுரக்கிறது. இப்படிச் சுரக்கும் அதிக அளவு அட்ரினலினே பின்னுல் இந்த வியாதிகளுக்கெல்லாம் காரணமான விஷமாகிவிடுகிறது.

அட்ரினலின் இஞ்ஜெக்ஷன் பெறும் எலி ஒன்றுக்கு உப்பு ஜலம் கலந்த ஆகாரம் கொடுத்தார். இந்த அட்ரினலின் விஷத்தின் வேகம் அதிகரித்தது. ஆனுல் உப்பும் புரோடீனும் குறைந்த ஆகாரத்தை எலிகளுக்குக் கொடுத்தபோது- அட்ரினலின் இஞ்ஜெக்ஷன் இருக்கும்போதே - எலிகளுக்கு இந்த வியாதிகள் தோன்றவே இல்லை. தோன்றிய சிறிதளவு நோயும் குணமடைந்துவிட்டது.

பிறகு எலிகளின் ஆகாரத்தில் இவர் 'அம்மோனியம் குளோரைட்' என்ற உப்பைக் கலந்து கொடுத்தார். வியாதி தோன்றவில்லை. தோன்றிய வியாதியும் மறைந்தது. சாதாரண உப்பில் 'ஸோடியம்' என்ற ஒரு பொருள் இருக்கிறது. இதுதான் இந்த வியாதியை அதிகரிக்கிறது என்று டாக்டர் செல்யி கண்டார்.

செல்யி இப்படிப் பரிசோதனை நடத்தி வந்தபோது டாக்டர் கெம்ப்னர் சீனர்களின் அரிசிச் சோறு இந்த வியாதி விஷயத்தில் என்ன செய்கிறது என்று பரீக்ஷித்தார். சீனர்களுக்குத்தான் இந்த வியாதியே வருவதில்லையே!

அரிசி உணவின் தத்துவமும் டாக்டர் செல்யி கண்டுபிடித்த தத்துவமும் ஒன்றுதான். அரிசியில் புரோடீனும் குறைவு, உப்பும் மிகக் குறைவு. இவைகள் இரண்டுமே இந்த ரத்தக் கொதிப்பு வியாதி அதிகரிக்கக் காரணமானவை.

டாக்டர் கெம்ப்னரிடம் சிகிச்சைக்கு ஒரு ஸ்திரீ வந்தாள். அவளுக்கு வயது 32. பத்தாவது குழந்தை பெற்ற பிறகு அவளுக்கு மிகுந்த ரத்தக் கொதிப்பு வந்துவிட்டது. அவள் கண் குருடாகிவிட்டது. மனம் நிலைதவறிவிட்டது. பல மணி நேரம் பிரக்ஞையே இல்லாமல் கிடப்பாள்.

டாக்டர் கெம்ப்னர் அவளுக்குச் செய்த சிகிச்சை இதுதான்: அரிசிச் சோறு, பழச்சாறு, சர்க்கரை இந்த ஆகாரந்தான் சாப்பிடவேண்டுமென்று கடும் பத்தியமாக வைத்திருந்தார். இரண்டே வாரத்தில் ரத்தக் கொதிப்புக் குறைந்துவிட்டது. 52 நாட்களுக்குப் பிறகு அவள் பூரண குணம் அடைந்துவிட்டாள். வேறு மருந்தே ஒன்றும் இல்லை.

39 வயதுள்ள இன்னேர் ஆண்மகனும் பல வருஷங்களாக இந்த வியாதியால் வருந்தினர். அவருக்கும் டாக்டர் கெம்ப்னர் அரிசிச் சோற்றுப் பத்தியம் விதித்துவிட்டார். அந்த நோயாளி எவ்வளவோ ஆஸ்பத்திரிகளுக்குப் போய் எவ்வளவோ சிகிச்சை பெற்றும் பலன் கிடைக்கவில்லை. ஆனுல் இந்த அரிசிச் சோற்றுச் சிகிச்சையில் ஒரே மாதத்தில் அவன் குணம் பெற்றுவிட்டான். அன்று முதல் ஆரோக்கியமாகவே இருக்கிறுன்.

இந்த ஆராய்ச்சிகளை நியூயார்க் வைத்திய அகடமி புல்லடீனில் டாக்டர் கெம்ப்னர் பிரசுரித்தார். இதைப் பார்த்த எம். யூஜீன் பிலிப்ஸ், எம். ஜே. பிலிப்ஸ் என்ற இரண்டு மியாமி டாக்டர்கள், 32

ரத்தக் கொதிப்பு நோயாளிகளுக்கு அரிசிச் சோறு கொடுத்துப் பார்த்தனர். 20 பேர் பூர்ண குணம் அடைந்துவிட்டார்களாம்.

இந்த அரிசிச் சோறு கொடுப்பதால் தடித்த தேகிகளுக்கு மட்டும் உடல் எடை குறைந்ததாம். இந்த எடைக் குறைவினுல் நன்மைதான் ஏற்பட்டதாம்; கேடு ஒன்றும் இல்லையாம்.

இந்த அரிசிச் சோற்றின் பத்திய அளவு இதுதான்: நாளொன்றுக்கு அரைப் பவுண்டு அரிசியை உப்பில்லாத ஜலத்தில் சமைத்து, பழரசம், டப்பாக்களில் வரும் பழம், உலர்ந்த பழம் இவற்றோடு கலந்து கொடுப்பது.

இந்த அரிசிச் சோற்றோடு வாழைப் பழமும் நிறையப் பழரசமும் கொடுத்து வந்தார்கள். அரிசியில் இல்லாத சில உணவுச் சத்துக்களை நிரப்புவதற்கு இவை பயன்பட்டன.

டாக்டர் செல்யி, டாக்டர் கெம்ப்னர் இவர்கள் ஆராய்ச்சி இன்று ரத்தக் கொதிப்பால் தொல்லைப்படும் பலருக்கு நம்பிக்கையை ஊட்டிவிட்டது. இந்த ரத்தக் கொதிப்போடு தொடர்புள்ள வியாதி உள்ளவர்களுக்கு இது ஒரு வரமாகிவிட்டது. நாகரிக வியாதிகளுள் மிகப் பலரைக் கொன்று வந்த இந்த ரத்தக் கொதிப்பு வியாதியை வெல்ல, அரிசி ஒரு சிறந்த மருந்தாகிவிட்டது.

## நல்ல வேலைக்காரன்

புதிதாக வந்த போலீஸ் கான்ஸ்டபிளுக்கு, தான் பலே வேலைக்காரன் என்று பெயர் வாங்க ஆசை. சீக்கிரத்திலேயே அவனுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. தான் ரோந்து சுற்றிக்கொண்டிருந்த இடத்திலிருந்து, போலீஸ் ஸ்டேஷனுக்கு அவன் போனில் பேசினுன்: "இங்கே ஒரு கும்பலில் கலவரம் நடந்துகொண்டிருந்தது. ஒரு மனிதனின் பணத்தைச் சிலர் அடித்துப் பறித்துக்கொண்டார்களாம். கும்பலில் ஒருவனை நான் பிடித்துவிட்டேன். மற்றவர்கள் ஓடிவிட்டார்கள்."

"எவனைப் பிடித்தாய்?" என்று கேட்டார் ஸ்டேஷன் அதிகாரி.

"பறிகொடுத்த மனிதனை" என்றுன் கான்ஸ்டபிள்.

—யுனைடெட் மைன் வொர்க்கர்ஸ் ஜர்னல்.

* * *

## அபிப்பிராயபேதப் படுவோர்

உன்னேடு பலமாய் அபிப்பிராய பேதப்படுகிறவர்கள் எல்லாரும் முற்றும் நியாயத்துக்குக் கட்டுப்படாதவர்களாகவோ அயோக்கியர்களாகவோ இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. இதை நீயே பரீட்சித்து அறிந்துகொள்ளலாம்.

—லார்டு விண்ட்ஸே.

குறுக்கு விசாரணை செய்வது ஒரு கலை. சாட்சிகளை மனங் குழம்பச் செய்யும் வக்கீலே மனங் குழம்பிவிட்டால்......?

# வக்கீலைக் குழப்பிய சாட்சி

## ஜெர்ரி ஜே. ஸல்லிவன்

பல வருஷங்களுக்கு முன்னே ஒரு நகரத்தில் ஒரு தேர்தல் வழக்கு நடந்தது. நகரத்து மக்கள் அத்தனைபேருக்கும் தெரிந்த ஒரு கனவான் சாட்சிக் கூண்டில் ஏறினார்.

"என் பெயர் இன்னது. நான் சரியான ஓட்டுரிமை பெற்றவன். இந்தத் தேர்தலில் நான் ஓட் செய்தேன்" என்றெல்லாம் அவர் உறுதி மொழி கூறினார்.

பி என்ற வக்கீல் எதிர்த்தரப்பில் இந்தச் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்ய வந்தார். வக்கீலுக்கும் சாட்சிக்கும் ஏற்கனவே மிகுந்த மனஸ்தாபம் இருந்து வந்தது.

வக்கீல் தமது குறுக்கு விசாரணையை ஆரம்பித்தார். பின்வரும் அந்தக் கேள்வி பதில்கள் கோர்ட்டிலே மிகுந்த பரபரப்பை உண்டு பண்ணின. அதுமாத்திரம் அல்ல; பின்னால் நகரிலும் பல நாள்வரையில் இதுவே பேச்சாக இருந்தது.

வக்கீல்: நீங்கள் எங்கே வசிக்கிறீர்கள்?

சாட்சி: இண்டெண்டெண்ட் தெருவில் 19-ஆம் நம்பர் வீட்டில் வசிக்கிறேன்.

வ: அங்கே எவ்வளவு காலமாக வசித்து வருகிறீர்கள்?

சா: சென்ற டிசம்பர் மாதத்திலிருந்து வசித்து வருகிறேன்.

வ: அதற்கு முன்னே எங்கே வசித்தீர்கள்?

சா: இப்போது வசிக்கிற வீட்டுக்கு அடுத்த வீட்டில் வசித்தேன்.

வ: அந்த வீட்டின் நம்பர் என்ன?

சா: 19.

வ: என்ன!

சா: ப-த்-தொ-ன் ப-து.

வ: சென்ற டிசம்பரில் அடுத்த வீட்டுக்குக் குடி வந்ததாகச் சொன்னீர்களே!

சா: ஆமாம்.

வ: நீங்கள் குடி கிளம்பிய வீடும் குடிவந்த வீடும் தனித்தனியே உள்ள இரண்டு வீடுகள் அல்லவா?

சா: ஆமாம்.

வக்கீல் மிகுந்த சலிப்புடன் தலையை மடக்கென்று மறுபுறம் திருப்பிக்கொண்டார்.

ஒரு கணத்தில் மீண்டும் விசாரணையைத் தொடர்ந்தார்.

வ: அந்தத் தெருவிலே இரண்டு வீடுகளுக்கு 19- என்ற ஒரே நம்பரைப் போட்டிருக்கிறார்களா?

சா: இல்லை.

வக்கீல் ஆத்திரமடைந்தார். அலமந்து போனார். கடைசிக் கேள்விக் குண்டைப் போட்டார்.

வ: நீங்கள் 19-ஆம் நம்பர் போட்ட ஒரு வீட்டிலிருந்து 19-ஆம் நம்பர் போட்ட இன்னொரு

மூலம்: கேஸ் அண்ட் காமெண்ட் (ஆங்கிலம்: ஜனவரி பிப்ரவரி '48), ரோசெஸ்டர் 3, நியூ யார்க்.

வீட்டுக்குக் குடியேறியதாகவும், ஆனால் அந்தத் தெருவிலேயே 19-ஆம் நம்பர் போட்ட ஒரே ஒரு வீடுதான் இருக்கிறதென்றும் இந்தக் கோர்ட்டாரின் முன்பு சொல்லுகிறீர்களா?

சா: ஆமாம்.

வ: நீர் சாட்சி சொன்னது போதும். இறங்கும்.

சாட்சி கூண்டை விட்டு இறங்கினார். நூற்றுக்கணக்கான கண்கள் அவரையே ஆச்சரியத்தோடு நோக்கிக்கொண்டிருந்தன. என்ன விசித்திரமான சாட்சியம் என்று எல்லோரும் அதிசயித்தார்கள்.

பின்னால், வக்கீல் பிரவாதம் செய்கையில், சாட்சியைப் பொய்யன் என்றும் மழுப்புவோன் என்றும் கண்டபடியெல்லாம் திட்டினார்.

இந்த வழக்கு விசாரணை பற்றி ஊர் முழுதும் ஒரே பேச்சாயிருந்தது.

சில வாரங்கள் சென்றன. வழக்கும் முடிந்தது. சாட்சியை நான் சந்தித்துப் பேசினேன். அவருடைய ஜாகை மாற்றம் சம்பந்தமாக, அவர் சொன்ன சாட்சியம்பற்றி அவரைக் கேட்க விரும்பினேன். ஆனால், அதை நேரே கேட்பது அநுசிதமாகத் தோன்றியது. ஆகையால், தனுக்காக விசாரணையைப் பற்றிப் பேச்சைத் திருப்ப எண்ணினேன். அவர் மனத்தைச் சங்கடப்படுத்த எனக்கு இஷ்டமில்லை. ஆகவே, தம் சாட்சியத்தைப் பற்றி அவராக ஏதாவது சொன்னால் சரி, சொல்லாவிட்டால் வேண்டாம் என்று நான் முடிவு செய்தேன். வெகு எச்சரிக்கையாகவே பேசினேன்.

ஆனால், வழக்கு விசாரணையைப் பற்றி நான் பிரஸ்தாபித்தேனோ, இல்லையோ; உடனே அவர் துளியும் தயக்கமின்றித் தாமாகவே நான் விரும்பிய விவரத்தை மிகவும் சகஜமாக மனம் விட்டுச் சொன்னார்.

அவர் சொன்னதாவது: "அந்த விசாரணையிலே நான் சொன்ன சாட்சியம்பற்றி ஊரெல்லாம் ஒரே பேச்சாயிருக்கிறதே; அது உங்களுக்குத் தெரியுமோ? என்னைச் சிலர் குறையும் கூறுகிறார்கள். என் நண்பர்களில் பலருக்கு அதன் உண்மை தெரியாததால், அவர்களுக்கெல்லாம் அதை நான் விளக்க வேண்டியதாயிற்று.

"நான் சொன்ன சாட்சியம் முற்றும் உண்மை. நான் பொய்ச்சாட்சியம் சொல்லத் தேவையேயில்லை. விஷயம் மிகவும் சாதாரணமான விஷயம். சொன்னால் உங்களுக்குப் புரிந்துவிடும். நான் 19-ஆம் நம்பர் வீட்டில் வசித்தேன். அதை விட்டுக் கிளம்பியபோது, அதன் கதவில் இருந்த 19-ஆம் நம்பர்த் தகட்டை என் கையோடு பெயர்த்து எடுத்துக்கொண்டு போய்விட்டேன். ஏனென்றால், அந்த நம்பர்த் தகடு அந்த வீட்டிலே நான் போட்ட தகடு. என் விலாசம் 19-ஆம் நம்பராகவே பின்னும் இருந்து வர வேண்டும் என்று நான் விரும்பினேன். புதிய வீட்டிலே இருந்த நம்பர் 23. அந்த 23-ஆம் நம்பரைப் பெயர்த்துத் தள்ளிவிட்டு, என் 19-ஆம் நம்பர்த் தகட்டை அந்த வீட்டுக் கதவிலே பதித்து விட்டேன். இதுதான் நடந்த விஷயம். இதைச் சொன்ன பிறகு யாருக்கும் புரிகிறது. ஆனால், இந்த விஷயத்தை நான் நூற்றுக்கணக்கான நண்பர்களுக்கு விளக்கிச் சொல்ல வேண்டியிருக்கிறது."

"இதை நீங்கள் சாட்சிக் கூண்

டில் இருக்கும்போதே ஏன் விளக்கிச் சொல்லவில்லை?'' என்று நான் கேட்டேன்.

"ஏனா? உங்களுக்குத்தான் தெரிந்திருக்குமே, இந்த வக்கீல் பி என்பவரைக் கண்டாலே எனக்குக் கட்டோடு பிடிக்காது என்று. அவருக்கு நான் எதற்காகச் சமாதானம் சொல்லவேண்டும்? ஒரே ஒரு வார்த்தைகூட அவரிடம் சொல்லாமல் முடிந்தமட்டில் தப்பித்துக் கொள்ளவே எனக்கு விருப்பம். அவர் ஒன்றும் புரியாமல் திண்டாடட்டுமே என்று நான் எண்ணினேன். இந்தத் தகவலை என்னிடமிருந்து கிரகித்துக் கொள்ள அவர் அல்லவா முயன்றிருக்கவேண்டும்? அவர்தாம் என் சாட்சியத்தைக் கேட்டு ஒரேயடியாய் ஆத்திரம் கொண்டுவிட்டாரே! அவர் திணறித் தவித்ததைப் பார்த்து எனக்குக் குஷியாயிருந்தது'' என்றார் நண்பர்.

## அந்தகக் கவிஞர்கள்

முகக்கண் குருடாக இருந்தாலும் அகக்கண் திறந்து ஒளி விடும் புலவர் பலர் உலகம் முழுவதும் இருந்து வருகிறார்கள். தமிழ்க் கவிஞருள் வீரராகவ முதலியார் என்பவர் அந்தகர். அதனால் அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்ற பெயர் அவருக்கு வந்தது. கம்பராமாயணம் முழுவதும் அவருக்குப் பாடம். எந்த இடத்தில் எந்தத் தொடர் வந்திருக்கிறதென்று பரிசோதித்தாலும் விடை சொல்லிவிடுவார். திருக்கழுக்குன்றப் புராணம், திருக்கழுக்குன்ற உலா, திருவாரூர் உலா முதலிய நூல்களை அவர் இயற்றியிருக்கிறார்.

இரட்டையர் என்று மிக்க புகழ்பெற்ற இரண்டு புலவர்களை அறியாத தமிழர் இல்லை. அவர்களில் ஒருவர் குருடர். இருவரும் சேர்ந்தே எங்கும் செல்வார்களாம். பாடல்களும் நூல்களும் இருவரும் சேர்ந்தே இயற்றியிருக்கிறார்கள்.

மாம்பழக் கவிச்சிங்க நாவலர் என்னும் புலவர் பழநியில் வாழ்ந்திருந்தார். அவர் பல பாடல்களை இயற்றி யிருக்கிறார். அவரும் புறக்கண் இல்லாதவர்.

மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடைய மாணாக்கருள் ஒருவராகிய வன்றொண்டச் செட்டியார் என்பவரும் பார்வையற்றவர்.

## விழுந்த இடத்திலேயே இடி

'பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்' என்பார்கள். இடியும் இப்படித்தான் விழுந்த இடத்திலேயே விழுமாம். 'நியூ யார்க் டைம்ஸ் மகஸீன்' என்ற பத்திரிகையில், இவான்ஸ் என்பவர் எழுதுகிறார்:

"ஒரு தடவை விழுந்த இடத்திலேயே மறுபடியும் விழுவது இடியின் இயற்கை. ஒரு தடவை இடி விழுந்த இடம் மின்சாரத்துக்கு நல்ல கண்டக்டர் ஆகிவிடுகிறது. நியூ யார்க் நகரில் உள்ள எம்பயர் ஸ்டேட் பில்டிங்ஸ் என்ற கட்டிடத்தின் உச்சியில் உள்ள கொடிஸ்தம்பத்தில் 60-தடவைக்கு மேல் திரும்பத் திரும்ப இடி விழுந்திருக்கிறது.''



# காந்தி

● **கையை முத்தமிட்டேன்:** ஜோ டேவிட்ஸன் என்ற அமெரிக்கச் சிற்பியும் காந்தியின் தலைமாதிரி சிலை செதுக்கியிருக்கிறார். அவரும் நானும் எங்கள் அநுபவங்களைப் பற்றிப் பரஸ்பரம் பேசிக்கொண்டோம். டேவிட்ஸன் நம் காலத்துப் பல பெரிய மனிதர்களின் உருவச் சிலைகளைச் செதுக்கியிருப்பவர். அவர்களைச் சந்தித்தபோதெல்லாம் தமக்கு ஏமாற்றமே ஏற்பட்டதாக ஜோ ஒப்புக்கொண்டார். அவர்களைச் சூழக் காவலர்களும் அரண்மனையும் இல்லாவிட்டால், அவர்களில் ஒருவர்கூட நம் மனத்தைக் கவரமாட்டார். அவர்களுக்கெல்லாம் மிகவும் மேலாகத் தனித்து நிற்கிறார் காந்தி. அவரது எளிமையிலே ஒரு கம்பீரம் இருக்கிறது. உறையிடாத வெறுங் காலோடு இருக்கும் இந்தச் சின்னஞ் சிறு மனிதர் ஆழமாய் நம் மனத்தைக் கவர்ந்து விடுகிறார். அவரிடம் நமக்கு ஒரு மரியாதை உண்டாகிறது. அதனால், நான் கடைசி முறை அவரிடம் விடை பெறும்போது, பயபக்தியுடன் அவருடைய கையை முத்தமிட்டேன்.

—பிரபல சிற்பி க்ளேர் ஷெரிடன்.

● **மனைவியிடம் கற்றார்:** என் சித்தப்படி நடக்குமாறு என் மனைவியைப் பணியவைக்க முயன்றேன். அப்போது அஹிம்சாதர்மப் பாடத்தை அவளிடம் நான் கற்றேன். ஒரு புறம், அவள் என் சித்தத்தை உறுதியுடன் எதிர்த்து நின்றாள்; மறு புறம், என் முட்டாள்தனத்தால் தனக்கு ஏற்பட்ட துன்பத்தை அமைதியாய் ஏற்று அநுபவித்தாள். இதனால், கடைசியிலே நான் வெட்கமுற்றேன். நான் அவளை ஆளப் பிறந்தவன் என்று எண்ணியிருந்த என் மூடத்தனம் அகன்றது. இறுதியிலே அவள் என் அஹிம்சாதர்ம குருவானாள்.

—காந்திஜி (மகாத்மாவின் மனம்).

* * *

● **குழந்தையும் கதர் நூலும்:** சேலம் ஸ்ரீ டி. ஆதிநாராயண செட்டியார் மகாத்மா காந்தியைத் தம் வீட்டிலே வரவேற்று உபசரித்தார். செட்டியார் தமக்கு இருபது வருஷம் கழித்துப் பிறந்த அருமைக் குழந்தையை மகாத்மாவிடம் அளித்தார். குழந்தையை மகாத்மா தம் கைகளிலே எடுத்துக்கொண்டார். அதை ஏதோ நிறை போடுபவர்

# வாழ்வும் வாக்கும்

நினைப்பதைச் சொல்லுவார், சொல்லுவதைச் செய்கையில் காட்டுவார் காந்திஜி. அவர் வாழ்வு நமக்கு வழிகாட்டி. அவர் சொல் நமக்கு அமுதம்.

போலத் தூக்கிப் பார்த்துக் கொண்டு, "நீங்கள் எனக்கு இவ்வளவு கதர்நூல் கொடுத்தால் என்ன சந்தோஷமாயிருக்கும்!" என்றார். கதர் என்றாலே எவரும் பரிகசித்த காலம் அது. அதனால் தான் அவர் இப்படிச் சொன்னார்!

—பீப்பிள்ஸ் ஹெல்த்.

* * *

● **நேற்றைக்கே செலுத்தினவள்:** கையெழுத்து வேண்டியவர்களுக்கு மகாத்மாஜி இன்னமும் கையெழுத்துக்கள் போட்டுக்கொண்டிருந்தார். அப்போது கூட்டத்தை விலக்கிக் கொண்டு எட்டு வயதுள்ள ஒரு மார்வாடிப் பெண் உள்ளே வந்தாள். அவள் கையிலே மகாத்மாவின் படம் ஒன்று இருந்தது. இந்த மகானின் கையெழுத்தை வாங்க அவளுக்கு இருந்த அளவிறந்த ஆசை புலனாயிற்று. படத்தை முன்னே நீட்டினாள் பெண். அதிலே கையெழுத்துப் போடும்படி மகாத்மாஜியை வேண்டினாள். மகாத்மாஜி மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர். "ஹரிஜன் நிதிக்கு நீ பணம் செலுத்திவிட்டாயா?" என்று உடனே கேட்டார். "ஆஹா! நேற்றே செலுத்திவிட்டேன்" என்றாள் சிறுமி. குழந்தையின் மனம் நோகாதவாறு புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டு, "அப்படியா? அப்படியானால் நானும் உனக்கு நேற்றே கையெழுத்துப் போட்டுத் தந்திருப்பேனே" என்றார் காந்திஜி. வேறொருவராக இருந்தால், குழந்தையின் இளம் வயதைக் கண்டு மனம் இளகிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருப்பார். மகாத்மாஜி கொள்கையில் கண்டிப்பானவர். குழந்தையோ பெரியவரோ, அயல் நாட்டவரோ தம்மவரோ யாருக்காகவும் அவர் அதை விடமாட்டார்.

—ஜி. வி. சந்தாவர்கர் (ரிபப்ளிக்)

* * *

● **தனியொருவனுக்கு உணவுடையிலேயெனில்:** தேசத்திலே தெம்புடைய ஒரே ஒரு மனிதனுக்கோ பெண்ணுக்கோ தொழிலும் உணவும் கிடைக்காதவரையில், நாம் ஓய்ந்திருக்க முடியாது; வயிரார உண்டு களிக்க முடியாது. அப்படி ஓய்ந்திருப்பதிலும் உண்டு களிப்பதிலும் நாம் வெட்கப்படவேண்டும்.

—காந்திஜி (மகாத்மாவின் மனம்.)

**ருஷ்யாவிலிருந்து நம் நாட்டுக்குக் கம்யூனிஸம் மாத்திரம் வரவில்லை; உலகம் புகழும் ஒரு கலைஞரும் வந்தார். அவர்தாம் நிக்கொலாஸ் ரோரிக்.**

# இமயம் அழைத்த கலைஞர்

அச்யுத்

பனி மூடிய இமயமலைச் சிகரங்களைக் கண்டு களிப்பதற்காக இருபத்துநாலு வருஷங்களுக்கு முன் இந்தியாவுக்கு ஒரு ருஷ்ய ஓவியர் வந்தார். தம் இறுதி நாள் வரையில் இமயத்தின் தொடர்பை அவர் விடவில்லை. சென்ற டிசம்பர் மாதம் உயிர் நீத்த ஆசிரியர் நிக்கொலாஸ் ரோரிக் அவர்களே அந்த ஓவியர்.

1874-ஆம் வருஷம் ருஷ்யாவில் பீடர்ஸ்பர்க் என்ற நகரத்தில் ரோரிக் பிறந்தார். சட்டப் பரீட்சைக்குப் படிக்கத் தொடங்கினார். ஆனால் அதை விட்டுக் கலைஞராக மாறினார். வாலிபத்திலேயே பெரிய ஓவியர் என்று புகழ்பெற்றார். சரித்திர காலத்துக்கு முந்திய நிகழ்ச்சிகளையும் வைக்கிங் என்போருடைய பிரயாணங்களையும் சித்திரித்து அவர் வரைந்துள்ள ஓவியங்கள் மிக உயர்ந்தவை. ருஷ்யாவின் புராதனமான சுவர்ச் சித்திரங்களை அவர் ஆராய்ந்தார். மாஸ்கோ நகரத்தில் உள்ள காஸான் ரெயில்வே ஸ்டேஷன் சுவர்களில் அதேமாதிரி சுவர்ச் சித்திரங்களை அவர் தீட்டினார். ருஷ்ய நாடக மேடைகளுக்கும் மிகச் சிறந்த பல காட்சிகளை ரோரிக் அமைத்துக் கொடுத்தார்.

1917-ஆம் ௵ ருஷ்யப் புரட்சிக்குப் பிறகு, அவர் சிலகாலம் அமெரிக்காவில் போய்த் தங்கியிருந்தார். அவருடைய மேதையை உணர்ந்துகொண்ட அமெரிக்கர் அவருக்கு நல்ல ஊக்கம் அளித்தார்கள். அவர் தீட்டிய சித்திரங்களை வைப்பதற்கென்றே ரோரிக் மியூஸியம் என்ற பெயருடன் நியூயார்க் நகரில் ஒரு சித்திரசாலையும் அமைத்தார்கள்.

1924-ஆம் ௵ ரோரிக் இந்தியாவுக்கு வந்தார். பாரத நாட்டின் ஆத்ம ஞானத்தைப்பற்றிக் கேட்டிருந்த அவருக்கு அந்த ஞானத்தில் மிகுந்த ஆர்வம் இருந்தது.

வானத்தோடு கொஞ்சிக் குலவும் இமயமலைச் சிகரங்களைச் சித்திரங்களாகத் தீட்டவேண்டும் என்ற ஆசையால், அவர் இமயமலையருகே வந்து சேர்ந்தார். பஞ்சாபில் இமயமலை அடிவாரத்தில் குலு என்ற இடத்தில் ஒரு வீடு கட்டிக்கொண்டு அங்கேயே வாழலானார். அவர் தீட்டியுள்ள இமயமலைச் சித்திரங்களைக் கணக்கிடவே முடியாது. பளிச்சென்று எடுத்துக் காட்டும் வர்ணங்களைக் குழைத்து அவர் தீட்டியிருக்கும் இமயமலைச் சித்திரங்கள், இன்று உலகத்தின் முக்கியமான சித்திரசாலைகள் அனைத்திலும்

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 1-2-'48), கள்ளிக்கோட்டை.

இருக்கின்றன. அவருடைய இமய மலைச் சித்திரங்களைக் கண்டவர்கள், ஒரு புதுவகையான நீல நிறத்துக்கு 'ரோரிக் நீலம்' என்றே பெயர் சூட்டிவிட்டார்கள்.

பாரத மக்களின் ஆத்ம ஞானம் அவருக்கு மிகுந்த உற்சாகம் கொடுத்தது. அவர் எழுதிய வியாசங்களிலும் புத்தகங்களிலும் இந்த ஆத்ம ஞானத்தின் ஒளியைக் காணலாம்.

கலைகளின் உதவியாலும் நாகரிகத்தின் உதவியாலுமே உலகத்தின் பல்வேறு தேசங்களுக்கும் இடையில் நல்லுணர்ச்சியையும் சகோதர மனப்பான்மையையும் பாசத்தையும் வளர்க்க முடியும் என்று ரோரிக் உறுதியாக நம்பினார். இந்த லட்சியத்துக்காக ஓய்வில்லாமல் உழைத்தார். கலைகளை வளர்ப்பதற்காக அமைந்த எந்த நாட்டு ஸ்தாபனங்களுக்கும் ஞாபகச் சின்னங்களுக்கும் எவ்விதத் தீங்கும் ஏற்படாமல் தாங்கள் காப்பாற்றுவதாக, இருபத்தொரு தேசங்கள் கையெழுத்திட்டு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கின்றன. அதற்கு 'ரோரிக் ஒப்பந்தம்' என்று பெயர். ஏனென்றால், இவருடைய முயற்சியாலேயே அந்த ஒப்பந்தம் ஏற்பட்டது. கலைகளையும் நாகரிகத்தையும் பற்றி ரோரிக் எழுதியுள்ள புத்தகங்கள் இலக்கிய உலகத்திலேயே அழிவில்லாத பொக்கிஷங்களாகும்.

நியூயார்க் நகரிலிருக்கும் ரோரிக் மியூஸியத்தில் ரோரிக் தீட்டிய சித்திரங்கள் ஆயிரத்துக்கு மேல் இருக்கின்றன. வேறு பல இடங்களில் அவருடைய சித்திரங்கள் இரண்டாயிரத்துக்கு மேல் இருக்கின்றன. இந்தியாவில் பரோடா சமஸ்தானத்தின் சித்திரசாலையில் ரோரிக் தீட்டிய பல சித்திரங்கள் இருக்கின்றன. வேறு பல சமஸ்தானங்களிலும் மாகாணங்களிலும் பல சித்திரசாலைகளில் அவருடைய படங்கள் இருக்கின்றன.

அழகை ரோரிக் எவ்வளவு பக்தியுடன் வணங்கினார் என்பதையும் கலைகளாலும் நாகரிகத்தாலுமே உலகத்தில் நல்லுணர்ச்சி பரவ முடியும் என்று அவர் எவ்வளவு உறுதியாக நம்பினார் என்பதையும் அவர் வாக்கிலிருந்தே அறியலாம். அவர் சொல்லுகிறார்:

"கலையே உலகனைத்தையும் ஒற்றுமைப் படுத்தும் சக்தி வாய்ந்தது. கலை பலவாய்ப் பிரிக்க முடியாத ஒன்று. கலைக்குப் பல கிளைகள் உண்டு; என்றாலும் கலை ஒன்றே தான். கலை எல்லோருக்கும் சொந்தம். எல்லோரும் கலையைச் சுவைப்பார்கள். புனிதமான கலைக்கோயிலின் வாசல்கள் எல்லோருக்கும் திறந்திருக்க வேண்டும். எண்ணற்ற உள்ளங்களில் புதிய அன்பைப் பெருக்கி மாறுதல் விளைக்கும் சக்தி கலைக்கு உண்டு. அந்த மாறுதலை எவனும் முதலில் உணராமல் இருக்கலாம். ஆயினும், இறுதியில் கலை அவனைத் தூய்மைப்படுத்திவிடும். கலையைப் பொது மக்களும் அநுபவிக்கத் தக்கவாறு பரப்ப வேண்டும். அவர்கள் தாம் உண்மையிலே கலைக்குப் பாத்தியஸ்தர்கள். சித்திரசாலைகள், நாடக மேடைகள், சர்வகலாசாலைகள், ரெயில்வே ஸ்டேஷன்கள், ஆஸ்பத்திரிகள் ஆகியவற்றை யெல்லாம் கலைப் பொருள்கள் அழகுபடுத்துவதுபோலவே சிறைகளையும் அவை அழகுபடுத்தவேண்டும். இப்படிச் செய்தால், பின்னால் சிறைகளே தேவை இல்லாத நிலை ஏற்பட்டுவிடும்.

"வருங்காலத்தில் மகத்தான நிகழ்ச்சிகளை எதிர்நோக்கி நிற்கிறது மனித வர்க்கம். வருங்கால

நாகரிகத்துக்கு அஸ்திவாரம் கோல வேண்டிய வேளை வந்துவிட்டது. எதற்கும் புது மதிப்பு ஏற்பட்டுக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். மதிப்பற்ற பாங்கி நோட்டுகள் ஜீர்ணமாகும் நிலைமை வந்துவிட்டது. உன்னத தத்துவங்களே மதிப்பரியவை என்ற உண்மையை மனிதன் உணரத் தொடங்கிவிட்டான். சிறந்த கலைகள், நாகரிகம் ஆகியவற்றின் மதிப்பு வெளியுலகின் புயல்களையும் குழப்பங்களையும் தாண்டி உயர்ந்து வருகிறது. சிற்றின்ப வேட்கை மட்டுமே கொண்ட மனிதர்கள்கூட, உயிர் ததும்பும் அழகின் மேன்மையை உணரத் தொடங்கிவிட்டார்கள். தொழிலையும் அழகையும் செயலையும் பற்றி நாம் குறிப்பிடும்போது, எல்லா நாடுகளுக்கும் பொதுவாகவுள்ள ஒரு திட்டத்தையே குறிப்பிடுகிறோம். இப்போது சொற்பொழிவு மேடைகளிலும் காட்சிச் சாலைகளிலும் மட்டுமே விளங்கும் இந்தத் திட்டம் அன்றாட வாழ்க்கையிலும் ஊடுருவி நிற்கவேண்டும். அழகாலும் செயலாலும் நாம் வெற்றி பெறுகிறோம். பனி மூடிய இமயமலையின்மேல் இருந்துகொண்டு நாம் இதைச் சொல்லவில்லை; குழப்பம் நிறைந்த ஒரு நகரத்தின் நடுவில் நின்றுகொண்டே இதை அழுத்தமாகச் சொல்கிறோம். சாசுவதமான சத்தியம் எது என்று உணர்ந்துகொண்டு, முகத்திலே புன்சிரிப்புடன் வருங்காலத்தை நாம் வரவேற்போம்.''

## 'தாய்ப்பால் குடித்தவனா?'

ஒரு காலத்தில் ஒரு பித்தன் இருந்தான். அவன் யாரைக் கண்டாலும், ''நீ தாய்ப்பால் குடித்தவனா?'' என்று கேட்டு வந்தான். இதைக் கேட்டவரெல்லாம் ஒன்றும் புரியாமல் சங்கடப்படுவார்கள். இவன் கருத்துத்தான் என்ன என்று அறிய ஒருவர் விரும்பினார். ''ஆம்; 'நான் தாய்ப்பால் குடித்தவன்தான்'' என்றார். ''நீயே உன் தாயின் மகன். உன் தாய் உன்னை மடிமீது வைத்துக்கொண்டு எந்தப் பாஷையில் கொஞ்சினாளோ அந்தப் பாஷையிலேயே நீ எப்போதும் பேசவேண்டும்'' என்றான் பித்தன். பதில் சொன்னவர் நிமிர்ந்து, ''ஊரார் நினைக்கிறபடி, நீ அப்படி ஒரு பித்தன் அல்ல; உன் மூளையிலே நல்ல விஷயம் இருக்கிறது'' என்றார்.

—குருதயால் மல்லிக் (திரிவேணி)

## குற்றங்களை நிறைத்த பைகள்

பிரம்மா மனிதனைப் படைத்தபோது, மனிதனின் கழுத்திலே இரண்டு பைகளை மாட்டிவிட்டார். ஒன்று முதுகிலும் மற்றது மார்பிலும் தொங்கின. ''ஒரு பையில் உன் குற்றங்களையும் மற்றதில் பிறர் குற்றங்களையும் பொறுக்கிப் போட்டுவை'' என்றார் பிரம்மா.

மனிதனும் அப்படியே செய்யத் தொடங்கினான். ஆனால், மார்புப் பையில் பிறர் குற்றங்களையும் முதுகுப் பையில் தன் குற்றங்களையும் பொறுக்கிப் போட்டுக்கொண்டான். எதற்காக? பிறர் குற்றங்கள் எப்போதும் தன் கண்ணில் படவேண்டும்; தன் குற்றங்கள் ஒருபோதும் தன் கண்ணில் படலாகாது; இதற்காகத்தான். இது அன்று முதல் இன்றுவரையில் தொடர்ந்து நடந்து வருகிறது.

—ஈசாப் கதை.

புராணங்களில் பேய் உண்டு; பைபிளில் பேய் உண்டு; புதிய புதிய கதைகளிலும் பேய் உண்டு. ஆனால் உண்மையில்—

# பேய் உண்டா?

★

உயிர்கள் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே வரும் என்ற பரிணாம வாதத்தை நாம் ஒப்புக் கொண்டால், அந்த வளர்ச்சி மனிதனோடு நிற்கும் என்று சொல்வதற்கில்லை. உடல், உயிர், உள்ளம் என்ற மூன்றிலும் மனிதனையும்விடச் சிறந்த நிலையைப் பெற்ற உயிர்கள் இருக்கத்தான் வேண்டும். மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே ஒரு வகை உயிர் இருக்கவும் வேண்டும். பேய்கள் அல்லது ஆவிகள் இருப்பதாகச் சொல்வது பொய், மோசடி என்றால் அது அர்த்தமற்றது. ஒரு காலத்தில் ஹிப்நாடிஸத்தை வெறும் மயக்கமென்றும் ஏமாற்று வித்தை என்றும் சொல்லிக்கொண் டிருந்தார்கள். இப்போதோ வைத்தியர்களே சிகிச்சை முறையுள் ஒன்றாக அதை ஒப்புக்கொண் டிருக்கிறார்கள். புரொபஸர் ரிச்செட் என்பவர் சூக்ஷ்ம சரீர ஆராய்ச்சியில் முப்பது வருஷம் ஈடுபட்டார். தாம் கண்ட தத்துவங்களை அவர் வெளியிட்டபோது விஞ்ஞானிகள் ஆச்சரியப்பட்டுப் போயினர். அவர் லோகாயதக் கொள்கையுடையவர். ஆகவே அதற்கேற்பத் தம் முடிவுகளுக்கு விளக்கம் கூறுகிறார். உள்ளத்தின் அடியிலே உள்ள சில வகைச் சக்திகளே ஆவியுலகத்து நிகழ்ச்சிகளுக்குக் காரணமென்று அவர் சொல்கிறார். சில வகையான நிகழ்ச்சிகளுக்கு விபரீதமான மூளை நிலை காரணமாக இருக்கலாமென்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனாலும் பைசாசங்கள், பேய்கள், வேதாளங்கள், ஆவிகள் முதலியன உண்டென்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

உடம்பின்றி யிருக்கும் சில உயிர்கள், சிலரைப் பற்றிக்கொண்டு நம்மோடு பேசுகின்றன; அவற்றையே பைசாசங்கள் என்று சொல்கிறோம். பல மனிதர்கள் மிக இளம் பருவத்திலே இறந்து போகிறார்கள்; அவர்கள் இந்த உலகில் பெறவேண்டிய இன்பங்களைப் பெறாமலே போவதால், அவர்களுடைய உயிர்கள் இந்த உலக வாசனையில் ஆழ்ந்திருக்கும்; தங்கள் ஆசைகளைத் தீர்த்துக் கொள்வதற்குத் தம் உறவினரையோ நண்பர்களையோ பிடித்துக் கொள்கின்றன. அவ்வுயிர்களையே பிசாசென்றும் பேயென்றும் சொல்வார்கள்.

மனிதன் இறந்தவுடன் அவனுடைய ஜீவன் பன்னிரண்டு அல்லது பதினைந்து நாட்கள் இந்த உலகத்திலே திரிந்துகொண் டிருக்கும்; பிரேதம் அல்லது பைசாச உருவத்தில் உலவும். உத்தரக் கிரியைகளெல்லாம் நடந்த பிறகு பிரேத நிலையிலிருந்து விடுபட்டுப் பிதுரு லோகத்தை நோக்கிச் செல்

காப்பிரைட்: அஸ்ட்ரலாஜிகல் மகஸீன் (ஆங்கிலம்: ஏப்பிரல் '48), சேஷாத்திரிபுரம், பெங்களூர்.

லும். பிறகு பிதுரு தேவதை யாகும். கிரியைகளைச் சரியாகச் செய்யாவிட்டால் அந்த ஜீவன் பிதுரு லோகத்துக்குச் செல்ல முடியாதபடி இடையூறுகள் நேரும்; அது பிசாசமாகத் திரியுமாம்.

இந்த உடம்பை விட்டபிறகும் உயிர் நிலவுகிறதென்பது பல வகையிலே நிரூபிக்கப் பட்டிருக்கிறது. உலக இன்பங்களை நுகராமலும் வளர்ச்சி பெருமலும் இறந்து போனவர்களின் ஆவிகளே பிசாசங்கள் ஆகின்றன. ஒருவன் நன்ருகப் படித்திருக்கிருன்; ஆனல் தன் கல்வியை மாணுக்கர்களுக்குக் கற்பிக்காமல் இருக்கிருன். அவன் இறந்தால் பிரம்மரக்ஷஸ் ஆகிவிடுவாணும்; அவன் ஆத்மா பிதுரு லோகத்துக்குப் போக முடியாது. அவ்வாறே பெரிய செல்வன் தான தர்மம் செய்யாமல் இறந்துபோனல் அவன் ஆவி பணப் பிசாசாகிவிடும். ஆத்மா என்பது ஒரு சக்தி. சக்தி அழியாதது என்று விஞ்ஞானமும் கூறுகிறது. இது உண்மையானல் மரணம் என்பதே இல்லை. மரணம் என்று நாம் சொல்வது ஒரு நிலையிலிருந்து மற்ரெரு நிலைக்கு மாறும் மாற்றமே ஆகும்; இந்த உடம்பில் உறைந்திருந்த சக்தி இதை விட்டு விட்டுப் புலனுகர்ச்சிக்கு அப்பாற்பட்ட நிலைக்குப் போகிறது.

சிருஷ்டி காலம் முதல் பேய் உண்டா இல்லையா என்பதைப்பற்றி மனித சாதி மூளையைக் குழப்பிக் கொண்டே வந்திருக்கிறது. வெவ்வேருக உள்ள மதங்களெல்லாம் பேய் உண்டு என்பதை வெவ்வேறு மாதிரியாகச் சொல்கின்றன.

பழைய காலத்து மனிதர்கள் சொன்ன எந்த விஷயமானலும் சரி, நவீன விஞ்ஞானிக்குப் புரியாவிட்டாலும், விஞ்ஞான சோதனையினல் அறிய முடியாவிட்டாலும் அதை நம்பக் கூடாது என்று அவன் நினைக்கிருன். தன்னுடைய அறியாமையால் மிகவும் நாசுக்காக அவற்றையெல்லாம் கதைகளென்றும், குருட்டு நம்பிக்கைகளென்றும் கூறி ஒதுக்கி விடுகிருன். தன்னுடைய அறியாமையை நியாயப்படி ஒப்புக்கொள்வதில்லை; இத்தகைய அற்புதமான நிகழ்ச்சிகளை நிரூபிக்கும் வழிகளைக் கண்டுபிடிக்கவும் முயல்வதில்லை. தான் கண்டதே காட்சி என்று தருக்கி அகங்காரத்தால் ஆட்டம் போடுகிருன்.

விஞ்ஞானிகள் பூரண ஞானம் பெற்றவர்களல்ல; அப்போதைக்கப்போது செய்யும் முடிவற்ற சோதனைகளைக் கொண்டு ஆராய்ச்சி செய்யும் நவீனக் கொள்கையில் ஊறியிருக்கும் வரையில் அவர்கள் பூரணஞானம் பெறவும் முடியாது.

பேய்கள் இருப்பதை ஆராய வேண்டுமானல் புறத்திலுள்ள ஆராய்ச்சி பயன்படாது. மன இயல்பையும் உடம்புக்குள்ளும் புறம்பும் வாழும் வாழ்க்கையின் நுண்ணிய தத்துவங்களையும் நன்கு அறிந்து ஆராய்ச்சி செய்யவேண்டும்.

சோதிட நூல் பேய்கள் உண்டென்று சொல்கிறது. தேவகணம், மனுஷகணம், ராக்ஷஸகணம் என்று மூன்று கணங்கள் தங்களுக்குரிய சிறப்பியல்புகளோடு இருக்கின்றன. ஒவ்வொருவனுடைய கிரக நிலையும் அந்த மனிதனுடைய மன இயல்பை விளக்குகிறது. சில கிரகங்கள் பேய்களுக்குத் தோழமை பூண்டவை; சில பகையானவை.

சனியும் ராகுவும் மிகவும் பாபக் கிரகங்கள். இவை தீய பலன்களைக் கொடுக்கின்றன. ஒருவனுடைய லக்கினத்தில் சனியோ ராகுவோ

இருந்தால் அந்த மனிதன் கெட்ட ஆவிகள் அல்லது பேய்களால் துன்பம் அடைவான். உலக இலக்கியங்களில் சைத்தான், பேய்கள், வேதாளங்கள் முதலிய பெயர்கள் அடிபடுகின்றன. ஸம்ஸ்கிருதத்தில் பேய்க்குப் பிசாசம் என்ற பெயர் வழங்குகிறது. ஊனே உணவாகக் கொள்வதால் அந்தப் பெயர் உண்டாயிற்று.

மனிதனுக்கு ஸ்தூல சூக்ஷ்ம காரண சரீரங்கள் ஒன்றனுள்ளே ஒன்ருக அமைந்திருக்கின்றன. காரணசரீரம் என்பது ஆத்மாவே. மரணம் சம்பவிக்கும்போது உடம்புக்கும் அதனுள்ளிருந்து அதை இயக்கிவைத்த சக்திக்கும் பிரிவு நேர்கிறது. மரணம் எல்லாவற்றையும் சோடேயில்லாமல் அழித்து விடுகிறதென்று கூறுவது சரியன்று. ஆகவே, அறிய முடியாத காரணங்களால், உடலும் அதனைச் சார்ந்த ரகசிய தத்துவங்களும் திடீரென்று பெறும் பரிணுமமே பிறப்பு என்றும், மனிதனுக்கு உள்ளும் புறம்புமாக இருந்தவை மேலும் இயங்காத வண்ணம் கலேந்து பிரிந்துவிடுவதே இறப்பு என்றும் சொல்லலாம். மனிதனுக்கு இகலோக வாழ்வு மாத்திரம் உண்டு என்ருல் மனிதர்கள் இந்திரிய சுகத்தைப் பெறுவதிலேயே ஈடுபட்டிருக்கலாம். அப்படிப்பட்ட முயற்சியினுலேதான் உலகத்தில் பாவமும் அருளற்ற காரியங்களும் ஒழுக்கப் பிசகான நடத்தைகளும் உண்டாகியிருக்கின்றனவே. அறிவாற்றல் பெற்று ஆத்மிக விஷயங்களில் சிந்தனையைச் செலுத்தி வேதத்தையும் மற்ற நாட்டிலுள்ள சமய நூல்களையும் சிரத்தையோடு அறியும் இயல்புள்ளவர்கள், மனிதனுடைய ரகசியங்கள் சுலபமாகத் தெளியக் கூடியவை அல்லவென்றும், இகலோக வாழ்வுக்குப் பின்பும் சில வாழ்க்கை நிலை உண்டென்பது பைத்தியக் காரர்களின் பௌராணிகக் கொள்கை அன்று என்றும் அறிவார்கள்.

ஜீவன் உடம்பை இடமாகக் கொண்டு வாழ்கிறது; மரணகாலத்தில் ஸ்தூல சரீரமும் சூக்ஷ்ம சரீரமும் ஒன்றை விட்டு ஒன்று பிரிகின்றன. மரணம் சம்பவிக்கும்போது உடம்பை விட்டுச் சூக்ஷ்ம சரீரமானது கர்மவினையோடு செல்கிறது; கர்மத்துக்கு ஈடான இடத்தை நோக்கிச் செல்கிறது. தினசரி வாழ்க்கையில் மனிதனுடைய மனம் தனக்கு இன்பம் தரும் இடங்களுக்கும் தன் இயல்புக்கு ஏற்ற மக்களின் கூட்டத்துக்கும் இழுத்துச் செல்கிறது. அதே மனேசக்தியானது உடம்பிலிருந்து பிரிந்த காலத்திலும் தனக்கு விருப்பமான இடங்களுக்குச் செல்லும்; உடம்பு வளர்ச்சி பெரும்பாலும் மன வளர்ச்சிக்கு ஏற்றபடி அமைகிறது. தேச பக்தனுக்கும் தர்ம சீலனுக்கும் வரும் கடுமையான சோதனைகளும் கொள்ளைக்காரனுக்கும் கொலைகாரனுக்கும் வரும் சங்கடங்களும் புற அளவில் வேறுபடுவன அல்ல. இருவகையினரும் மிக்க வேதனைக்கு ஆளாகி அல்லலுறுகின்றனர்; உறுதியான சங்கற்பத்தோடு காரியங்களைச் செய்கிருர்கள். ஆனல் ஒரு சாரார் மனம் மனித சமுதாயத்தின் துன்பங்களைப் போக்குவதில் ஈடுபட்டு நிற்க, மற்ெருரு சாரார் மனமோ அவற்றை ஆக்குவதில் ஈடுபடுகிறது.

உடம்பிலிருந்து விடுதலை பெற்ற பிறகு மனம், உடம்புக்குள் இருந்த போது எந்தப் போக்கிலே சென்றதோ அதற்கேற்ப உயிர்நிலைகளை நாடிச் செல்லும். உடம்போடு இருக்கும்போது உடம்பு, மனம் இரண்டும் வளர்ச்சி பெறச் சில வழிகளைப் பண்டை ரிஷிகள் வகுத்திருக்

கிறார்கள். அவற்றை அநுசரித்தால் இறந்த பிறகு மேலும் மேலும் உயர்ந்த கதியை நோக்கிச் செல்ல முடியும். இப்படி மேலும் மேலும் உயர்கதியை நோக்கிச் சென்று கடைசியில் ஞானானந்தமாகிய முக்தியை அடைய முடியும்.

ராமன் என்ற ஒருவன் மிகவும் நல்ல மனிதன்; திருப்தி, அற நினைவு, கடமை உணர்ச்சி, தெய்வ நம்பிக்கை, நேர்மை இவற்றை உடையவன்; கிருஷ்ணன் என்பவனோ அடியோடு கெட்ட மனிதன்; பாவி; அதிருப்தியும், கொலைகார உள்ளமும், அயோக்கியத்தனமும், பிறரை ஏமாற்றும் குணமும், பேராசையும் படைத்தவன். இந்த இருவகை இயல்புகளும் தொழிற்படுவதற்கு இருவேறு மனநிலையின் வளர்ச்சி அமையவேண்டும்; இருவகை உறுதி, இருவகை அறிவு, இருவகையான பொறுமை இருக்கவேண்டும். இந்த இருவர் மனங்களும் இருவேறு கதியிலே செல்கின்றன. ராமனுடைய மனம் மனித ஜாதிக்கு இன்பத்தையும் ஆக்கத்தையும் உண்டாக்க, கிருஷ்ணன் மனமோ துன்பத்தையும் அழிவையும் உண்டாக்குகிறது. இருவருக்கும் மரணம் நேரும்போது இருவருடைய மனநிலையும் வேறு வேறாகத்தான் இருக்கும். ஒருவன் மன அமைதி பெற்றவனாக மரணத்திற்கு அஞ்சாதவனாக இருப்பான்; மற்றவனோ நேர்மாறாக இருப்பான். மரணத்தால் அவர்கள் உடம்பும் உயிரும் பிரிவை அடைகின்றன. அப்பால் இரண்டு ஜீவர்களும் நேர் எதிரான மார்க்கத்தில் தான் பிரயாணம் செய்யவேண்டும். ஏனெனில் அவர்களுடைய பூர்வகர்ம வாசனையானது அவரவர்கள் மன நிலைக்கு ஏற்ற திக்கிலேதான் இழுத்துச் செல்லும். காதல், காமம், பகை, வர்மம், பேராசை, தியாகம், தர்மம், கடமை, அன்பு, நேர்மை, அயோக்கியத்தனம், கர்வம் முதலியன நரம்புகளில் வெவ்வேறு துடிப்பை உண்டாக்குகின்றன. இவற்றால் மூளையின் சிற்றறைகளும் வெவ்வேறு துறையில் இயங்கும். பாவ எண்ணங்கள் மனத்தைக் கெடுக்க, தூய எண்ணங்கள் அதைத் தூயதாக்குகின்றன. மனத்தின் சக்தியை இன்னும் நன்கு உணர்ந்தவர் இல்லை. உடம்போடு இருந்த சமயத்தில் மனம் எத்தகைய உணர்ச்சிகளைக் கொண்டிருந்ததோ அதற்கேற்ப அதன் போக்கை நிர்ணயிக்க வேண்டும்.

மனமானது பேராசை, தீய ஒழுக்கம், பாவங்கள் ஆகியவற்றில் மூழ்கியிருந்தால் அதற்குள் புதைந்திருக்கும் ஜீவனைக் கெட்ட ஆத்மா அல்லது பேய் என்று சொல்வார்கள். திடீரென்று மரணம் நேர்ந்தால் தேகத்திலிருந்து விடுபட்ட அந்த ஆத்மாவானது ஆரோகணகதியில் செல்ல முடியாமல் தடைப்படும்; அப்படிச் செல்வதற்கு முன் அது தூய்மை பெறவேண்டுமாகையால் அது அவரோகணகதியிலே சென்று பாவப் பிராந்தியங்களை அடையும். அப்போது அந்த ஆத்மாவைப் போன்ற மனோபாவமுடைய மனிதர்களைத் துன்புறுத்தும். தெய்வ நம்பிக்கையும் தர்ம சீலமும் உடையவனுடைய ஆத்மாவோ ஆரோகணகதியில் தடையின்றிச் செல்லும். பாவச் சுமையினால் அது கீழே இழுக்கப் படுவதில்லை. தூய கதிகளில் அதற்குள்ள நாட்டம் காரணமாக அது மேலே மேலே செல்லும். அது செய்த கர்ம வினைக்கு ஏற்ப உன்னத நிலையை அடையும். இவை தூய ஆத்மாக்கள்.

நல்ல மனிதர்களாயினும் தற்கொலை செய்துகொண்டால் பேயாகி

ருர்கள் என்பர். அதற்குக் காரணம் என்ன? அவர்கள் இறக்கத் தயாராக இருக்கவில்லை ஆகையால் சில காலம் பேய்நிலையில் இருந்து அப்பால் மேல் கதிக்குச் செல்லவேண்டும். துயரத்தினுல் உள்ளம் சாம்பி உயிரைப் போக்கிக்கொள்ளும் ஒருவனுக்கு அப்போது மனம் சரியான நிலையில் இராது. அந்த நிலை மேல் கதிக்கு ஏற்றபடி இருப்பதில்லை. ஆத்மஹத்தி கொலைசெய்வதைவிடப் பாவமானதென்று சொல்வர்.

பேய் பிசாசுகளின் இயல்புகளையும் வகைகளையும் தெரிவிக்கும் நூல்கள் பல இந்தியாவில் உள்ளன. அந்தப் பேய்களைத் தம் வசப்படுத்தி மனித சக்திக்கு மேற்பட்ட காரியங்களைச் செய்பவர்கள் இருக்கிறார்கள்.

## மனைவியிடம் பட்ட கடன்

அமெரிக்காவைச் சேர்ந்த மின்னஸோட்டா நகரில் ஜான் காஸ்டர் என்ற ஒரு குடியானவர். அவருக்குக் கல்யாணம் ஆகி முப்பது வருஷங்களுக்குப் பிறகு, தம் கிழ மனைவியை விவாக விலக்குச் செய்துகொள்ள விரும்பினுர். ஏன்? இருபது வயது வாலிபப் பெண் ஒருத்தியிடம் அவருக்குக் காதல் பிறந்துவிட்டதால்தான்.

"எனக்கு நீங்கள் பட்ட கடனைக் கணக்குத் தீர்த்துக் கொடுத்து விட்டீர்களானுல், நான் விலகத் தயாராக இருக்கிறேன். நீங்கள் யாரைக் கல்யாணம் செய்துகொண்டாலும் எனக்கு ஆட்சேபமில்லை'' என்று மிகவும் சாந்தமாகச் சொன்னுள் கிழ மனைவி.

விவகாரம் இவ்வளவு சுலபமாக முடிவதிலே கணவருக்குச் சந்தோஷம். "உனக்கு நான் பட்ட கடனுக்கு விரிவான கணக்குக் கொடு. தீர்த்துவிடுகிறேன்'' என்ருர்.

அதன்மேல் கணவனுக்கு மனைவி பின்வரும் கணக்கைச் சமர்ப்பித்தாள்:

**பற்று:**

| | டாலர் |
|---|---|
| 30-வருஷ காலம் குடும்ப நிர்வாகம் புரிந்ததற்குச் சம்பளம் .. | 36,000 |
| 30-வருஷ காலம் பண்ணை எஜமானியாக உத்தியோகம் பார்த்த சம்பளம் .. | 15,000 |
| 30-வருஷ காலம் குழந்தைகளுக்குத் தாதியாகவும் சமையற்காரியாகவும் பணிப் பெண்ணுகவும் வேலை பார்த்த சம்பளம் .. | 24,000 |
| ஆக மொத்தம் .. | 75,000 |

**வரவு:**

| | |
|---|---|
| சாப்பாடு, ஜாகை, துணி வகையரு பெற்றுக் கொண்டதன் மதிப்பு | 15,000 |
| நிகரம் .. | 60,000 |

மேலும் அவள் கூறியதாவது: "இதில் இன்னும் பண மதிப்பே போட முடியாத என் பணிவிடைகள் பலவற்றை நான் விட்டுவிட்டேன். அவற்றையெல்லாம் சேர்த்தால், உங்களால் பணம் கொடுத்தே முடியாது.''

குடியானவர் இந்தக் கணக்கை நியாயம் என்று ஒப்புக்கொண்டார். வாலிபப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளும் யோசனையைக் கைவிட்டார்.

—ஜெம்மெட் (கோபென்ஹேஜென்)

**ஈர இரக்கமில்லாமல் நம் விமர்சகர்களும் பிறரும் சினிமாப் படங்களைக் கண்டிக்கிறார்களே; என்ன அநியாயம்!**

# அழுகல் படங்களின் அவசியம்

எச். நாகசுப்பிரமணியம் & ஜபக்

நமது சினிமாத் தொழில் இப்போதுதான் முளைத்து இரண்டு இலை விட்டுக்கொண்டிருக்கிறது. இதை நம் பட விமர்சகர்களும் சமூக சீர்திருத்த அழுமூஞ்சிகளும் ஒற்றுமையாய்க் கொல்ல முயல்கிறார்கள். என்ன அநியாயம்! நாள் தவறாமல் நம் சினிமாப் படங்களை அவர்கள் திட்டுகிறார்கள். நம்மையெல்லாம் மகாத்மா காந்திகளாகச் செய்துவிடக்கூடிய சினிமாப் படங்கள் அல்லவா வேண்டும் என்கிறார்கள் அவர்கள்! இதெல்லாம் சுத்த அபத்தம்.

அழுகல் சினிமாப் படங்களை நாம் ஆதரித்து நிற்கிறோம். அதன் மூலம் இந்திய சினிமா உலகத்தையே நாம் ஆதரித்து நிற்கிறோம் என்பதை நண்பர்கள் கவனிக்கவேண்டும். உற்பத்தி முதலாளிகள், டைரெக்டர்கள், ஸினரியோ எழுதுவோர், சங்கீத டைரெக்டர்கள், காமிராக்காரர் எல்லோரும் ஏகோபித்துச் சரியான முயற்சியை மேற்கொண்டு பரிபூர்ண அழுகல் படங்களைத் தயாரிக்கிறார்கள். இந்தப் பட விமர்சகர்கள் என்ன செயய முடியும்? இவர்களும் இவர்கள் எழுதும் எழுத்தும் நாசமாய்ப் போக! அழுகல் படங்களை இவர்களால் ஒரு நாளும் கொல்ல முடியாது. அதற்கு நாம் நம் படத் தொழில் நிபுணர்களுக்கும் 40-கோடி இந்திய மக்களுக்குமே நன்றி



பெண்ணாய்ப் பிறந்த பெருமைக்கே பட்டுச் சேலை.

செலுத்த வேண்டும். அந்த நிபுணர்களின் தோல் அப்படிக் காய்த்துப் போயிருக்கிறது; நம் மக்களின் கலைச்சுவை அப்படி நிலை பெற்றிருக்கிறது.

நமது படத் தொழில் அமோகமாய்ச் செழித்துக்கொண்டிருககிறது. இதைச் சிலர் கொல்லப் பார்ப்பதுதான் வேடிக்கை! வெவ்வேறு வகையினரான 117 தொழில்காரர்களும் கலைஞர்களும் நிபுணர்களும் சேர்ந்து, வேலை செய்து பிடிக்கிறார்கள் ஒரே ஓர் அழுகல் படத்தை. 1936-ஆம் வருஷத்தில் (நமது படத் தொழிலின் சகல அம்சங்களையும் போலவே நமது புள்ளி விவரமும் ஐந்து வருஷம் பிந்தி நிற்கிறது) 110 பட உற்பத்தி முதலாளிகளும், 100 பட விநியோகிகளும், 678 கொட்டகைகளும், 57,284 ஜனங்களும் நேரே படத்

காப்பிரைட்: ஸவுண்ட (ஆங்கிலம்: மார்ச்ச '48),
ஸர் பி. எம். ரோட், கோட்டை, பம்பாய்.



முதுகு பதமில்லாத நட்சத்திரக் குஞ்சு.

தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். இப்போது இந்தப் புள்ளி விவரங்கள் குறைந்த பட்சம் நாலு மடங்காவது பெருகி இருக்கும். சர்க்காருக்கு 14 கோடி ரூபாய்க்கு மேல் தமாஷ் வரி (நாசமாய்ப் போக இந்த வார்த்தை) கிடைத்திருக்கிறது. ஆகவே, மேலும் மேலும் அழுகல் படங்கள் கிளம்புவதால், என்ன ஏற்படுகிறது? மேலும் மேலும் அதிகமான ஜனங்களுக்கு வேலை கிடைக்கிறது; அதிகமான வரி சர்க்காருக்குக் கிடைக்கிறது; அதிகமான நிதி குதிரைப் பந்தயச் சங்கத்துக்குக் கிடைக்கிறது; அதிகமான போஷகர்கள் சூதாட்ட மண்டபங்களுக்குக் கிடைக்கிறார்கள்; அதிகமான வாடிக்கைக்காரர்கள் மதுபான ஹோட்டல்களுக்குக் கிடைக்கிறார்கள்; பெண்ணாய்ப் பிறந்த ஒரே பெருமைக்காகப் பல பெண்களுக்கு அதிகமான பட்டுப் புடைவைகளும் வெல்வெட்டு ரவிக்கைகளும் கிடைக்கின்றன.

அழுகல் படங்களை எதிர்க்கும் இந்தக் கலகக்காரர்களுக்கு வெற்றி ஏற்பட்டுவிடுமானால், என்ன விபரீதம் நேரும் என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். பட விமர்சகர்களுக்கே வேலையில்லாமல் தரித்திரம் வந்துவிடும். சினிமா விளம்பர நிபுணர்களும், சினிமாப் பத்திரிகைக்காரர்களுமே வேலையில்லாமல் தவிப்பார்கள். கூடாது, ஆண்டவனே, கூடாது. இந்த அழுகல் படங்கள் மறையவே கூடாது. அவை மறைந்தால், தேசமே நாசமாகும்; ஏன்? சர்வதேசத்துக்குமே-முக்கியமாக ஸ்காட்லாந்துக்கு - அபாயம் நேரும்.

நல்ல படங்கள் வந்தால் என்ன ஆகும்? சின்ன மீன்களெல்லாம் செத்துப்போகும். அப்புறம் போட்டியென்பதே இல்லாமல் போய்விடும். தொழிலுக்கு இது கெடுதி அல்லவா? காளான் மாதிரி புதுப் புதுப் பட முதலாளிகள் வந்தால்தானே தொழில் வலுக்கும்? ஒவ்வொரு புது முதலாளியும் சில ஆயிர ரூபாய்களைக் கொண்டு வந்து, வாணவேடிக்கை செய்துவிட்டுப் போவார். தொழில்காரர்களுக்கு அவர்கள் வாங்கிய அட்வான்ஸ் மிச்சம். ஒரு முதலாளி தோன்றி மறைந்ததும், அடுத்த முதலாளியிடம் போய் அட்வான்ஸ் வாங்கிக் கொண்டு கவலையில்லாமல் அந்தத் தொழில்காரர்கள் வாழலாம்.

புதுப் புதுக் கம்பெனி முளைப்பதால், அழுகல் படங்களுக்கு நல்ல



காலையிலே கத்தரிப்பு -
மாலையிலே டைரெக்ஷன்.

யோகம் அடிக்கிறது. ஏனென்றால் ஒவ்வொரு காளான் முதலாளியும் புதிதாக ஒவ்வோர் அழுகல் யோசனையோடு தோன்றி, அழுக லில் புதுமை காட்டி நமக்கு ஆனந்த மளிக்கிறார். இந்தக் காளான் முத லாளி முன்னே பின்னே காளான் முதலாளியாக இருந்தவர் அல்ல; காமிராவின் முன் பக்கம் எது, மைக்கின் பின் பக்கம் எது என்று அறியாதவர்; 'லட்சியம்', 'முன் னேற்றம்' என்ற பொருளற்ற சொற் கள் உண்டு என்றே தெரியாதவர். இப்பேர்ப்பட்டவர்தாம் ஒரே நட் சத்திர மயமாய் வைத்திழைத்து ஆதியந்தம் ஆடலும் பாடலும் நிறைந்து ஜொலிக்கும் அபாரமான உண்மையான தடபுடலான அழுகல் படம் ஒன்றைத் தயாரிக்க முடியும். இதற்காகத்தான் நாம் படுக்கப் போகும்போது நாள்தோறும் கட வுளை நோக்கி, "ஆண்டவனே, இந்த மாதிரி மேலும் பல காளான் பட முதலாளிமாரைத் தோன்றச் செய்ய வேண்டும்; ஒவ்வொருவ ராகவோ இருவர் இருவராகவோ அல்ல; புற்றீசல் போலக் கூட்டங் கூட்டமாக அவர்கள் தோன்றச் செய்யவேண்டும்" என்று பிரார்த் தித்து வருகிறோம்.

அழுகல் படங்களும் காளான் பட முதலாளிகளும் இல்லையென்று வைத்துக்கொள்ளுங்கள். நம்மு டைய பிரபல ஸ்டுடியோ சொந்தக் காரர்கள் பலருடைய கதி என்ன ஆகும்? அவர்கள் எப்படியும் படம் எடுத்துத்தான் ஆகவேண்டும். அழு கல் படங்கள் இல்லையென்றால், படங்களுக்கு விஷயம் கிடைப்பதே மிக்க அரிதாகிவிடும். இன்றோ அது மகா சுலபம். யாராவது ஒரு பித்துக்கொள்ளியைப் பிடித்து, ஏதாவது ஓர் அமெரிக்கச் சினிமாப் படம் பார்க்க அழைத்துச் செல்ல வேண்டியது. அந்தப் படத்தின் கதையை முழுக்க முழுக்கக் காப்பி யடிக்கச் சொல்லவேண்டியது. கதை தயார். அல்லது, சரித்திரப் புத்தகத்தையோ பழம் புராணத் தையோ புரட்டினால், பட முத லாளியே கதை தயாரித்துவிடலாம்.

அழுகல் படங்கள் இல்லாவிட் டால், நட்சத்திரங்களெல்லாம் திண் டாடிப் போவார்கள். எந்த நடிகை யும் எழு படங்களுக்கு ஒப்பந்தம் செய்துகொள்ள முடியாது. கிழவி களெல்லாம் மனமில்லாமலே வெளியேற நேரும். தேகத்தையும் மூளையையும் சிரமப்படுத்தி, நட்சத் திரங்கள் நடிக்கவேண்டிய நிர்ப்பந் தம் உண்டாகும். கூடாது, கூடாது; அழுகல் படங்கள் ஒரு நாளும் சாகக்கூடாது.

அழுகல் படங்களைக் கொன்றால், பட டைரெக்டர்களின் நிலை இன் னும் மோசமாகும். எந்தத் தையற் காரரும் ஒரு நாள் எழுந்ததும் தம் கத்தரிக்கோலை வீசி எறிந்துவிட்டு, அன்று மாலையே ஒருபட டைரெக்ட ராகப் பரிணமிக்கும் காரியம் முடியா மல் போய்விடும். வினரியோக்களை ஸ்டுடியோவிலேயே தயாரிக்க நேரும்; கேளிக்கைக் கூடங்களிலே தயாரிக்க முடியாது. படத்திலே நினைத்த இடங்களிலே பாட்டைச் சேர்க்க முடியாது. செத்துவிழுந்து கொண்டிருக்கும் கதாநாயகிகளும் பித்துப்பிடித்த கதாநாயகர்களும் சங்கீத மாரி பொழிய முடியாமல் போகும். அந்த அபாயம் வராமல் ஆண்டவன் தடுப்பாராக! வாழ்க அழுகல் படங்கள்!

பிரத்தியட்ச வாழ்க்கையிலே காணும் பல விஷயங்கள் நமக்குச் சள்ளையாக இருக்கின்றன; பல கட்டுப்பாடுகள் நமக்குத் தொல்லை தருகின்றன. படங்கள் - நம் அழு

கல் படங்கள்-அந்தத் தொல்லைகளை நீக்கி அழகுபடுத்திவிடுகின்றன. அந்தப் படங்களில் தென்படும் பாத்திரங்களை நாம் இந்த உலகத்தில் வேறு எங்கேயாவது காண முடியுமா? ஆஹா! அவர்களிடந்தான் என்ன வீரம்! என்ன தீரம்! என்ன தூய்மை! என்ன பயங்கரம்! என்ன உன்னத லட்சியம்! இப்படிப்பட்ட பாத்திரங்களைக் கதைகளிலேகூடக் காண முடியாதே! மரங்களையும் புதர்களையும் சுற்றிச் சுற்றி வந்து அவர்கள் காதல் செய்யும் அழகே அழகு. பரம அயோக்கியர்கள், படத்தின் பன்னிரண்டாவது சுருளிலே மனம் மாறும் பரிதாபக் காட்சியை நம் கள்ள மார்க்கெட் முதலாளிகள் கண்டால்கூட உடல் குன்றிப் போவார்களே. பத்து வயதுப் பாலிய நடிகைகளை நீங்கள் முதல் முதலிலே காணும்போது, கையில் அகப்பட்ட கட்டையைக் கொண்டு அவர்களின் முதுகுத் தோலைப் பதம் பார்க்கலாமா என்றுதான் உங்களுக்குத் தோன்றும். ஆனால், அவர்கள்தாம் என்ன என்ன விசித்திரமான விபரீதமான நடிப்பெல்லாம் நடித்துக் காதலரின் பிரிவாற்றாமையை மாற்றிவிடுகிறார்கள். ஏ அல்லா! ஏ கோவிந்தா! ஏ ஜிஹோவா! இந்த அழுகல் படங்களை ஒரு நாளும் அழியாமல் காப்பாற்றுவீராக! அழுகல் படங்கள் நீடூழி வாழ்க; அவற்றின் முதலாளிகளும் நீடூழி வாழ்க!

## சங்கீதப் பிரசுரகர்த்தர்

லண்டனில் சங்கீதப் புஸ்தகங்களை வெளியிடும் ஒரு சாமர்த்தியமான பிரசுரகர்த்தர் இருக்கிறார். அவர் காரியாலயத்துக்குப் பிரபல கனவான்கள் எவராவது வந்து எலிவேட்டரில் ஏறும்போது, அங்குள்ள சிப்பந்தி சங்கீதம் பொழியத் தொடங்குவான். கம்பெனியார் மிகச் சமீபத்தில் வெளியிட்டுள்ள சாகித்தியம் ஒன்றையே அவன் பாடுவான். இப்படிச் செய்யவேண்டுமென்று அவனுக்கு அந்தப் பிரசுரகர்த்தர் உத்தரவிட்டிருக்கிறார்.

—காவல்கேட் (லண்டன்).

## வஞ்சகமில்லாத வணக்கம்

லண்டனில் சர்க்கார் மாளிகையான வொயிட் ஹால் மண்டபத்தை நீங்கள் பார்க்கத் தவறலாகாது. அங்கே ஒரு கோடியில், சிரச்சேதம் அடைந்த நம் மன்னர்களில் ஒருவருடைய சிலையை நீங்கள் காணலாம். மறுகோடியில், அந்தச் சிரச்சேதத்தைப் புரிந்த மனிதனின் ஞாபகச் சின்னத்தையும் காணலாம். எல்லாருக்கும் நல்லவனாயிருக்க நாம் முயலும் முயற்சிக்கு இது ஓர் உதாரணம்.

—ஸர் எட்வர்டு ஆப்பிள்டன்.

* * *

மனிதர்களிலே துளியும் குற்றம் இல்லாத உத்தமர்கள் இருவரே உண்டு: ஒருவர் மாண்டுபோனவர்; மற்றவர் பிறவாதவர்.

—சீனப் பழமொழி.

# டலாய் லாமா

## எம். பாலகிருஷ்ண ராவ்

சுதந்தரமான ஆசிய மன்னர்களின் ஆட்சியில் குடிகள் அமைதியாக வாழ்கிறார்கள் என்பதற்கு, திபெத்தின் ஆட்சி முறை ஓர் உதாரணம். யதேச்சாதிகாரத்தோடு திபெத்தை ஆள்பவர் 'டலாய் லாமா'. அவரைப்பற்றிய பல ரசமான தகவல்களை விவரிக்கிறது இந்தக் கட்டுரை.

'திபெத் பீடபூமி பனிக்கு உறைவிடம். அதை ஆள்பவருடைய பெயர் எதுவாயிருந்தாலும் அப்பெயர் வழக்கத்தில் மறைந்தே போய்விடுகிறது. 'கனம் பொருந்திய டலாய் லாமா' என்ற பட்டப் பெயரே நிலைத்து விளங்குகிறது. டலாய் லாமா. என்றால், சற்குண சாகரன் என்பது பொருளாம். உண்மையில் உலகத்திலேயே யதேச்சாதிகாரம் உள்ளவர் இந்த டலாய் லாமா. அவரது ஆட்சி முறையைக் கவனித்துப் பார்த்தால், இந்த அபிப்பிராயமே பலப்படும்.

திபெத் தேசம் 13-மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவற்றை 58-ஜில்லாக்களாகப் பிரித்திருக்கிறார்கள். மாகாணங்களைக் கவர்னர்கள் ஆளுகிறார்கள். ஜில்லாக்களைப் பரிபூரண அதிகாரம் பெற்ற மாஜிஸ்ட்ரேட்டுகள் ஆளுகிறார்கள். நியாயத்தையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்காக 'ஜோங்க்பென்ஸ்' என்ற தனி உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். ஸிவில், மிலிடரி இலாகாக்களிலும் மத சம்பந்தமான அதிகாரிகள் உயர்ந்த பதவிகளை ஏற்று நிர்வகிக்கிறார்கள்.

திபெத் அரசாங்கத்தில் இருவிதமான சபைகள் இருக்கின்றன. ஒன்றின் பெயர் 'காஷக்'. மற்றொன்றின் பெயர் 'ட்ஷோங்கட்'. காஷக் என்பது மந்திரிகளின் சபை; ட்ஷோங்கட் என்பது மதபரிபாலன சபை. இது மதசம்பந்தப்பட்ட முக்கியமான விஷயங்களைச் சர்ச்சை செய்ய அபூர்வமாகக் கூடும். போலீஸ், ராணுவம், நியாயசபை எல்லாம் அரசாங்க சபையில் சேர்ந்தவை. வெளிநாட்டு இலாகாவை மாத்திரம் லாமா தாமே பார்த்துக் கொள்ளுகிறார்.

தேசத்தின் வருமானத்தை ஜனங்களுக்குச் சரியாகச் செலவிடுவதில்லை. வரும்படியில் பாதி கோயில்களுக்கும் மடங்களுக்கும் போய்விடுகிறது. மதத்தையே முக்கியமாகக் கொண்டு நடக்கும் ராஜ்யம், உலகத்துள்ளேயே திபெத் ஒன்றுதான். டலாய் லாமா ராஜீய விவகாரங்களைவிட மத விவகாரங்களையே கவனிக்கிறார். மிராசுதார்களுக்கு நாலில் ஒரு பங்கு செலவிடுகிறார். மிருந்ததுதான் ஜனங்களுக்கு! திபெத் அரசாங்கம் இப்படி ராஜீய ராணுவ விஷயங்களை அசட்டை செய்து வருவதால், அது இன்று உலகிலேயே கேவலமான நிலையில் இருக்கிறது.

காப்பிரைட்: ஆனந்தவாணி (தெலுங்கு: 21-3-'48),
12, தம்பு செட்டி தெரு, சென்னை.

டலாய் லாமா மத விஷயங்களில் தம்மைக் கடவுளின் பிரதிநிதியாகப் பாவித்துக்கொள்ளுகிறார். அவருடைய ராஜீய அதிகாரம் திபெத்தின் எல்லைக்கு உட்பட்டதுதான்; ஆனால் அவருடைய மத ஆட்சி அல்லது ஆத்மிக சம்பந்தமான அதிகாரம் பூடான், டார்க்கிஸ்தான், லாடக், கிழக்கு ஸைபீரியா, ருஷ்யாவைச் சேர்ந்த கால்மக் ஆகிய இடங்களிலெல்லாம் செல்லுகிறது.

அரசாட்சி இரண்டு சபைகளின் கூட்டாக நடப்பது வாஸ்தவந்தான். ஆனால் உத்தியோகஸ்தர்களை நியமித்தல், மாற்றுதல் முதலியவை டலாய் லாமாவின் இஷ்டப்படிதான் நடக்கின்றன. ஸிவில், கிரிமினல், மிலிடரி இலாகாக்களிலும் அவர் வைத்ததுதான் சட்டம். எல்லாவற்றையும்விட வேடிக்கையானது ஒன்று பாருங்கள். லாமாவின் அந்தரங்கக் காரியதரிசி, எழுதவேண்டியவற்றையெல்லாம் எழுதிவிடுவார். அவற்றை லாமாவிடம் நேரில் காட்டி அவர் கையொப்பம் வாங்க அவருக்குச் சந்தர்ப்பமே கிடைக்காதாம். அதனால் எழுதிய விஷயங்களின் கீழே 'ஆமாம்' என்றும் 'இல்லை' என்றும் காரியதரிசி இரண்டு வரிகள் எழுதி வைத்துவிடுவாராம். டலாய் லாமா எல்லாவற்றையும் படித்துவிட்டுத் தம் சம்மதத்தைத் தெரிவிக்க, அந்த இரண்டில் ஏதாவது ஒன்றின்மேல் பளபளப்பான நீல மையால் ஒரு புள்ளி வைத்துவிடுவாராம். அது அவருடைய தீர்ப்பை முடிவாகச் சொல்லிவிடுகிறது.

திபெத்தின் தலைநகராகிய 'லாஸா'வின் ஊர்க் கோடியில் ஒரு சிறிய குன்றின்மேல் அரண்மனை இருக்கிறது. அதில் டலாய் லாமா வசிக்கிறார். அதன் அழகிய பெயர் 'பாடலா'. அரண்மனை பதினோர் அடுக்குள்ள பெரிய கட்டிடம். அரண்மனையைச் சேர்ந்த சில அறைகளில் சரித்திர சம்பந்தமாகவும் மத சம்பந்தமாகவும் பிரசித்தி பெற்ற சில பொம்மைகளை வைத்துப் பாதுகாக்கிறார்கள். அவற்றில் இரண்டு முக்கியமானவை. ஒன்று 'ஸாங்ட்ஸான்க் யாம்போ' என்னும் அரசனுடைய சித்திரம். மற்றொன்று திபெத்வாசிகளுக்குப் பிரியமான கடவுளாகிய 'ஸென்ரெஸீ'யின் தங்கவிக்கிரகம். அரண்மனையினுள்ளே பாதுகாப்பான இடத்தில் அரசருடைய சொந்தச் சொத்துக்கள் இருக்கின்றன. அரண்மனையின் மத்திய பாகத்தில் இருக்கும் 'அருணபவன'த்தில் இறந்துபோன திபெத் அரசர்களுடைய சமாதிகள் இருக்கின்றன.

இன்றைய நாகரிக உலகில் வேடிக்கையான தேசம், இமாலயத்தை ஒட்டிய திபெத் ஒன்றுதான். நவநாகரிகச் சின்னம் இன்னும் அந்நாட்டில் வேரூன்றவில்லை. மதவெறியில் மூழ்கி, விஞ்ஞான அறிவை அடையும் முயற்சியை விட்டு, யதேச்சாதிகாரியாகிய டலாய் லாமாவுக்குக் கட்டுப்பட்டு அந்நாட்டு மக்கள் தம் வாழ்க்கைத் தோணியைச் செலுத்துகிறார்கள்.

ஒரு விஷயம் மாத்திரம் ஆறுதலைக் கொடுக்கிறது. அராஜகம் என்னும் சூறாவளி அங்கே தலைகாட்டவில்லை. ஹிட்லர், முஸோலினி போன்ற சர்வாதிகாரிகளையும் மிஞ்சிய டலாய் லாமாவின் அரசாட்சியில் குடிகளின் வாழ்க்கை அமைதியுடன் நடக்கிறது. ஆசியாக்காரர்களின் சர்வாதிகாரத்துக்கும் ஐரோப்பியர்களின் சர்வாதிகாரத்துக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் உண்டு என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

# ஸாதாராவில் போட்டி சர்க்கார்

**உமாசங்கர்**

**“செய் அல்லது செத்துப் போ” என்ற மந்திரத்தை மகாத்மா 1942-இல் கோஷித்தவுடனே நாடெங்கும் மகத்தான புரட்சி ஏற்பட்டது. ஒரு சாதாரண மனிதர் ஸாதாராவிலே ஐந்நூறு துணைவர்களோடு போட்டி சர்க்காரை ஏற்படுத்தி, பிரிட்டிஷ் அரசாங்கத்தைத் திணற அடித்துவிட்டார். அவரால் எப்படித் தனி அரசாங்கத்தை ஸ்தாபிக்க முடிந்தது? அந்த அற்புதச் செயல் நிகழ்ந்த வரலாறு இது.**

ஆகஸ்டு, '42 புரட்சியை நினைத்துக்கொண்டால், அஷ்டி, சிமூர், பலியா, காஜீபுர் முதலிய எத்தனையோ ஊர்கள் நம் கண் முன்னால் தோன்றுகின்றன. இவற்றிற்கெல்லாம் முன்னணியிலே நிற்கிறது ஸாதாரா. நானா பாடிலும் அவருடைய துணைவர்களும் நாட்டின் விடுதலைக்காகப் புரிந்த அசாதாரணச் செயல்கள் நம் நினைவிலே மிளிர்கின்றன.

நானா பாடில் சாதாரண குடும்பத்தில் பிறந்தவர். சிறு வயதில் குஸ்தி போடுவதில் அவருக்கு மிகுந்த ஆசை. அவருடைய கட்டுமஸ்தான உடலைப் பார்த்தால், பயில்வான் என்றே அவரைச் சொல்லத் தோன்றும். காங்கிரஸில் அவர் எந்தப் பதவியையும் வகிக்கவில்லை; எங்காவது காங்கிரஸ் கூட்டம் நடப்பதாக இருந்தால், அதை ஜனங்களுக்கு அறிவிக்க அவர் தமுக்கை எடுத்துக்கொண்டு வந்துவிடுவார்; இப்படித் தமுக்கு அடிப்பதுதான் அவர் வேலை. 1930-க்கும் 1942-க்கும் நடுவே அவர் எட்டுத் தடவை சிறை புகுந்தார். சுதந்தர இந்தியாவைப்பற்றியே அவர் எப்பொழுதும் கனவு கண்டுவந்தார்.

‘இந்தியாவை விட்டுப் போ’ என்ற தீர்மானம் 8, ஆகஸ்டு, 1942-இல் பம்பாயில் நிறைவேறியது. ஆங்கிலேயர் சுலபமாக இந்தியாவை விட்டுப் போகமாட்டார்கள்; வலுக்கட்டாயமாகத்தான் அவர்களைத் துரத்தவேண்டும் என்பதைப் பாடில் உணர்ந்தார். நாடெங்கும் புரட்சித் தீ மூண்டது. எங்கும் அடக்குமுறை தாண்டவமாடியது. பிளேக்கிலும் காலராவிலும் சாவதைவிடச் சுதந்தரப் போரிலே சாவது நல்லது என்று ஸாதாரா வீரர்கள் முடிவு கட்டினார்கள். நானா பாடில் ஐந்நூறு இளைஞர்களைத் திரட்டினார்.

ஹநுமான் லங்கையைக் கொளுத்தியதுபோல, முதலிலே சர்க்கார் கட்டிடங்களைக் கொளுத்தும் வேலை ஆரம்பமாயிற்று. பிறகு இரவோடு இரவாகப் பல தந்திக் கம்பங்களை முறித்துத் தரையில் சாய்த்தார்கள். ஸ்டேஷனைக் கொளுத்தும் எண்ணத்தோடு இவர்கள் சென்றபோது, போலீஸ்காரர்கள் துப்பாக்கியும் கையுமாக நின்றிருந்தார்கள். அவர்கள் சாப்பாட்டுக்குப் போகும் வரையில் இவர்கள் மறைந்து காத்திருந்தார்கள்; பிறகு ஸ்டேஷனி

காப்பிரைட்: விசால பாரத் (ஹிந்தி: ஜனவரி '48),
120/2, அப்பர் ஸர்க்குலர் ரோட், கல்கத்தா.

லிருந்த மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்துவிட்டார்கள். அங்கே இருந்த நான்கு துப்பாக்கிகளையும் இவர்கள் கொண்டுவந்தார்கள்.

நானு பாடில் துப்பாக்கியை இதற்கு முன்னல் பார்த்ததில்லை. அவர் தம் நண்பர் ஒருவரிடம் போய், துப்பாக்கி சுடக் கற்றுக்கொண்டார். தம் துணைவர்களுக்கும் அதைக் கற்றுக்கொடுத்தார்.

கூட்ஸ் வண்டிகளைக் கவிழ்க்கும் திட்டம் தயாராயிற்று. ஓர் இரும்புத் தொழிற்சாலையிலிருந்து தனிப்பட்ட வாள் ஒன்றை வாங்கி வந்தார்கள். அதைக்கொண்டு இரவிலே தண்டவாளத்தை அறுத்து எறிந்தார்கள். பிரயாணிகளின் வண்டியைக் கவிழ்க்க அவர்கள் விரும்பவில்லை; அதனல் நம் சகோதரர்களுக்குந்தானே சேதம்? தண்டவாளத்தை அறுத்துவிட்டு அவர்கள் சிறிது தூரத்தில் ஒளிந்துகொண்டு வேடிக்கை பார்த்தார்கள். கூட்ஸ் வண்டி வந்தது; எஞ்சின் தரையிலே ஓடிப் பூமியில் புதைந்தது; வாகன்கள் ஒன்றோடு ஒன்று மோதின. அக்கம்பக்கத்து வயலிலிருந்த குடியானவர்களும் வேடிக்கை பார்க்க வந்தார்கள். தேங்காயெண்ணெய் நிரம்பியிருந்த ஒரு டாங்க் உடைந்துவிட்டது. "எங்கள் செருப்புக்கு நிறையத் தேங்காயெண்ணெய் ஊற்றிக் கொண்டே நாங்கள் கூட்டத்தோடு நின்றோம்" என்று பாடில் சொன்னர்.

நானு பாடிலின் ஐந்நூறு துணைவர்களும் பல இன்னல்களைப் பொறுத்துக்கொண்டார்கள். மக்காச்சோளமும், வேர்க்கடலையும், வெல்லமும் தின்று அவர்கள் கடுமையான வேலைகளைச் செய்தார்கள். ஒரு நாள் இரவு நானு பாடில் ஓர் ஊரிலே தங்கினர். ஒரு பெண்மணி அவருடைய சேனைக்காக மாவரைத்து ரொட்டி தட்டினள். நிறைய மாவரைத்ததனல் அவள் கையில் பல இடங்களில் தோல் வழன்று கை வீங்கிவிட்டது. இதைச் சொன்னல் பாடில் மறுபடியும் தன் வீட்டுக்கு வரமாட்டார் என்று எண்ணி அவள் இதை யாரிடமும் தெரிவிக்கவில்லை. ஆனல் பாடிலின் கூரிய பார்வை இதைக் கவனித்துவிட்டது. ஆனல் அவள் தன் கை வீங்கியதற்கு உண்மையான காரணத்தை மட்டும் அவரிடம் சொல்லவேயில்லை.

ஸாதாரா வீரர்கள் எந்த வியாபாரியையும் கொள்ளையடிக்கவில்லை; எந்த வீட்டிலும் கன்னம் வைக்கவில்லை. அரசாங்கப் பணத்தை இவர்கள் மக்களின் செல்வமாகக் கருதினர்கள்; அதைக் கொள்ளையிட்டார்கள். முதலில் இவர்கள் தபால் பணத்தைச் சூறையாடினர்கள். சாலையிலே 'ரன்னர்'கள் போகும்போது, பாடிலின் ஆட்கள் அவர்கள் கண்ணில் மிளகாய்ப் பொடியைத் தூவுவார்கள்; ரன்னர் தபால் பையைப் போட்டுவிடுவான். பிறகு சில நாளைக்கெல்லாம் ரன்னர்கள் தாங்களாகவே இவர்களிடம் பைகளைக் கொடுத்துவிடுவார்கள்.

ஒரு தடவை கராட் தாலுக்காவில் தபால் மோட்டாரை நிறுத்தி டயர்களை ஒட்டையாக்கினர்கள். அந்த மோட்டாரில் நிறைய ஆண்களும் பெண்களும் ஒரு கல்யாணத்துக்குப் போய்த் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள். எங்கே தங்களையும் கொள்ளையடிப்பார்களோ என்று அவர்கள் பயந்தார்கள். "நீங்கள் பயப்பட வேண்டாம். உங்களிடமிருந்து ஒரு தம்பிடிகூட எங்களுக்கு வேண்டாம்" என்று இவர்கள் சொன்ன பிறகுதான், அவர்கள்

முகத்திலே களை உண்டாயிற்று. அந்தத் தபால் மோட்டாரில் இவர்களுக்கு ஐந்நூறு ரூபாய் கிடைத்தது.

பெரிய கொள்ளையாக ஏதாவது அடிக்க வேண்டும் என்று திட்டம் போட்டார்கள். கிர்லோஸ்கர்வாடியைத் தாண்டி ஒரு ஸ்பெஷல் டிரெயின் போவதாக இருந்தது. அதில் நிறையப் பணம் வருவதாகத் தகவல் கிடைத்தது. ஆயுதம் தாங்கிய சிலர் ஸ்டேஷனைத் தாண்டிச் சிறிது தூரத்தில் ஒளிந்துகொண்டார்கள். இன்னும் சிலர் வண்டியை நிறுத்தினார்கள். வண்டி நகராமலிருக்க நிறையக் கற்களையும் பாறைகளையும் தண்டவாளத்துக்குக் குறுக்கே சுவர்போல அடுக்கி வைத்தார்கள். வண்டிக்கு முன்னும் பின்னும் இப்படி இரண்டு சுவர்கள் எழுந்தன. வண்டி முன்னும் போகவில்லை; பின்னுக்கும் நகரவில்லை. வண்டி நின்றதும், சிலர் டிரைவரிடம் போய்த் துப்பாக்கி முனையைக் காட்டினார்கள். அவன் நடுநடுங்கிப் போனான்; சுய நினைவே அவனுக்கு இல்லை. "நானும் உங்கள் மனிதன் தான். பணம் வேண்டுமானால் அதோ, நடுவிலே போங்கள்" என்று அவன் சொன்னான். இவர்கள் அங்கே போனபொழுது கஜானாவைச் சுற்றி நான்கு கான்ஸ்டபிள்கள் துப்பாக்கியோடு நின்றிருந்தார்கள். அவர்களின் மார்பை நோக்கி இவர்கள் துப்பாக்கியைக் குறி வைத்ததைக் கண்டு அவர்கள் பயந்துபோய், தம் துப்பாக்கிகளைக் கீழே போட்டுவிட்டார்கள். மானேஜரோ பேச்சற்று நின்றான். அந்த நான்கு போலீஸ்காரர்களும் தங்கள் துப்பாக்கிகளை இவர்களிடம் கொடுத்துவிட்டார்கள். அந்தக் கொள்ளையிலே இவர்களுக்கு 19,264 ரூபாய் கிடைத்தது. "கொள்ளையின் போது கீழே சிதறி விழுந்த பணத்தையும் சேகரித்திருந்தால், இன்னும் இருபதினாயிரம் ரூபாய் கிடைத்திருக்கும்" என்று ஒருவன் சொன்னான்.

ஸாதாரா வீரர்களுக்குக் கிடைத்த ஆயுதங்கள் கோவாவிலிருந்து வந்தன. அவற்றைக் கொண்டுவந்த செய்தி மிகவும் ரசமானது. கோவாவிலே இருந்த சில பெண்களிடம் நானா பாடில் இந்தப் பொறுப்பைச் சுமத்தினார். அந்தப் பெண்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் பிறர் சந்தேகப்படாமலிருப்பதற்காக, அவர்களைக் காலேஜ் பெண்களைப் போல உடையணியச் செய்து, அவர்கள் கையிலே பருமனான நாலைந்து ஆங்கிலப் புத்தகங்களைக் கொடுத்தார்கள். ஒரு சிறிய குடை வேறு. அந்தப் பெண்கள் தம் பிரயாணம் முழுவதிலும் புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டிருப்பார்கள். பார்ப்பதற்கு அவர்கள் மும்முரமாகப் படிப்பதாகத் தோன்றும். அவர்களிடம் படுக்கையும் இருக்கும். கோவாவில் ஆயுதங்களை வாங்கி அவர்களிடம் கொடுத்துவிடுவார்கள். அவர்கள் அவற்றை இந்தப் படுக்கையில் வைத்துக்கொண்டு வருவார்கள். ஸ்டேஷனில் பாடிலின் ஆட்கள் தயாராகக் காத்திருந்து, அந்தச் சாமான்களைக் கூலிக்காரர்கள் தலையில் ஏற்றிக்கொண்டு வருவார்கள். வழியிலே ஏதாவது ஒரு படுக்கையை அதிகாரிகள் சோதனை போட்டாலும், "இது என் படுக்கை அல்ல; வேறு யாருடையதோ, தெரியாது!" என்று பதில் சொல்லும்படி அந்தப் பெண்களுக்குக் கட்டளை. ஆனால் இப்படி யாரும் சோதனை போடவே இல்லை.

ஸாதாரா வீரர்களுக்குப் போதிய ஆயுதங்கள் கிடைத்துவிட்டன.

இனி அவர்கள் மிகப் பெரிய கொள்ளையிலே முனைந்தார்கள். தாலியாவிலிருந்து நிறையப் பணம் வரப் போவதாகத் தெரியவந்தது. சர்க்கார் கஜானாவோடு காலையில் அந்த மோட்டார் புறப்பட்டது. அது மூன்று மைல் தூரம் வந்திருக்கும்; சாலையிலே ஒருவன், "ஐயா, எனக்குத் தாங்க முடியாத வயிற்றுவலி; என்னை எப்படியாவது இந்த வண்டியில் டவுனுக்கு அழைத்துச் செல்லுங்கள்" என்று கெஞ்சினான். டிரைவர் அவனிடம் இரக்கம் கொண்டு, மோட்டாரில் அவனை ஏற்றிக்கொண்டான்; வெற்றிலை பாக்குக்காக அவனிடம் கொஞ்சம் பணமும் வாங்கிக்கொண்டான். மோட்டாரில் நாலு சிப்பாய்கள் இருந்தார்கள்; அவர்களும் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டார்கள். "ஐயா, உங்கள் துப்பாக்கிகளைக் கண்டால் எனக்குப் பயமாக இருக்கிறது!" என்றான் அந்த மனிதன். "உனக்கு எதுக்கு அப்பா பயம்? இவை வெற்றுத் துப்பாக்கிகள்; உள்ளே ரவை இல்லை" என்று சிப்பாய்கள் அவனுக்குச் சமாதானம் சொன்னார்கள்.

சற்றுத் தூரம் போனதும், இன்னும் நான்கு பேர் சாலையிலே நின்றிருந்தார்கள்; "எங்களுக்கு அவசரமாக டவுனுக்குப் போகவேண்டும். வண்டிச் சத்தம் எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளுங்கள். எங்களை ஏற்றிக்கொண்டால் பெரிய உபகாரமாக இருக்கும்" என்றார்கள். "மோட்டாரில் இடம் இல்லை" என்றான் டிரைவர். "பரவாயில்லை, இரண்டு பேர் உள்ளேயும், இரண்டுபேர் மோட்டாரின் மேல்தட்டிலும் உட்கார்ந்துகொள்கிறோம்" என்று அவர்கள் சொன்னார்கள். பணம் என்றால் யாருக்குத்தான் கசக்கும்? டிரைவரும் போலீஸாரும் அவர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு, இருவரை மோட்டாருக்கு உள்ளேயும் மற்ற இருவரை மேல்தட்டிலும் உட்கார வைத்துக்கொண்டார்கள்.

மோட்டார் வேகமாக ஓடியது. சற்றுத் தூரம் போனதும் நடுச் சாலையில் இரண்டு குடியர்கள் குடிவெறியிலே சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் செருப்பால் அடித்துக்கொண்டார்கள். அவர்களைத் தாண்டிப் போக முடியாமல், டிரைவர் மோட்டாரை நிறுத்தினான். உடனே மோட்டாருக்குள் இருந்தவர்கள் ஏதோ சமிக்ஞை செய்தார்கள். அருகே பதுங்கியிருந்த சிலர் திபுதிபுவென்று ஓடிவந்து டயரை ஓட்டையாக்கிவிட்டார்கள். இதற்குள் வண்டியிலே இருந்தவர்கள் போலீஸாரைத் தாக்கித் துப்பாக்கிகளைப் பிடுங்கிக் கொண்டார்கள். "ஐயோ! நீங்கள் இந்தச் சமயத்தில் உதவி செய்ய வேண்டாமா?" என்று போலீசார் கேட்டதற்கு, "நாங்களும் அவர்களைச் சேர்ந்தவர்களே!" என்ற பதில் கிடைத்தது. போலீசாரும் டிரைவரும் ஸ்தம்பித்துப் போனார்கள். பிறகு ஸீல் வைத்த பெட்டிகளை எடுத்து அங்கேயே உடைத்தார்கள். கற்றை கற்றையாக நோட்டுக்கள் இருந்தன. ஐந்தரை லட்சம் ரூபாய் பாடிலின் ஆட்களுக்குக் கிடைத்தது.

அப்பொழுது பகல் பதினொரு மணி. நோட்டுக் கட்டுகளுடன் இவர்கள் பதினாறு மணி நேரம் ஓடினார்கள். எதிரே மற்றொரு மோட்டார் வந்தது. அதில் இருந்தவர்கள் இவர்களைத் துப்பாக்கியால் சுட்டார்கள். தொடையிலும் முழங்காலிலும் குண்டு பட்டும் இவர்கள்

பணத்தை விடவில்லை. இவர்களும் பதிலுக்குச் சுடவே அந்த மோட்டார் மாயமாக மறைந்துவிட்டது. தமக்குக் கிடைத்த இந்த ஐந்தரை லட்சம் ரூபாய்க்கும் நானு பாடில் தம்பிடி விடாமல் கணக்கு எழுதி வைத்திருக்கிறார்.

பணம் ஏராளமாகக் கிடைத்த பிறகு நானு பாடிலும் அவருடைய துணைவர்களும் ஒழுங்காக அரசியலை ஏற்றுக்கொண்டார்கள். ஸாதாரா ஜில்லாவில் அவர்கள் கிராம ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள். துஷ்டர்களின் காலிலே நானு பாடில் இரும்புத் தகடுகளை அடிக்கச் செய்தார்; அதனால் அவர்கள் பல மாதங்களுக்கு நடக்கவோ வெளியே போகவோ முடியாமற் போயிற்று. இதனால்தான் இதற்குப் "போட்டி சர்க்கார்" என்ற பெயர் வந்தது. நானு பாடில் தம்முடைய வட்டாரத்துக்குள்ளே குடியையும் கள்ள மார்க்கெட்டையும் அறவே ஒழித்து விட்டார். அவர் ஸர்தார் வல்லபபாய் படேலைச் சந்தித்தபொழுது, "என்ன பாடில், ஸாதாராவிலே எத்தனை பேரை ஒழுங்குபடுத்தினீர்கள்?" என்று படேல் கேட்டார். அதாவது, 'குடிகாரர்களிலே எத்தனை பேரை நல்லவர்களாக்கினீர்கள்?' என்பது கருத்து.

நாற்பத்தெட்டு மாதகாலம் வரையில் நானு பாடில் போலீசாரின் கைக்கு அகப்படவேயில்லை. காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்ட பிறகு அவர் மீது இருந்த எல்லாத் தடைகளும் நீங்கின. ஸாதாராவிலே அவர் செய்த புரட்சி அபூர்வமானது; பாரத நாட்டின் வருங்காலத்துச் சந்ததியார் அதை எப்போதும் நினைவிலே வைத்துக்கொண்டிருப்பார்கள்.

## பாதிரி தந்த எழுத்துருவம்

இப்போது ஏ என்ற எழுத்தில் உள்ள கீழ்க்கோடும், ஓவில் உள்ள கீழ்ச்சுழியும் ஏட்டுச்சுவடிகளில் இரா. அப்படியே கே, கோ என்பவற்றில் உள்ள கொம்பின் மேல் சுழியும் காணப்பட மாட்டாது. இவற்றை எழுத்துக்களின் வேறுபாடு தெளிவாகத் தெரிவதற்காக வீரமாமுனிவர் என்ற பெஸ்கி பாதிரியார் புதிதாக அமைத்து எழுதும் வழக்கத்தை உண்டாக்கினர்.

* * *

13-குழந்தைகளுக்குத் தாயான ஒரு பெண்ணை, "இந்தப் பதின்மூன்று பேரையும் கவனித்துக்கொள்ள உனக்கு எப்படி நேரம் கிடைக்கிறது?" என்று மற்றொருத்தி கேட்டாள்.

13-குழந்தைகளின் தாய் சொன்னாள்: "ஒரு குழந்தை பிறந்ததும் அதுவே என் நேரம் முழுவதையும் அபகரித்துக் கொண்டது. மற்றக் குழந்தைகள் வந்து இதற்கு மேல் என்ன செய்ய முடியும்?"

* * *

எந்த வயதிலும் அன்பே மனிதனுக்கு அழகு.

தர்க்கத்துக்கு எட்டாத ஒரு பொருள் பிரபஞ்சத்திலே மறைந்திருக்கிறது. அதை யோகிதான் தேட வேண்டுமா? இலக்கிய கர்த்தாவும் ஏன் தேடக் கூடாது?

# இலக்கியத்தில் ரகஸ்யவாதம்

எஸ். கே. நாயர்

இருபதாவது நூற்றாண்டு பல 'இஸ்'ங்களின் காலம் என்று பல தடவைகளில் நான் நினைப்பது உண்டு. வாழ்க்கையில் எந்தத் துறையைத்தான் 'இஸ்'த்தால் குறிப்பிடாமல் இருக்க முடியும்? மதம், சமுதாயம், ராஜீயம், இலக்கியம் என்ற எதையும் இந்த அளவு கோலால்தான் நாம் அளந்து மதிப்பிட வேண்டியிருக்கிறது. ஆகவே, கம்யூனிஸம், போல்ஷவிஸம், நாஸிஸம், பாஸிஸம், ஸிம்பாலிஸம், மிஸ்டிஸிஸம், க்ளாஸிஸம் முதலிய சொற்கள் இன்று ஏராளமாக நமது வழக்கில் புகுந்திருக்கின்றன. ஆனால், இவைகளின் உண்மைப் பொருளை அறிந்துகொள்ளாமல் ஒன்றை மற்றொன்றாகத் தவறி நினைப்பதால் எவ்வளவோ இன்னல்கள் ஏற்படுகின்றன. இவைகளில் மிஸ்டிஸிஸம் என்ற ரகஸ்யவாதந்தான் மற்ற எதையும்விட மிகுந்த இன்னல்படுகிறது; இன்னல் விளைக்கிறது. இதற்குக் காரணம் இக்காலக் கவிகளையும் கவிதைகளையும் மிஸ்டிஸிஸம் ஆட்கொண்டிருப்பதுதான் என்று ஒரு வதந்தி உலாவுகிறது.

ரகஸ்யவாதத்தைக் குறித்துப் பல கதைகளும் பழிகளும் நம் நாட்டில் ஏராளமாகப் பரவிக் கிடக்கின்றன. பலருக்கும் இது ஒரு மேல்நாட்டுச் சரக்கு என்ற எண்ணம் உண்டு. இது மதத்தின் சுயார்ஜித சொத்து என்பதும், வேதாந்திகள் மட்டுமே இதில் உரிமை கொண்டாடலாம் என்பதும் பலர் கருத்து. இலக்கியத்தில் இது ஒரு புதுப் பகுதி என்று சில இலக்கிய ரசிகர்கள் ஒதுக்கிவைக்கிறார்கள். இவ்வளவு விதமான வாதங்களுக்குக் காரணமான ரகஸ்யவாதத்தைப் பற்றி ஆராய்ந்து அறிவது மிகவும் முக்கியமாகிறது.

மிஸ்டிஸிஸம் என்ற சொல் க்ரீக் பாஷையைச் சேர்ந்தது. அதற்கு, 'உதடுகளைச் சேர்ப்பது', 'கண்களை மூடுவது' போன்ற அர்த்தந்தான் அந்தப் பாஷையில் உண்டு. பிறகு அந்தப் பதத்தை ஆங்கிலேயர் எடுத்துக்கொண்ட பொழுது, 'தியானம் செய்வதாகக் கண்களை மூடிக்கொண்டு மௌனம் சாதிப்பவன் மிஸ்டிக் (ரகஸ்யவாதி)' என்று ஓர் அர்த்தம் ஏற்படத் தொடங்கியது. ஆகவே, தான் கண்ட தத்துவத்தைப் பிறருக்குக் கூறாமல் மௌனம் சாதித்துப் பேசாமடந்தையாக இருப்பவன் என்ற பரிகாசக் கருத்தை விளக்கவும் அந்தச் சொல் உதவியது. காலக்கிரமத்தில் அந்தச் சொல்லுக்கு 'மனத்தை அடக்கி ஆத்ம ஸாக்ஷாத்காரத்துக்காகப் பாடுபடும் மகான் மிஸ்டிக்'

காப்பிரைட்: ஜயகேரளம் (மலையாளம்: 27-3-'48), சென்னை.

என்ற உயர்ந்த பொருளும் கிட்டி விட்டது.

ஆத்மாவைக் காணும் இயல்பு விசேஷ அறிவு படைத்தவரிடம் சகஜமாக இருக்கிறது. ஆயினும், பலர் அதை விரும்பாமல், தள்ளி விடப்பாடு படுகிறார்கள்; சிலர் அதை வளர்த்துக்கொள்ள முயல்கிறார்கள். இந்தக் காலத்துச் சாஸ்திரகாரர்கள் ஆத்ம ஞானத்தில் நம்பிக்கை இல்லாதவர்களாகவும் அதை ஏமாற்றம் என்று இகழ்பவர்களாகவுமே இருந்து வருகிறார்கள். ஆயினும் அவர்களுடைய சாஸ்திரத்தை ஒட்டிய சிந்தனையின் ஆழத்தில் ஆத்ம சக்தி நிலைக்காமல் போகாது என்பது நிச்சயம். அது மேலெழும் போது அவர்கள் மனத்தை உள்ளடக்கி ஆத்மாவைக் காண முயலாமல் இருக்க மாட்டார்கள்.

முன்காலத்திய மனிதர்களுக்கு மனத்தை உள் நோக்கச் செய்யும் சக்தி அதிகமாக இருந்தது. உலகத்தை அடக்கியாளும் சக்தியைப்பற்றி அவர்கள் நன்றாக ஆராய்ந்து அறிந்திருந்தார்கள். இந்தச் சக்தியைத் தான் அவர்கள் ஈச்வரன், ஆத்மா என்று பல விதச் சொற்களால் குறிப்பிட்டு வந்தார்கள்.

உலகத்திலுள்ள எல்லா மதங்களுக்கும் அடிப்படையான தத்துவம் ஆத்மா அல்லது ஈச்வரன்தான். மதங்கள் கடவுளைத் தேடுவதற்குள்ள வழிகளே அல்லவா? அந்த வழிகளின் மூலம் அடையும் ஆத்மாநுபவம் அல்லது ஆனந்தாநுபவமே மிஸ்டிஸிஸம். ஆகவே ரகஸ்யவாதத்தை மதங்களின் தாய் என்று சொல்லலாம். மதாசாரியர்கள் எல்லோரும் தாங்கள் கண்ட ஆத்மாநுபவத்தை மற்றவரும் அடைவதற்கான மார்க்கங்களைக் காட்டியிருக்கிறார்கள். அவைதாம் மதங்கள். இந்த மதாசாரியர்கள் அனைவரும் ரகஸ்யவாதிகளே.

இவ்விதம் ரகஸ்யவாதம் மதத்தையும், மதம் ரகஸ்யவாதத்தையும் தழுவி ஒன்றையொன்று போஷித்துக்கொண்டு நிற்கின்றன. ஸநாதன தர்மத்தின் அடிப்படையான தத்துவம் ஆனந்தாநுபவம் அல்லது பேரின்பமே என்று வேதங்கள் கூறுகின்றன. அத்வைதமதமே ரகஸ்யவாதந்தான். ஏன்? ஏசுநாதரும் ஒரு ரகஸ்யவாதியே அல்லவா? அவருக்கு உள்ளத்தில் உண்டான திவ்ய அநுபவத்தைத்தானே அவர் தம் சிஷ்யர்களுக்கு உபதேசித்தார்? ஏசுநாதருக்குப் பின்பு அவதரித்த சித்தர்களும் ரகஸ்யவாதிகள்தாம். ‘சிருஷ்டியின் ஆரம்பத்தில் வாக்கு உண்டாயிற்று’ என்று கூறும் ஜான் என்ற தீர்க்கதரிசியும் தமக்கு நாதப்பிரம்மத்தின் மூலமாக ஏற்பட்ட திவ்யானந்தத்தையே கூறுவதால் ஒரு ரகஸ்யவாதியே என்பதில் சந்தேகமில்லை. இவ்விதம் மதத்துக்கும் மதாசாரியர்களுக்கும் உள்ள குணவிசேஷமான திவ்யாநுபவமாகவே இந்த ரகஸ்யவாதம் நிலைத்திருக்கிறது.

மதங்களில் தொடங்கிய இந்த ஆத்மாநுபவ முறை காவ்யங்களிலும் புகத் தொடங்கியது. ‘ரகஸ்யவாதம் மதத்தில்தான் இருக்கலாம்; காவியங்களில் வரக்கூடாது. ரகஸ்யவாதம் என்பது ஓர் ஏமாற்றம்’ என்று வாதிப்பவர், மதங்களுக்கும் இலக்கியங்களுக்கும் உள்ள தொடர்பை உணராதவர்களாவர். உண்மையில் இந்த இரண்டையும் போல் நெருங்கிய தொடர்பு கொண்ட வேறு இரண்டு கலைகள் எவையுமே இல்லை என்றே கூறலாம். மதம் இல்லாவிட்டால் இலக்கி

யத்திற்கோ இலக்கியம் இல்லாவிட்டால் மதத்திற்கோ தோற்றமும் இல்லை, ஜீவனும் இல்லை என்று தான் கூறவேண்டும். நமது ஸநாதன தர்மத்தையும் நம் நாட்டு இலக்கியத்தையும் பாருங்கள். பாலையும் சர்க்கரையையும்போல் இரண்டும் ஒன்று சேர்ந்து லயித்து அல்லவா கிடக்கின்றன!

ரிக்வேதம் நமது மதநூல். அதில் காணப்படும் இயற்கை வர்ணனையை இலக்கியம் அல்ல என்று கூற யாருக்குத் துணிவு உண்டு? விருஷாவும், விருத்திரனும், வஜ்ராயுதமும் எல்லாம் மதமும் இலக்கியமும் சேர்ந்த சேர்க்கையில் உதயமான சுந்தர வடிவங்களல்லவா?

மதம் மனிதனுடைய விருப்பங்களைப் பூர்த்தி செய்யச் சில தத்துவ சிந்தனைகளைத் தந்தது. அந்தச் சிந்தனைகளில் இருக்கும் வறட்சியை விலக்கி ரசமூட்டுவதற்கு இலக்கியம் முன்வந்தது. வெளித்தோற்றங்களைக்கொண்டு தற்கால அழகோடு துலங்கும் இலக்கியத்திற்கு மதம் தத்துவத்தைக் கொடுத்து அழிவற்றதாக்கியது. அந்த மதத்தைத்தான் நாம் இலக்கியத்தில் காண்கிறோம். ஆகவே மதம் இலக்கியத்தை உயர்த்துகிறது. இலக்கியம் மதத்தை அழகுபடுத்துகிறது. இந்தக் கால மேதாவிகள் இந்தக் கருத்தைக் கண்டு வியப்பார்கள். அவர்கள் மனிதர்களிடமிருந்து மதத்தையும், இலக்கியத்திலிருந்து உண்மைகளையும் விலக்கிப் பார்ப்பவர்களே யாவார்கள். அதில் சந்தேகம் இல்லை.

## பொருந்தும் சொல்

| | | |
|---|---|---|
| 1. ந | 5. ஞ | 8. ம |
| 2. ச<br>3. க | 6. ப | 9. ர, ல |
| 4. ட, ண, த | 7. ந | 10. ய |

*  *  *

## எத்தனை ஏர் வைத்தாய்?

ஒரு கிராமத்தில் பத்தேர்ச் சமுசாரி ஒருவன், தீர்வைப் பணம் கட்ட வழியில்லாமையால், தன் காணி பூமி முதலிய ஆஸ்திகளையெல்லாம் தோற்று, பரதேசம் போய்விடலாமென்று நினைத்தான். அப்போது பழமுதற் பாக்கிக்காகச் சர்க்கார் சேவகர் வருகிற செய்தியறிந்து, அவர்களுக்கு என்ன உத்தரவு சொல்லுகிறதென்று ஏக்கமுற்று, குடும்பத்தையெல்லாம் துறந்து கோவணாண்டியாய் வெளிப்பட்டான். நடுவழியில் வேறொரு சேவகன் வருவதைக் கண்டு நடுநடுங்கி, ஜைனக் கோயிலொன்றில் போய் ஒளித்தான். கோயிலில் நிர்வாணமாயிருந்த ஆள்மட்டமான ஜைன விக்கிரகத்தைப் பார்த்தான். "ஐயோ! நான் பத்தேர் வைத்துக் கெட்டுக் கோவணத்தோடாவது தப்பி வந்தேன். அப்பா, நீ எத்தனை ஏர் வைத்துக் கெட்டாயோ? உனக்கு இந்தக் கோவணமும் இல்லாமற் போய்விட்டதே?" என்று அதைக் கட்டிக்கொண்டு அழுதான்.

—விநோதரசமஞ்சரி.



# குழந்தைகள் குறும்பு



ஆடும் குதிரைப் பொம்மை மேல் ஏறி இரண்டு சிறுவர்கள் உட்கார்ந்து ஆடிக்கொண்டிருந்தார்கள். நிலைமை நெருக்கடியாயிற்று. அப்போது ஒரு சிறுவன் மறு சிறுவனிடம் சொன்னான்: "அடே! இதிலே இரண்டுபேர் உட்கார்ந்து ஆடினால் நன்றாயில்லை. நம் இரண்டுபேரில் ஒருவன் கீழே இறங்கிவிட வேண்டும். அப்போது நான் ஜோராய் ஆடுவேன்."

* *

**தாய்:** கண்ணா, எந்த மாம்பழம் உனக்கு? எது அப்பாவுக்கு?

**கண்ணன்:** பெரிய பழம் எனக்கு; சின்னது அப்பாவுக்கு.

**தாய்:** பெரியவர்களுக்கு மரியாதை காட்டவேண்டாமா? நீ ஏன் சின்னதை எடுத்துக்கொள்ளக் கூடாது?

**கண்ணன்:** பெரியவர்களுக்கு மரியாதை காட்டுவதற்காக, நான் பொய் சொல்லலாமா, அம்மா?

ஒரு மந்திரவாதியின் கதையைப் படித்துக்கொண்டிருந்தாள் சிறுமி அலமு. அந்த மந்திரவாதி தன் மந்திரக்கோலால் எதைத் தொட்டாலும், அவனுடைய இஷ்டப்படி அது உரு மாறிவிடுமாம். "எனக்கும் இந்தமாதிரி ஒரு மந்திரக்கோல் கிடைக்கக் கூடாதா? கிடைத்தால், என்ன செய்வேன் தெரியுமா? இந்த மேஜையை அப்படியே மைசூர்ப்பாகாக மாற்றி விழுங்கிவிடுவேன்" என்றாள் அலமு.

"என் கண்ணே, இவ்வளவு மைசூர்ப்பாகையும் உன்னால் தின்ன முடியுமா? உனக்குப் பயமாக இல்லையா?" என்று கேட்டாள் தாய்.

"அதெல்லாம் ஒன்றும் பயமில்லை. அப்போது என்னை அந்த மந்திரக் கோலால் ஒரு யானையாக மாற்றிக்கொண்டுவிடுவேன்" என்றாள் அலமு.



வகுப்பில் நீதி போதனை நடந்து கொண்டிருந்தது.

“சொர்க்கம் என்று ஒன்று உண்டு. அதிலே அபூர்வமான நாட்டியம் நடக்கும். இனிமையான பாட்டுப் பாடுவார்கள். எங்கும் காணற்கரிய காட்சிகள் நிகழும். அடைதற்கரிய இன்பங்கள் கிடைக்கும். நரகம் என்று மற்றொன்று உண்டு. அங்கே ஒரே அக்கினி ஜ்வாலையாய் இருக்கும். ஜீவன்களைச் செக்கிலே போட்டு வதைப்பார்கள். இரும்புத்தூணைத் தழுவச் சொல்லுவார்கள். வாள்மேல் நடக்கச் சொல்லுவார்கள். அத்தனையும் பயங்கரமாய் இருக்கும்” என்று வர்ணித்தார் வாத்தியார்.

எதிரிலே முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த அஞ்சு வயதுப் பஞ்சநதம் இதையெல்லாம் வெகு ஆச்சரியத்துடன் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தான்.

“ஏ பஞ்சநதம், உனக்கு எங்கே போக ஆசை? - நரகத்துக்கா, சொர்க்கத்துக்கா?” என்று கேட்டார் வாத்தியார்.

பஞ்சநதம் உற்சாகம் பொங்க எழுந்து, “எனக்கா ஸார்! எனக்கு இரண்டையும் பார்க்க ஆசை, ஸார்!” என்று வெகு ஆவலோடு சொன்னான்.






ஓர் அதிகாரி புதிதாக மோட்டார் பைஸிக்கிள் வாங்கினார். அதில் சவாரி செய்யப் பழகினார். கச்சேரிக்கு அதிலேயே போகத் தொடங்கினார். முதல் நாள் ஒரு லாந்தர்க் கம்பத்தில் உராய்ந்தார். மறுநாள் ஒரு வீட்டுத் திண்ணையில் மோதப் பார்த்தார். மூன்றாவது நாள் அவர் மோட்டார் பைஸிக்கிளை ஒரு நாயின்மீது ஏற்றினார். அதன் குடல் சரிந்து போயிற்று. அன்று முதல் கச்சேரிக்குப் புறப்படும் போதெல்லாம் அதிகாரிக்கு நடுக்கம். மேலும் சில சம்பவங்கள் நடந்தன. அதனால் அந்த அதிகாரி மிகவும் பயந்து போய் அந்தப் பைஸிக்கிளை விற்றுவிட்டார்.

அந்த அதிகாரியின் மகனுக்கு எட்டு வயது. அடுத்த வீட்டுக்காரர் அந்தச் சிறுவனை அழைத்தார். “தம்பி, உங்கள் அப்பா மோட்டார் ஸைக்கிளை விற்றுவிட்டாராமே. பேஷ்! இனிமேல் அவர் பயமில்லாமல் கச்சேரிக்குப் போகலாம்” என்று சொல்லிச் சிரித்தார்.

“ஏன்? அவருக்கென்ன பயம் வந்தது? ரோட்டிலே போறவங்க எல்லாருந்தான் இனிமேல் பயமில்லாமே போவாங்க” என்றான் சிறுவன்.

—பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி,
கோயம்புத்தூர்.

# பாக்கெட் ரேடியோ

★

தீப்பெட்டியின் அளவுக்குச் சட்டைப் பையிலே போட்டுக்கொண்டு செல்லக்கூடிய ஒரு விசித்திரமான ரேடியோவைச் சமீபத்திலே அமெரிக்காவில் கண்டுபிடித்திருக்கிருர்கள். இப்பொழுது அது விற்பனைக்கும் வந்திருக்கிறது. ஒரு பிரசித்த விஞ்ஞானப் பத்திரிகையில் வெளிவந்த ரசமான தகவல்களை ஆதாரமாகக் கொண்டது இந்தக் கட்டுரை.

வாஷிங்டனிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலை ஒன்றுக்குப், 'பீரோ ஆப் ஸ்டாண்டர்ட்ஸ்' என்று பெயர். இங்கேதான் பல புது மாதிரியான யந்திர சாதனங்களைக் கண்டுபிடித்து உருவாக்குகிருர்கள். போர் நடந்தபோது இங்கே உழைத்த பல விஞ்ஞானிகள் பல அரிய சாதனங்களைக் கண்டுபிடித்து உருவாக்கினர். அதில் ஒன்று பாக்கெட் ரேடியோ. அது உண்மையிலேயே பாக்கெட் ரேடியோ. தீப்பெட்டி அளவுதான் இருக்கும். சட்டை ஜேபியிலே போட்டுக்கொள்ளலாம். இந்த மாதிரி பாக்கெட் ரேடியோக்கள் சிலவற்றைச் சில அமெரிக்கக் கம்பெனியார் தயாரித்து, இப்போதே விளம்பரம் செய்து, விற்றும் வருகிருர்கள். இந்த அதிசயமான பாக்கெட் ரேடியோ பிறந்த வரலாற்றை, பாபுலர் ஸயின்ஸ் என்ற பத்திரிகையில், ஹார்லண்ட் மான்செஸ்டர் என்பவர் எழுதியிருக்கிருர்.

மேலே சண்ட பீரோ ஆவ் ஸ்டாண்டர்ட்ஸ் என்ற அரசாங்கத் தொழிற்சாலைக் கட்டிடத்திலிருந்து வெளியே வந்த ஒரு ரேடியோ இஞ்சினீயர் தம் உள்ளங்கையில் ஒலிபரப்பும் நிலையம் ஒன்றையே அடக்கிக்கொண்டு வெளியே வந்தார்! சிகரெட் பெட்டி அளவில் ஒரு பிளாஸ்டிக் பெட்டி அவர் கையில் இருந்தது. இதற்குள்ளேயே ஒலிபரப்புவதற்கு அவசியமான மைக்ரோபோன், ட்யூப் அல்லது வால்வுகள், பேட்டரி, ஏரியல் எல்லாம் அடங்கியிருந்தன. இவர் தம் கையிலிருந்த பெட்டியை நோக்கிப் பேசிக்கொண்டே போனுர். தொழிற்சாலையில் இவர் விட்டு வந்த அறையிலிருந்த 'லவுட் ஸ்பீக்கரி'ல் இவர் பேச்சு, தெளிவாகக் கேட்டது.

போர்க்கால ஆராய்ச்சியின் விளைவாகக் கண்டுபிடித்த ரேடியோ வகையில் இந்த இஞ்சினீயர் எடுத்துச் சென்றதும் ஒன்று. இந்த அரசாங்கத் தொழிற்சாலையில் பெண்கள் உதட்டுக்குச் சாயம் பூசிக்கொள்ள உபயோகிக்கும் 'லிப்ஸ்டிக்' அளவில் ஒலிபரப்பும் நிலையங்கள் இருக்கின்றன. மணிக்கட்டில் கடிகாரம்போல் கட்டிக்கொள்ளக்கூடிய, பௌடர் டப்பா அளவு கொண்ட ஒலிபரப்பிகளை இங்கே செய்கிருர்கள்.

போர் நடந்தபோது குண்டு போடும் விமானங்களைச் சுட்டுத்

தள்ள ஒருவகைப் பீரங்கிகளை உபயோகித்தார்கள். பறக்கும் விமானங்களைச் சுட்டபோது இந்தப் பீரங்கிகளிலிருந்து கிளம்பிய குண்டுகள் விமானங்களைச் சென்று நேரே தாக்காமல் எங்கெல்லாமோ வெடித்துச் சேதமாகிவிட்டன. குண்டுபோடும் ஒரு ஜெர்மன் விமானத்தை வீழ்த்த 2500 குண்டுகள் வரையில் செலவழிக்கவேண்டி இருந்தது.

இப்படிக் குண்டுகள் சேதமாகாமல் விமானங்களை அடித்து வீழ்த்துவது எப்படி என்று பிரிட்டிஷ் விஞ்ஞானிகளும் அமெரிக்க விஞ்ஞானிகளும் ஆராய்ந்தார்கள். பீரங்கிக் குண்டுகளோடு சேர்ந்து மேலே பாயும் சிறு ரேடியோக்களை இவர்கள் கண்டுபிடித்தார்கள். செய்தியை வாங்கும் சக்தி, செய்தியை அனுப்பும் சக்தி ஆகிய இரண்டும் இந்த ரேடியோக்களுக்கு உண்டு. இப்படிப்பட்ட ரேடியோ ஒவ்வொன்றும் ஓர் ஐஸ் கிரீம் அளவுதான்!

குண்டுகளின் முனையில் இந்த ரேடியோக்களை இணைத்துச் சுட்டார்கள். விமானத்தின் அருகே இந்தக் குண்டுகள் சென்று விமானத்தின் சத்த அலைகள் இந்த ரேடியோவைத் தாக்கினபிறகே இப்பொழுது குண்டுகள் வெடித்தன. நேரே சென்று, விமானத்தையும் தாக்கின. எனவே ஒவ்வொரு குண்டும் வீணாகாமல் பயன் தந்தது. இந்த ரேடியோக்களுக்காகச் செய்த வால்வுகள் ஒரு சிகரெட்டில் பாதி அளவுதான் இருந்தன. என்றாலும் நல்ல உறுதி வாய்ந்தவை. இந்த வால்வுகளின் கண்ணாடி உறையும், உள்ளேயிருந்த 'பிலமெண்ட்' என்ற மெல்லிய வலை போன்ற அமைப்பும் லேசில் உடையா. இப்படியாக வால்வுகளைச் சிறியவையாகச் செய்ய விஞ்ஞானிகளால் முடிந்தது. இப்பொழுது ஓர் அரிசி அளவுள்ள வால்வுகூடச் செய்கிறார்கள்! இப்படிச் சிறு வால்வுகள் செய்வதால் ரேடியோவில் வால்வுகளால் அடைபடும் இடம் மிகச் சுருங்கிவிட்டது.

செய்தி வாங்கும் ஒரு ரேடியோவின் பின் பக்கத்தைப் பார்த்தால் அங்கே பல பல மின்சாரக் கம்பிகள் எப்படி எப்படி எல்லாமோ வளைந்து வளைந்து ரேடியோவுக்குள் செல்வதைப் பார்க்கலாம். இதைத்தான் 'ரேடியோ ஸர்க்யூட்' என்பார்கள். ஒவ்வொரு வகை ரேடியோவுக்கும் ஒவ்வொரு வகை ஸர்க்யூட் உண்டு. இப்படிப்பட்ட ஸர்க்யூட் வகைகள் 100-க்கு மேல் இருக்கின்றன. இந்த ஸர்க்யூட்டில் மின்சாரக் கம்பிகள் இப்படி இப்படிப் போகவேண்டும் என்று ஒவ்வொரு கம்பிக்கும் பாதை இருக்கிறது. ஒரு கம்பி தன் பாதையிலிருந்து சற்று விலகினாலும் ரேடியோ வேலை செய்யாது. இந்த ஸர்க்யூட்களைத் தவறில்லாமல் அமைப்பதற்குப் படம் உண்டு. இந்தப் படத்தின் உதவியினால்தான் ரேடியோ இஞ்சினீயர்கள் தவறாமல் ஸர்க்யூட்களை அமைக்கிறார்கள். இந்த ஸர்க்யூட் கம்பிகள் ஒரு வலைபோலப் பின்னிப் பின்னிப் போயிருக்கும். விஷயம் தெரியாத நாம் இந்த ஸர்க்யூட்டைப் பார்த்தால், 'அப்பப்பா! இந்த வலையைப் பிசகாமல் எப்படி அப்பா அமைப்பது?'' என்று தலை சுற்றத் தொடங்கிவிடும்.

இந்த ஸர்க்யூட்தான் ரேடியோவின் உயிர்நாடி. ஸர்க்யூட் கம்பிகள் வால்வுகளில் போய் முடிவடையும். ஸர்க்யூட், வால்வ் இவை

இரண்டும் ரேடியோவின் இருதயம், மூச்சுப்பை போன்றவை. ஸர்க்யூட் கம்பிகள்தாம் ஒலிபரப்பு நிலையத்திலிருந்து வரும் மின்சார அலைகளை வாங்கி வால்வுகளுக்குள் செலுத்துகின்றன. வால்வுகள் இந்த மின்சார அலைகளைத் திரும்பவும் ஒலி அலைகளாக மாற்றி நாம் கேட்கும்படி செய்கின்றன.

இந்த ஸர்க்யூட்டுகளுக்கு வேண்டிய பல மின்சாரக் கம்பிகள் எவ்வளவோ இடத்தை அடைத்துக் கொள்கின்றன. கம்பிகளே இல்லாமல் மின்சாரம் பாயக்கூடிய ஸர்க்யூட் ஒன்றை அமைக்க முடியுமானால் ரேடியோவின் அளவு எவ்வளவோ சுருங்கிவிடும். இதற்காகத்தான் விஞ்ஞானிகள் முயன்றனர்; வெற்றியும் பெற்றனர்.

ரேடியோவின் பின்புறம் கீழே உள்ள, பிளாஸ்டிக் அல்லது செராமிக் தகடுகளில் ஸர்க்யூட் கம்பிகளுக்குப் பதிலாக ஒருவகை வெள்ளி மையில் இந்த ஸர்க்யூட்டை அச்சடித்துப் பார்த்தார்கள். இந்த வெள்ளி மைக்கோடுகள் வழியே மின்சாரம் ஓடும். ஸர்க்யூட்டுக்குத் தகுந்தபடி பிளாக் ஒன்று செய்து வெள்ளி மையால் அச்சடித்துவிட்டார்கள். ரேடியோ முன்போலவே வேலை செய்தது! ஆனால் பல நூறு மின்சாரக் கம்பிகளுக்கு வேண்டிய இடம் மிச்சமாயிற்று.

ஒரு ரேடியோவுக்கு வேண்டிய இந்த ஸர்க்யூட்டை ஒரு விஸிட்டிங் கார்டு அளவிற்குள் அச்சடிக்க முடிந்தது. வால்வுகளின் அளவும் மின்சார பல்ப் அளவிலிருந்து அரிசி அளவுக்குக் குறுகிவிட்டது. ஸர்க்யூட்டின் அளவும் சதுர அடிக் கணக்கிலிருந்து ஒன்றரை அல்லது இரண்டு சதுர அங்குல அளவுக்குக் குறுகிவிட்டது. எனவே சிகரெட் பெட்டி அளவில் பாக்கெட் ரேடியோ செய்ய இப்பொழுது முடிகிறது. கம்பி ஸர்க்யூட்டாக இருந்தால் கம்பிகளில் கோளாறு உண்டாவதாலும் கம்பிகள் இடம் மாறக் கூடுமாதலாலும் அடிக்கடி ரிப்பேர் வந்துவிடும். ஆனால் அச்சடித்த ஸர்க்யூட்டில் இந்தத் தொல்லைகளெல்லாம் இல்லை.

விஞ்ஞானிகள் இன்னும் ஒரு படியும் இந்த ஸர்க்யூட் விஷயத்தில் முன்னேறினார்கள். இந்த ஸர்க்யூட்டை வால்வின் கண்ணாடி உறையின் மேலேயே 'எட்ச்' செய்துவிடுகிறார்கள். எட்ச் செய்யும்போது உபயோகிக்கும் சில ரசாயனப் பொருள்களால் இந்த ஸர்க்யூட்டும் மின்சாரக் கம்பிகள் போலவே மின்சார அலைகளை வாங்கித் தம்மூடே செலுத்தும் சக்தி பெறுகின்றன. இப்படி வால்வின் மேல் ஸர்க்யூட்டை எட்ச் செய்வதால், முன்னால் ஸர்க்யூட்டை அச்சடிப்பதற்குச் செலவான இரண்டு சதுர அங்குல இடங்கூட மிஞ்சுகிறது.

ஸர்க்யூட் எட்ச் செய்தபின் அந்த வால்வே ரேடியோ ஆகிவிடுகிறது. அதிலேயே ஸர்க்யூட்டும் இருக்கிறது, வால்வும் இருக்கிறது. இந்த வால்வைப் பாதி சிகரெட் அளவில் செய்யலாம்; அரிசி அளவிலும் செய்யலாம்.

இந்தப் பாக்கெட் ரேடியோ 5 அங்குல நீளம், 3 அங்குல அகலம், 1 அங்குல உயரம் இருக்கும். இதன் கனம் 9 அவுன்சுக்குள் இருக்கும். மற்ற ரேடியோக்களில் இருப்பதுபோல் இவற்றிலும் ட்யூனிங், வால்யூம் கண்ட்ரோல் இவைகளுக்குக் கைப்பிடிகள் இருக்கின்றன.

**முறை போட்டுக்கொண்டு காலக்கணக்குத் தவறாமல் ஜுரந்தான் மனிதனுக்கு வரும் என்று நினைத்திருந்தோம். தலைவலியும் இப்போது அப்படி வருகிறதாம்!**

# முறைத் தலைவலி

**டாக்டர் ஆனந்தமோகன்**

மைக்ரேன் என்பது முறையாக வரும் ஒரு விதமான தலைவலி. சில நாட்களுக்கு ஒரு தரமோ, சில வருஷங்களுக்கு ஒரு தரமோ, குறிப்பிட்ட வேளையில் இது வரும். ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் இது மிகுதியாக வருகிறது. உடல்வேலை செய்பவர்களைவிட மூளை வேலை செய்பவர்களுக்கு அடிக்கடி வரும்.

இந்த நோயின் லட்சணங்கள் பல விதமாக இருக்கும். பொதுவாக ஒற்றைத் தலைவலி இருக்கும். முதலில் கண்ணில் ஆரம்பித்துத் தலைப் பக்கமாக ஏறி வலி அதிகரிக்கும். சில தடவை விட்டுவிட்டும், சில தடவை ஓயாமலும் வலி இருக்கும். இது இவ்வளவு நேரந்தான் இருக்கும் என்று நிச்சயமில்லை. கண் முன்னால் மின்மினிப் பூச்சிப் பறப்பதுபோல இருக்கும்; சில சமயம் கண்ணை இருட்டும். சிலருக்கு முகம் சிவப்பதும் குளிரெடுப்பதும் உண்டு. பொதுவாக இந்த நோயாளிகளுக்குச் சாப்பாடு பிடிக்காது. தலைவலி ஆரம்பித்ததுமே வயிற்றைப் புரட்டி வாந்தி எடுக்கும்.

மூளைவேலை செய்பவர்களுக்கும் தீவிர உணர்ச்சி வசப்பட்டவர்களுக்கும் நரம்புகள் புடைத்துக் கொள்ளும். இந்த நரம்பதிர்ச்சியை உடல் ஓரளவுக்குத்தான் தாங்கும்; ஆதலால் வலி கடுமையாக இருந்தால், மூளைவேலையையும் தீவிர உணர்ச்சிகளைத் தூண்டும் செயல்களையும் நிறுத்திவிடவேண்டும். சில சமயம் இந்த நரம்பதிர்ச்சி உடலின் வெவ்வேறு அவயவங்களைத் தாக்கி அதனால் உடல்நலம் பெரிதும் கெடுவது உண்டு.

இந்த நோயாளிகளுக்கு மலச்சிக்கலும் தலைவலியும் கூடவே சேர்ந்து வரும். அதனால் தலை சுற்றும்; பித்தம் தலைக்கு ஏறும்; வாந்தி ஆன பிறகுதான் சற்று ஆறுதலாக இருக்கும். மைக்ரேன் வலி வருவதற்கு முன்பே, சோர்வும் பரபரப்பும் சிடுசிடுப்பும் காய்ச்சலும் எதிலும் வெறுப்பும் உண்டாகும்; கண்ணை இருட்டும். அதிலிருந்து தலைவலி வரப்போவதைத் தெரிந்து கொள்ளலாம்.

நோயாளியின் உடல் நிலையையும் மன நிலையையும் நன்கு ஆராய்ந்த பிறகுதான் மைக்ரேனுக்குச் சிகிச்சை செய்யவேண்டும். மிகுதியான மூளை வேலையையும், உணர்ச்சியூட்டும் செயல்களையும் தடுக்கவேண்டும். பொதுவாக இந்த நோயாளிகள் பொறுப்புணர்ச்சி உள்ளவர்களாகவும் அறிவாளிகளாகவும் இருப்பார்கள்; இவர்களுடைய

காப்பிரைட்: விசுவவாணி (ஹிந்தி: ஏப்ரல் '48), அலஹாபாத்.

மூளைக்கும் உடலுக்கும் சமமான வேலை கொடுக்க முயல வேண்டும். ஒழுங்காக உடற்பயிற்சி செய்வது நல்லது. பளுவான ஆகாரமோ காரமோ கூடாது. விரைவில் ஜீர்ண மாகும் லேசான உணவும், பழங் களும், கறிகாய்களும், பால் தயிர் நெய்யும் உண்ணவேண்டும். குறிப் பிட்ட நேரத்தில் உண்பதும், தூங்கு வதும், வேலை செய்வதும், உடற்பயிற் சியும் முக்கியம். சிரமப்பட்டு எந்த வேலையும் செய்யக்கூடாது. இந்த நோயாளி நன்ருகத் தூங்க வேண் டும். பகலில் வேலையினிடையே இரண்டொரு தடவை ஓய்வெடுத்து இளைப்பாற வேண்டும். வேலைகளை மாற்றிச் செய்வதும் நல்லது.

சிறிது மலச்சிக்கல் இருந்தால் கூடத் தலைவலி வந்துவிடும். பெண் களுக்கு மாதவிடாயோடு இது ஆரம்பமாகும். மனத்தில் ஏதாவது போராட்டமோ, உணர்ச்சி வேகமோ, தடுமாற்றமோ ஏற்பட் டால் இந்த வலி தொடங்கிவிடும். வலி ஆரம்பித்தவுடனே வெந்நீரும் எலுமிச்சம்பழ ரசமும் குடிக்கலாம். காலை உயரத் தூக்கி வைத்துக் கொண்டு, இருட்டறையிலே படுத் திருக்க வேண்டும். டாக்டர் கொடுக் கும் மருந்தைத் தவிர வேறு எதையும் வாங்கிச் சாப்பிடலாகாது.

இப்படி நடந்துகொள்வதனுல் இந்த நோயின் கடுமையும் வலியும் படிப்படியாகக் குறையும்.

## எது சரி?

1. **கோச்சகக் கலி:** (அ) ஒரு வகைக் கூத்து (ஆ) கொச்சையான பேச்சு (இ) கலி யுகம் (ஈ) ஒருவகைச் செய்யுள்.

2. **சிங்கடியப்பன்:** (அ) கம் பரைப் பாதுகாத்த வேளாளர் (ஆ) ஒரு சிறு தெய்வம் (இ) சுந்தரமூர்த்திநாயஞர் (ஈ) ஒரு படைவீரன்.

3. **கோகழி:** (அ) பசுவைக் கட் டும் முளை (ஆ) உப்பங்கழி (இ) திருவாவடுதுறை என்னும் சிவ ஸ்தலம் (ஈ) நூல் சுற்றும் கருவி.

4. **உழிஞை:** (அ) ஓர் ஊர் (ஆ) சேர நாட்டிலுள்ளதொரு நதி (இ) ஒருவகை மிருகம் (ஈ) பழைய காலத்துப் போர்நிலையில் ஒரு கட்டத்தில் அணியும் பூ.

5. **ஏரகம்:** (அ) சீரகத்தைப் போன்ற தானியம் (ஆ) உயர்ந்த வீடு (இ) சுவாமிமலை என்னும் சுப்பிரமணிய ஸ்தலம் (ஈ) ஏர் உள்ள இடம்.

6. **பூரவாகினி:** (அ) வங்காளத்தில் உள்ள நதி (ஆ) கலைமகள் (இ) அம்பிகையின் துவார பாலிகை (ஈ) ஒரு பதி விரதை.

7. **காக்கைபாடினி:** (அ) பாடு கின்ற பெண்காக்கை (ஆ) சங்க காலத்தில் இருந்த பெண்புலவர் (இ) பாடத் தெரியாத பெண் (ஈ) ஒரு மூலிகை.

8. **அசுணம்:** (அ) சங்கீதம் உணரும் ஒருவகைப் பிராணி (ஆ) ஒருவகைப் பூச்சி (இ) ஒருவகைச் சுண்ணம் (ஈ) லோபம்.

9. **கையறுநிலை:** (அ) கை அற்றுப்போன உடம்பு (ஆ) கதவு நிலை (இ) இறந்தாரை நினைந்து இரங்கிப் பாடும் துறை (ஈ) நிற்கும் நிலைகளின் பேதம்.

**இதுதான் சரி**

1. ஈ 2. இ 3. இ 4. ஈ 5. இ 6. ஆ 7. ஆ 8. அ 9. இ

மரியாதையும் பணிவும் குழந்தைகளுக்கு வேண்டுமா, வேண்டாமா? அவை பெரியவர்களை எதிர்த்துப் பேச விடலாமா, கூடாதா?

# எதிர்த்துப் பேசும் குழந்தைகள்

## கிளேடிஸ் கார்ட்னர்

'என் குழந்தை என்னை எதிர்த்துப் பேச விடலாமா?' என்று பல பெற்றோர்கள் கேட்கிறார்கள்.

பெரியவர்களைப் பார்க்கலாம். பெரியவர் ஒருவரைக் குற்றஞ் சாட்டி வேறொருவர் ஏதோ சொல்கிறார். தம்மேல் குற்றஞ்சாட்டியது சரியல்ல என்று அவருக்குத் தோன்றுகிறது. அவர் அதற்குப் பதில் கூறுகிறார். உதாரணமாக, ஓர் ஆபீஸில் வேலை செய்யும் ஒருவர் ஒரு நாள் தாமதமாக வேலைக்கு வருகிறார். மானேஜர் அவரைக் கண்டிக்கிறார். தாமதமாக வந்தவருக்கு அதற்குத் தக்க காரணம் இருந்தால் அவர் என்ன செய்கிறார்? பதில் சொல்கிறார்: "இல்லை, நான் வேண்டுமென்று தாமதமாக வரவில்லை. ஆனால்..." என்று காரணத்தைச் சொல்கிறார். இந்த உரிமை பெரியவர்களுக்கு உண்டு. குழந்தைக்கும் இந்த உரிமையைக் கொடுப்பதில் தவறு என்ன?

எல்லா விஷயங்களிலும் குழந்தைகளின் இஷ்டப்படியே பெற்றோர் நடந்துகொள்ள வேண்டும் என்பது இதற்கு அர்த்தமல்ல. குழந்தை ஏதாவது பதில் சொல்ல விரும்பினால் பொறுமையோடு அதைக் கேட்கவேண்டும்; குழந்தை ஏன் ஒரு காரியத்தைச் செய்ய ஆசைப்படுகிறது என்பதை அறிந்து கொள்ள முயல வேண்டும்; குழந்தை தான் செய்த காரியத்துக்கு என்ன காரணம் சொல்லுகிறது என்பதைப் பரிவோடு கேட்க வேண்டும்.

குழந்தை என்ன நினைக்கும், எப்படி ஏற்றுக்கொள்ளும் என்ற நினைப்பே இல்லாமல் நாம் குழந்தைகளுக்கெல்லாம், 'அதைச் செய், இதைச் செய்' என்றும், 'அப்படிச் செய்யாதே, இப்படிச் செய்யாதே' என்றும் உத்தரவு போட்டுவிடுகிறோம். ஒரு குழந்தை வெளியே வந்து விளையாடிக்கொண்டிருந்தான். கடையிலிருந்து சர்க்கரை வாங்கிவர வேண்டும். உடனே அந்தக் குழந்தையின் தாய் ஜன்னல் வழியாக அவனைக் கூப்பிட்டாள். "டிமொதி, வா இங்கே! ஓடிப் போய் அந்த ஸ்டோரிலிருந்து சர்க்கரை வாங்கிவா" என்று உத்தரவு போட்டுவிட்டாள்.

விளையாட்டில் டிமொதியின் கட்சி ஜயிக்கும் சமயம். அடுத்தபடியாக அவன் கிட்டியை எடுத்து விளையாடவேண்டும். "என்ன அம்மா; இன்னும் கொஞ்சநேரம் கழித்துப் போனால் போதாதா?" என்று கெஞ்சினான் டிமொதி.

"வாடா என்றால் வா. இப்பொழுதே போயாகவேண்டும்"

காப்பிரைட்: பேரென்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: பிப்ரவரி '48), 4600, டைவர்ஸி அவென்யூ, சிகாகோ 39, யு. எஸ். ஏ.

என்று அவன் தாய் கண்டிப்பாகக் கட்டளையிட்டுவிட்டாள்.

டிமொதிக்குக் கோபம் ஒரு பக்கம், ஏமாற்றம் ஒரு பக்கம். தன் கையிலிருந்த கிட்டியைக் கீழே வீசி எறிந்தான். ஆத்திரத்தோடு வீட்டுக்குள் நுழைந்தான்.

"நீ அநியாயக்காரி! நீ என் அம்மாவாக இருப்பதே எனக்குப் பிடிக்கவில்லை. என் கட்சி ஜயிக்கும் போதுதானா இந்தப் பாழும் கடைக்குப் போகவேண்டும்?" என்று பொரிந்து கொட்டினான்.

டிமொதியின் தாய்க்குச் சர்க்கரை அப்பொழுது அவசியமாகவே இருக்கலாம். ஆனால் டிமொதிக்கு அந்த வயதில் அவன் விளையாட்டும் அவன் உடல் ஆரோக்கியத்துக்கும் மன ஆரோக்கியத்துக்கும் அவ்வளவு அவசியந்தான். இதை அவன் தாய் உணராததுதான் தவறு. டிமொதி விளையாட்டைத் தொடங்கும் முன்பாவது, விளையாட்டு முடிந்த பிறகாவது அவள் அவனைக் கடைக்கு அனுப்பியிருக்கலாம். அப்பொழுது குழந்தைக்கு ஏமாற்றமும் கோபமும் வெறுப்பும் தோன்ற இடமே இருந்திருக்காது.

குழந்தையைப் பழக்கும்போது அதன் போக்கில் விட்டுச் சாவதானமாகப் பழக்கவேண்டும். விளையாட்டும் வேடிக்கையுமாகப் பழக்கவேண்டும். அடிக்கடி குழந்தைகளைக் கொஞ்சுவதையும் சீராட்டுவதையும் மறந்துவிடவே கூடாது. தன்னிடம் பெற்றோருக்கு உண்மை அன்பு உண்டு என்பதைக் குழந்தை நன்கு உணரவேண்டும்.

வேறு ஒரு வகையிலும் எதிர்ப்பும் ஆத்திரமும் குழந்தைகளிடம் தோன்றலாம். ஜானி பள்ளிக்கூடம் விட்டவுடன் நேரே வீட்டுக்கு வரவேண்டும். வீட்டுக்கு வந்த உடனேயும், பிறகு விளையாடப் போகும்போதும் அம்மாவிடம் போய்ச் சொல்லவேண்டும் என்பது ஜானியின் தாய் போட்டிருந்த உத்தரவு. ஒரு நாள் ஜானி மாலையில் வீட்டுக்கு வர ஒரு மணி தாமதமாகி விட்டது. 'குழந்தையை இன்னும் காணவில்லையே?' என்று தாய் கவலையோடு உள்ளுக்கும் வெளிக்குமாக நூறு முறை நடந்துவிட்டாள். கடைசியில் ஜானி வந்தான். தாய்க்கு ஒரே ஆத்திரமாக வந்தது. முதலில் அவனைத் திட்டினாள். பிறகு, "ஜானி, இன்று நீ வர ஒரு மணி தாமதம் ஆகிவிட்டது. நீ நேராக உன் அறைக்குப் போய்விடு. இன்று விளையாடப் போகக் கூடாது" என்று கடுமையான உத்தரவு போட்டுவிட்டாள்.

"இல்லை அம்மா, என்மேல் ஒன்றும் தப்பு இல்லை...." என்று ஜானி ஆரம்பித்தான்.

"போடா ரூமுக்கு. எதிர்த்துப் பேசாதே!" என்று எரிந்து விழுந்தாள் தாய்.

ஆத்திரம் பொங்க ஜானி தன் அறைக்குச் சென்றான்.

இந்தத் தடவை தாயை எதிர்த்துப் பதில் சொல்லும் உரிமை ஜானிக்கு இருந்தது. பள்ளிக்கூடத்து மீன் காட்சிசாலையைச் சுத்தம் செய்ய உதவி செய்யும்படி ஜானியின் உபாத்தியாயர் அவனைக் கேட்டுக்கொண்டாள். ஜானிக்குப் பெருமை தாங்கவில்லை. உபாத்தியாயரோடு கூட இருந்து அந்த வேலையை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்தான். அவன் செய்து வந்தது ஒரு நல்ல வேலை. ஜானியின் தாய் அவன் பதிலுக்குச் செவி சாய்த்திருந்தால் அவளும் பெருமைப்பட்டுத்தான் இருப்பாள். ஆனால் அவள் கோபம் எல்லாவற்றையும் கெடுத்துவிட்டதே.

நியாயமான பேச்சுரிமையைக் குழந்தைக்குக் கொடுக்கவேண்டியது அவசியந்தான். ஆனல் முடிவு இல்லாத வாதப் பிரதிவாதங்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது. சில குழந்தைகளுக்கு இப்படி வாய் ஓயாமல் வாதம் செய்யும் பழக்கம் வந்துவிடும். இப்படி நிறையப் பேசித் தன் தப்பை மறைக்கவோ, தாய் தந்தையர்கள் சலித்துப்போய்த் தங்கள் மனத்தை மாற்றிக் கொள்ளும்படி செய்யவோ இந்தக் குழந்தைகள் முயலும். இந்த மாதிரி சமயங்களில் பெற்ருேர் சற்றுக் கண்டிப்புக் காட்டவேண்டும். குழந்தையின் வீண் விவாதத்தைப் பெற்ருேர் அடக்கவேண்டும். இதையும் ஆத்திரமில்லாமல் பரிவோடு செய்ய வேண்டும்.

குழந்தைகள் நல்ல பழக்கங்களைப் பார்த்துப் பழகிக்கொள்வது போலவே கெட்ட பழக்கங்களையும் பார்த்துப் பழகிக் கொள்வார்கள். சில வீடுகளில் தாயும் தந்தையும் சதா எதற்கெடுத்தாலும் நிறைய வாதப் பிரதிவாதம் செய்து கொண்டே இருப்பார்கள். பார்த்துப் பார்த்துக் குழந்தைகளுக்கும் இந்த வழக்கம் பழகிவிடுகிறது.

குழந்தைகள் எதிர்த்துப் பேச இன்னொரு காரணமும் உண்டு. ரேடியோக்கள் மூலமாகவும், சினிமாக்கள் மூலமாகவும் குழந்தைகளுக்குச் சில பழக்கங்கள் உண்டாகின்றன. கோமாளித்தனமான பதிலை ரேடியோவிலோ சினிமாவிலோ கேட்டபோது நாம்கூடச் சிரித்தோம். அதேமாதிரியான பதிலை நம் குழந்தை நமக்குச் சொன்னல் அதற்காக நடுங்கிப் போய்விட வேண்டாம். "ரேடியோவிலும் சினிமாவிலும் சிரிப்பைத் தந்த இந்தப் பதில் நாம் பேசும்போது மட்டும் ஏன் வேடிக்கையாக இல்லை?" என்ற விஷயம் குழந்தைக்குப் புரியாது. இப்படிச் சினிமா அல்லது ரேடியோ பதில்களை உபயோகிப்பது கெட்டிக்காரத்தனம் என்பது சில குழந்தைகளின் எண்ணம். எனவே அவைகள் அடிக்கடி இப்படி எதிர்த்துப் பேசுகின்றன. வயதான குழந்தைகளிடம் இந்தப் பழக்கம் நிறைய இருக்கும். இதை முழுவதும் விலக்குவது முடியாத காரியம். எனவே ஓரளவு இம்மாதிரியான பதில் பேச்சுக்களை அநுமதித்துச் சிரிக்கத்தான் பெற்ருேர் கற்றுக் கொள்ளவேண்டும்.

"குழந்தை விவகாரத்தில் பெற்ருேர் தம் அதிகாரத்தை விட்டுக் கொடுக்கக்கூடாது" என்ற பேச்சை நாம் அடிக்கடி கேட்கிருேம். குழந்தையை எதிர்த்துப் பேச அநுமதித்தால் பெற்ருேரின் அதிகாரம் போய்விடுமே என்று பல பெற்ருேருக்குப் பயம். 'குழந்தையின் கட்சி ஜயித்துவிட்டால் நமக்கு அவமானம் வந்துவிடுமே, நம் ஆட்சி தளர்ந்துவிடுமே' என்றெல்லாம் பல பெற்ருேர் நினைக்கலாம். அதிகாரம் காரணமாக ஏற்பட்ட ஆட்சி நிலைத்த ஆட்சியாகாது. அன்போடும் பரிவோடும், 'இப்படிச் செய், அப்படிச் செய்' என்று வழி காட்டுவதால் ஏற்படும் நட்பாட்சியே நிலைத்த ஆட்சி.

வீட்டில் பெற்ருேரை எதிர்த்துப் பேசுவதற்கும், பாட்டியை எதிர்த்துப் பேசுவது, பக்கத்து வீட்டுக்காரரை எதிர்த்துப் பேசுவது, உபாத்தியாயரை எதிர்த்துப் பேசுவது இவைகளுக்கும் வித்தியாசம் உண்டு. குழந்தை தன் கோபம், ஆத்திரம், வெறுப்பு இவைகளை வெளிக்காட்டுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கவும், அந்தச் சமயத்தில்

குழந்தை பேசும் பேச்சை அன்போடு ஏற்றுக்கொள்ளவும் பெற்றோர்கள் பொறுமையோடு தயாராக இருக்க வேண்டும். ஆனால் குழந்தையோடு பழகும் பெரியவர்களுக்கெல்லாம் இந்தப் பொறுமை இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்க முடியுமா என்ன? ஜின்னி பாட்டியிடம் அவமரியாதையாகப் பேசுகிறாள். ஜின்னியின் தாய் இதைப் பார்த்துக் கொண்டு, பேசாமல் பக்கத்தில் நின்றால் அது தப்பு. ஜின்னி சமூகத்தில் பழகுவதற்கு வேண்டிய பழக்கத்துக்கு இது கேட்டை உண்டாக்கிவிடும்.

ஜின்னி தன் உணர்ச்சிகளைக் கொட்டிப் போக்கிக்கொள்வது அவசியந்தான். ஆனால் அவள் வேற்று மனிதர்களோடு கலந்து வாழப் பழகிக்கொள்வதும் அவசியம். சற்று நேரத்துக்குப் பிறகு ஜின்னியைத் தனியே அழைத்து, "ஜின்னி, பாட்டியிடம் அப்படி அவமரியாதையாக எதிர்த்துப் பேசக் கூடாது. பாட்டி வருத்தப்படுவாள்" என்று பரிவாகச் சொல்லித் திருத்தவேண்டும். பிறகு, "பாட்டியின்மேல் உனக்கு என்ன கோபம்?" என்று ஜின்னியைக் கேட்டுப் பாட்டியின்மேல் உள்ள கோபத்தை எல்லாம் தன்னிடம் சொல்லி ஆற்றிக்கொள்ளும்படி தாய் ஜின்னிக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும். இப்படிப் பழக்கிவிட்டால் ஜின்னி வேற்று மனிதர்களிடம் மரியாதையாக நடந்துகொள்ளவும் அவர்களிடம் கோபம் ஏற்பட்டாலும் அடக்கிக் கொள்ளவும் கற்றுக்கொள்வாள். பிறர்மேல் ஏற்பட்ட கோபத்தைப் பற்றி எல்லாம் தாயிடம் சொல்லி ஆற்றிக்கொள்ளும் சந்தர்ப்பம் ஜின்னிக்குக் கிடைத்துவிடுகிறபடியால் உணர்ச்சிகளை மனத்தில் அடக்கி வைத்துக்கொள்ளும் கஷ்டமும் ஜின்னிக்கு இல்லை.

வீட்டில் இருக்கும்போது பிறர் யாரையாவது பற்றிக் குறை கூறிப் பேசுவது பெரியவர்களுக்கே அவசியம். "அம்மாவிடமே இதையெல்லாம் பேசப்படாதென்றால் வேறு யாரிடந்தான் பேசுவது?" என்று ஒரு பையன் சொன்னானாம்.

குழந்தைகள் எதிர்த்துப் பேசினால் அதற்காகக் கவலையே படவேண்டாம். அது இயற்கையான ஒரு செயல்தான். ஆனால் எதற்கும் எப்பொழுதும் சமயாசமயமில்லாமல் எதிர்த்துப் பேசுவது, வாதாடுவது என்ற பழக்கம் குழந்தைக்கு வந்துவிட்டால் அப்பொழுது நன்கு ஆராயவேண்டும். குழந்தையின் மனத்தில் ஏதோ கோளாறு இருக்கிறது என்பதைத்தான் இந்த நிலை காட்டுகிறது. குழந்தையின் உணர்ச்சிகளுக்குச் சரியான போக்கிடம் இல்லாமல் அமுங்கிக் கிடப்பதே இதற்குக் காரணமாக இருக்கலாம். இந்த நிலையில் குழந்தையைத் திட்டுவதோ அடிப்பதோ ஒரு பலனும் தராது. "குடும்பத்தில் வேறு ஒரு குழந்தையினிடம் பெற்றோர் அதிக அன்பு காட்டுகிறார்கள் என்று குழந்தை நினைக்கிறதா? பெற்றோர் போட்டிருக்கும் கட்டுப்பாடுகளுக்கெல்லாம் உட்பட்டு நடக்க முடியவில்லையே என்பதனால் ஏற்பட்ட ஏக்கமா? இந்தக் கட்டுப்பாடுகள் கடுமையானவையா?" அறிவாளிகளான பெற்றோர் இவ்வாறு ஆராய்ந்து குழந்தை அடிக்கடி எதிர்த்துப் பேசுவதற்கு உரிய காரணம் எங்கிருக்கிறது என்று பார்த்து அந்தக் காரணத்தைப் போக்க முயலவேண்டும். ஓரளவு குழந்தை எதிர்த்துப் பேச அநுமதிக்கத்தான் வேண்டும்.

# பாபுராவ் பதில் சொல்லுகிருர்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச் சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிருர். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள் பற்றியும் அருமையாய்ப் பதில் தருகிருர்.

கேள்வி: ஏன் நீங்கள் சட்ட சபைக்கு நிற்கக் கூடாது?

பதில்: வெள்ளைக் குல்லாய் போட்ட அந்த ஊமைகளின் கூட்டத்தில் மற்ருெருவனும் சேர வேண்டுமாக்கும்!

* *

கே: இருதய நோவு என்பது என்ன? அதற்குப் பரிகாரம் என்ன?

ப: கல்யாணம் அந்த நோவைப் போக்கும்; குழந்தைகள் இருதயத்தைப் பிளந்துவிடுவார்கள்.

* *

கே: வளர்ப்பு மிருகத்துக்கும் மனைவிக்கும் என்ன வித்தியாசம்?

ப: வளர்ப்பு மிருகம் பேச்சின்றிக் கேட்கிறது; எப்போதும் விசுவாசமாக இருக்கிறது. மற்ருெரு பேர் வழியோ எப்போதும் பேசுகிருள்; அடிக்கடி உதைக்கிருள்.

* *

கே: பெண்கள் வண்டியில் நம்மை ஏற விடுவதில்லை; பெண்களுக்காக உள்ள வெயிடிங் ரூமிலும் நம்மை உட்காரவிடுவதில்லை. ஆனல் சாதாரணமாகப் புருஷர் வண்டிகளிலும் புருஷருக்கு உரிய வெயிடிங் ரூம்களிலும் பெண்கள் உட்காருகிருர்களே; ஏன்?

ப: ஏனெனில் புருஷர்கள் பெண்களைக் கண்டு பயப்படுவதில்லை; ஆட்சேபமும் செய்வதில்லை.

* *

கே: ஓர் அழகிய பெண் தன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டால் ஆடவன் என்ன செய்யவேண்டும்?

ப: அது அவளிடமே இருக்கட்டும். அவள் அழகு மாருமல் இருக்கும்படி பிரயாசைப்பட வேண்டும்.

* *

கே: உங்கள் மனைவியின் சௌந்தரியத்தை அளவிடுவது எப்படி?

ப: அவள் முகத்திலுள்ள புன்னகையையும், வீட்டிலுள்ள அமைதியையும் கொண்டு அளவிடுவேன்.

* *

கே: நீங்கள் வேறு தொழிலுக்குப் போயிருந்தால் நம்முடைய படத்தொழில் எவ்விதமாக இருந்திருக்கும்?

ப: இப்போது இருப்பதைவிட மோசமாய்ப் போயிருக்காது.

* *

கே: சென்ற காலம் மிக இனிக்கிறது? ஏன்?

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: ஏப்ரல் '48), பம்பாய்.

ப: அதன் முனை யாரையும் துன்புறுத்தாது.

* *

கே: இந்தியா ஆசியாவுக்குத் தலைமை வகித்து இறுதியில் உலகுக்கே வழி காட்டும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்களா?

ப: நாளுக்கு நாள் இந்தியாவே தத்தளித்துக்கொண் டிருக்கையில் அது ஆசியாவுக்கும் உலகத்துக்கும் தலைமை வகிக்க ஏன் விரும்ப வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை. இந்தத் தலைமைச் சமாசாரம் பாசிஸத்தைப் போல எனக்குப் படுகிறது.

* *

கே: படத்தில் நடிக்க விரும்பும் இளைஞர்களெல்லாம், "நாங்கள் கௌரவமான குடும்பத்தில் பிறந்தவர்கள்" என்று ஏன் முழக்கம் செய்கிறார்கள்? கௌரவமான குடும்பத்துக்கும் கலைக்கும் என்ன சம்பந்தம்?

ப: படத்தொழிலில் ஏற்கனவே நிறையக் கௌரவமான மனிதர்கள் இருக்கிறார்களென்றும், கௌரவமானவர்களையே புதிதாக எடுப்பார்களென்றும் அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பாவம், அவர்கள் காண்பது கனவுதான்!

* *

கே: மதராசிகளைப் பற்றியும் அவர்கள் அறிவுத்திறமையைப் பற்றியும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: விசேஷமாக ஒன்றும் இல்லை. அல்பச் சம்பளத்துக்காக அவர்கள் தங்கள் அறிவைத் தங்கள் நாட்டுக்கு வெளியே வழங்குகிறார்கள். மாடுங்காத் தெருக்களில் மேஜைத் துணியை உடுத்துச் செருப்பு இல்லாமல் வெறுங் காலோடு நடமாடுகிறார்கள்.

கே: பொதுவாக வாழ்க்கையில் நம்பிக்கை உள்ளவர் ஆணா பெண்ணா?

ப: பெண்தான். தன்னலமுள்ள ஒரு சோம்பேறியைக் கிருகதர்மம் நடப்பதற்காக வாழ்வு முழுவதும் நம்புகிறாள்.

* *

கே: உயிர்நூலறிஞர்கள் 'மனிதன் ஒரு மிருகம்' என்கிறார்கள். அது சரிதானா? உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: நான் இன்னும் கொஞ்சம் மேலே சென்று, 'அவன் ஒரு முரட்டு மிருகம்' என்பேன்.

* *

கே: மலர்கள் உலகத்துக்கு எதை வெளியிடுகின்றன?

ப: மோனத்தொண்டிலே கழியும், அழகும் மணமுமுடைய குறுகிய வாழ்க்கையை.

* *

கே: அநேகமாக லாயர்களே தலைவர்களாகிறார்களே; ஏன்?

ப: அவர்களில் பெரும்பாலோர் வாயாடிகள். இந்த இந்திய லாயர்கள் பழைய சண்டை ஒன்றைத் தீர்க்க இந்தியாவைக் கண்டதுண்டமாக்கிவிட்டார்கள்; இப்போது அந்தத் துண்டுகளைப்பற்றிப் புதிய சண்டை ஒன்றைக் கிளப்பியிருக்கிறார்கள்.

* *

கே: முட்டையிடும் கோழியைத் தரும சிந்தையுடையதென்று கருதலாமா?

ப: பெருமிதத்தோடு இடும் அதன் முட்டையை நாம் திருடி இன்னும் அதிக முட்டையிடும்படி தட்டிக்கொடுத்து அதற்கு ஆறுதல் செய்கிறோம்.

சிறுகதை :



# சிட்டுக்குருவிகள்

மூல ஆசிரியர் : கே. ஏ. அப்பாஸ்

மொழிபெயர்த்தவர் : கே. கணேஷ்

ஊருக்கு மேற்கே இருக்கும் மாந்தோப்பின் பின்னே சூரியன் மறைந்துகொண்டிருந்தான். ரகீம்கான் வயலிலிருந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்தான். ஐம்பது வயதாகியும் பலங்குன்றாத தன் தோளில் கலப்பையைச் சுமந்துகொண்டும், இரண்டு எருதுகளை ஓட்டிக்கொண்டும், அகங்காரமும் சிடுசிடுப்பும் முகத்திலே விளங்க, கிராமத்தின் முக்கிய வீதி வழியாக அவன் நடந்துகொண்டிருந்தான். மாலை நேரத்தில் ஹூக்கா குடிப்பதற்காகச் சாவடித் திண்ணையில் உட்கார்ந்திருந்த சில விவசாயிகளின் குதூகலப் பேச்சு, இவனைக் கண்டதும் ஒடுங்கிக் கிசுகிசுப்பாக மாறியது.

இவனுடைய உருவமும் காலடி ஓசையும் மறைந்ததும், கல்லூ என்பவன் தான் பிடித்திருந்த ஹூக்காவை அடுத்தவனுக்குக் கொடுத்துக்கொண்டே, “அதோ போய்விட்டான் கிராதகன்!” என்றான்.

அவன் கூறியதைத் தொடர்ந்து மிட்டாய் வியாபாரி நன்ஹா என்ற பொதியன், “ஆள் நாளுக்கு நாள் வரவர மோசமாகி வருகிறான். நேற்று இவனுடைய மாட்டின் மேல் ஏதோ ஒரு சின்னக் கூழாங் கல்லை வீசிவிட்டதாம், அந்த அப்பாவி ராமுவின் குழந்தை. அதற்காக அந்தக் குழந்தையை இவன் அடித்து நொறுக்கிவிட்டான்!” என்றான்.

ராம்நாத் என்ற கிராமாதிகாரியும் ரகீம்கானின் இன்னும் சில கொடு

**ஆங்கிலத்தில் முற்போக்கான கருத்துக்களை இட்டு அருமையாகக் கதைகளும் கட்டுரைகளும் எழுதும் மிகச் சில இந்திய வாலிபர்களுக்குள்ளே நல்ல கீர்த்தி பெற்றவர் கே. ஏ. அப்பாஸ். அவருடைய ‘ரைஸ்’ (சோறு) என்ற தொகுப்பில் உள்ளது இந்த உருக்கமான கதை. மூல ஆசிரியரின் அநுமதி பெற்று இதைத் தமிழாக்கித் தந்திருக்கிறார் நண்பர் கணேஷ்.**

காப்பிரைட்: ‘ரைஸ்’ (ஆங்கிலப் புத்தகம்), குதுப் பப்ளிஷர்ஸ் லிமிடெட், 17, கன்போ தெரு, பம்பாய்.

மைகளைத் தானாக வலிய விரித்து உரைக்கலானான்: "ஆமாம், அன்று ஒரு நாள் என் குதிரை என்னவோ தவறுதலாக அவன் வயலில் நுழைந்துவிட்டது. அதற்காக அதை இவன் கிட்டத்தட்டக் கொன்றே போட்டான்" என்றான் ராம்நாத். ராம்நாத்தின் குறும்புக் காரப் பையன்கள் வேண்டு மென்றே இந்தக் குதிரையை அப்படி ரகீம்கானின் வயலிலே நுழையவிட்டார்கள். இதை மட்டும் ராம்நாத் அந்த இடத்தில் குறிப்பிடவில்லை. நியாயந்தானே!

கடைசியில், நரை பழுத்த புரோகிதன் தன் பொக்கைவாயைத் திறந்து வழக்கம்போல் "ஹரி ராம்! ஹரி ராம்!" என்று கடவுள் நாமத்தை உச்சரித்துவிட்டு, "இவனைப்போன்ற கொடியோனை என் ஆயுளில் நான் பார்த்ததே இல்லை. சின்னஞ்சிறு குழந்தையாக இருந்தாலும் சரி, வாயில்லாப் பிராணியாக இருந்தாலும் சரி; இவன் கொஞ்சங்கூட ஈவு இரக்கம் காட்டுவதே இல்லை. இவனுடைய பிள்ளைகள் வீட்டை விட்டே ஓடியதில் என்ன ஆச்சரியம்?" என்றான்.

இந்தப் பேச்சுக்கெல்லாம் பாத்திரமாக இருந்த ரகீம்கான், வீதியிலே வரிசையாக நின்ற வீடுகளை யெல்லாம் கடந்து, தூரத்தில் தன்னந்தனியே இருந்த தன் குடிசைக்கு முன் போய்ச் சேர்ந்தான். தாழ்ந்திருந்த அந்தக் குடிசையின் சுவர் மேல் கலப்பையைச் சார்த்தி வைத்து வீட்டுக்கு முன்னிருந்த மூலைகளில் மாடுகளைக் கட்டிவிட்டுத் திரும்பினான்.

வீட்டுக்குள் நுழைய அவன் ஓர் அடியெடுத்து வைத்தபோது, "தம்பீ ரகீம்கான்!" என்று யாரோ மெல்லிய குரலில் கூப்பிட்ட சப்தம் அவன் காதில் விழுந்தது.

அண்டை வீட்டிலிருந்து வெளியே வந்த கிழவியின் குரல் தான் அது. ரகீம்கான் அவளை நோக்கி, "ஏன்? என்ன?" என்று முரட்டுக் குரலில் கேட்டான். அவள் பதில் சொல்லத் தயங்குவதைக் கண்ட ரகீம், "என்ன விஷயம்? நான் உன்னைத் தின்றுவிடமாட்டேன். பயமில்லாமல் சொல். வாய்தாப் பாக்கிக்காக உன் மகனை மறுபடியும் கைது செய்துவிட்டார்களா? அல்லது உன் மருமகள் இன்னுமொரு குழந்தையைப் பெற்றுவிட்டாளா?" என்று கேட்டான்.

அவன் பேசி ஓய்ந்ததும் கிழவி தன் முழுத் தைரியத்தையும் வரவழைத்துக்கொண்டு, "உன் சம்சாரம்ம்..." என்று என்னவோ இழுத்தாள்.

"......ஓடிப் போய்விட்டாள்" என்று ரகீமே சட்டென்று அந்த வாக்கியத்தைப் பூர்த்தி செய்தான். 'என் ஹேஷ்யம் சரிதானே!' என்று கேட்பதுபோல் புன்னகையும் பூத்தான்.

அவன் மனைவி ஓடியதற்குத் தானே காரணம் என்று நினைத்து விடுகிறானே என்னவோ என்ற பயத்துடன் சமாதானம் கூறுபவள் போல், "இல்லை, இல்லை, நூர்ப் பூரிலுள்ள அண்ணன் வீட்டுக்குத் தான் போயிருக்கிறாள். சில நாட்களில் வந்துவிடுவாள்" என்றாள் கிழவி.

அவள் கூறியதை அலட்சியம் செய்பவன்போல் "பூ!" என்று சொல்லிக்கொண்டே ரகீம் வீட்டுக் கதவைத் திறந்தான். தன் மனைவி திரும்பியே வரமாட்டாள் என்பது அவனுக்குத் தெரியும்.

இருளடைந்த குடிசைக்குள் கோபம் பொங்க நுழைந்து, கட்டிலின்மேல் அமர்ந்தான். மூலையில்

ஒரு பூனை 'மியா மியா' என்று கத்தியது. தன் கோபத்தை யார்மேலடா காட்டுவது என்று காத்துக்கொண்டிருந்த அவன், அந்தப் பூனையைத் தூக்கி வாசலிலே வீசி எறிந்துவிட்டுக் கதவைப் படார் என்று ஓங்கிச் சாத்தினான்.

புழுதி படிந்த அவன் கை கால்களைக் கழுவிக்கொள்ளத் தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கவும், அவன் பசி தீர உணவு படைக்கவும், அவனையும் வசவுகளை வாங்கிக் கட்டிக்கொள்ளவும் இருந்துவந்த ஒருத்தி இப்போது அங்கே இல்லாமற் போனது ரகீம்கானுக்குச் சங்கடமாக இருந்தது. அவனுடைய மனைவி அங்கே இருந்த காலத்தில் அவனுக்கு எப்போதும் கோபந்தான்; அவள் இல்லாத இப்போது அவன் கோபம் இன்னும் அதிகமாயிற்று.

சாப்பிடாமல் தூங்குவது என்ற உறுதியுடன் கட்டிலில் சாய்ந்த அவன் தனக்குத்தானே, "கடைசியில் அவள் போய்விட்டாளாக்கும்!" என்று கூறிக்கொண்டான். தனது முப்பது வருஷக் குடும்ப வாழ்க்கையில், என்றைக்காவது ஒரு நாள் அவள் தன்னை விட்டுப் போய்விடுவாள் என்றே அவன் எப்போதும் சந்தேகப்பட்டு வந்தான். ஆறு வருஷங்களுக்கு முன் ஒரு நாள் அவனுடைய மூத்த மகன் பூந்து, என்றைக்கும் இல்லாத அவ்வளவு அதிக அடி வாங்கினான். உடனே அவன் வீட்டை விட்டே வெளியேறி எங்கேயோ ஓடிவிட்டான். அதற்கு மூன்று வருஷங்களுக்குப் பின்பு இளையவனான நூருவும் அண்ணன் போன வழியே போய்விட்டான். அது முதலே தன் மனைவியும் அவளுடைய அண்ணன் வீட்டுக்குப் போய்விடுவாள் என்று ரகீம்கான் சந்தேகித்துவந்தான். இன்று அவள் அப்படியே போய்விட்டதால், அவனுக்குக் கஷ்டமாக இருந்தது. அவன் தன் மனைவியிடம் ஒரு நாளும் அன்பு செலுத்தியதில்லை. எனவே அவள் போனதற்காக ரகீம் துக்கப்படவில்லை. என்றாலும், வீட்டிலுள்ள ஏதோ ஓர் உபயோகமான தளவாடம் காணமற்போனது போல் அவனுக்குச் சங்கடமாக இருந்தது; அவ்வளவுதான். அவளும் போன பின்பு, புண்பட்ட தன் மன வேதனையை அவன் இனி யாரிடம் காட்டுவது? குடும்பம், சமூகம், வாழ்க்கை ஆகிய எல்லாவற்றின் மீதும் தான் கொண்டிருந்த ஆத்திரம் முழுவதையும் அவன் தன் மனைவிமீதே காட்டிவந்தான். அவள் அவை அனைத்துக்கும் பொதுவான ஒரு சின்னமாகவே அவனுக்குத் தோன்றினாள்.

அவன் வாலிபனாக இருந்தபோது குஸ்தி, கவாத்து, நீச்சு முதலிய தேகாப்பியாச விளையாட்டுக்களில் வல்லவனாக இருந்தான். இவற்றில் ஊரிலேயே அவனை மிஞ்சியவர் எவருமில்லை. அந்தக் காலத்தில் ஒரு சர்க்கஸ் கம்பெனி ரகீமின் கிராமத்துக்கு வந்து சிறிது காலம் தங்கியது. அதில் சேரவேண்டும் என்று ரகீமுக்கு ஆசை தோன்றியது. சர்க்கஸில் சேர்ந்தால் தனக்கு இஷ்டமானபடி பிரயாணம் செய்யலாம், புகழ் கிட்டும் என்று அவன் எண்ணினான். தவிர, உள்ளூர் மார்வாடி ராம்சரணின் மகள் ராதாவிடம் வேறே அவனுக்கு ஆத்மார்த்தமான காதல் பிறந்துவிட்டது. ஒரு நாள் தான் புரிந்த ஒரு குஸ்திப் பந்தயத்தை ராதா கவனித்துக்கொண்டிருந்ததை ரகீம் கண்டான். எதிரியைப் புறமுதுகு காட்டச்செய்து வெற்றிவீரனாக ரகீம் நின்றபோது, ராதா காதல் பொழியும் கண்களால் அவனையே

கூர்ந்து நோக்கினாள். ரகீமின் வாழ்க்கையில் அதுதான் இன்பமான நாளாகும். அதற்குப் பின்பு சில சமயங்களில் இருவரும் சிறிது சிறிது நேரம் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததுண்டு. அந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம், இந்த எழுத்து வாசனையற்ற வாலிபன் தன் காதலைத் தட்டித் தடுமாறிக்கொண்டு உணர்ச்சி பெருக அவளிடம் கூறியிருக்கிறான். ரகீமின் இந்த இரண்டு ஆசைகளையும் அவனுடைய பெற்றோர் கொன்றுவிட்டார்கள். கௌரவமான விவசாயிக்குச் சர்க்கஸ் தொழில் மிகவும் கீழ்த்தரமானது என்று அவர்கள் கூறினார்கள். ரகீமின் தகப்பன் பாட்டன் பூட்டன் எல்லோரும் நிலத்தில் உழுதே பிழைத்தார்களாகையால் ரகீமும் அதே தொழிலைப் புரியவேண்டும் என்றார்கள். ராதாவை மணப்பதற்கு என்ன ஆட்சேபம்? ஒரு ஹிந்துப் பெண்ணை-ஒரு காபிரை-ஒரு முஸ்லிம் வாலிபன் மணப்பது மதத்துக்கு விரோதமான கேவலச் செய்கை என்று சொல்லி அவர்கள் தடுத்துவிட்டார்கள்.

தனது வாலிப மிடுக்கால் சில காலம் வரைக்கும் ரகீம்கான் சமூகக் கட்டையெல்லாம் உடைத்து எறிந்து வெளியேறுவது என்று எண்ணியதுண்டு. தந்தையின் கண்டிப்பை அவன் வெறுத்துங்கூடப்பல நூற்றாண்டுகளாக அவனது உதிரத்தில் ஊறியிருந்த அடிமைத்தனத்தால் தந்தையின் அதிகாரத்துக்கும் சமூகக் கட்டுப்பாடுகளுக்கும் அவன் கடைசியில் அடிபணிந்துவிட்டான். சில தினங்களுக்குப் பின் சர்க்கஸ் கம்பெனி ரகீம்கான் இல்லாமலே ஊரை விட்டுச் சென்றுவிட்டது. ரகீமுக்கு ராதாவின் மீதுள்ள காதலுக்கும் முற்றுப்புள்ளி விழுந்தது. ராம்சரணிடம் சென்றான் ரகீம்கானின் தகப்பன். "உங்கள் மகளுக்குப் பதினைந்து வயதாகிவிட்டதால் அவளுக்குக் கல்யாணம் செய்துவிடுவதுதான் நல்லது" என்று சொன்னான். தாமதித்துக் கல்யாணம் செய்வதனால் பல விபரீதங்கள் ஏற்படும் என்றும் தந்திரமாக எடுத்துக் கூறினான். சில வாரங்களில் பக்கத்து ஊரிலுள்ள ராம்லால் என்ற நடுத்தர வயதுள்ள தொந்தி பருத்த மார்வாடியை ராதா மணந்தாள். ரகீம்கான்மீது தான் கொண்ட காதலை எண்ணி, இரவிலே ராதா தனித்திருக்கும் போது சிறிது சோகக்கண்ணீர் வடித்தாள். பிறகு, தன் விதியை எண்ணி ஆறுதலடைந்து புதிய கணவனிடம் வாழ்ந்து அரை டஜன் குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாள்.

ரகீம்கானும் வேறொரு பெண்ணைக் கல்யாணம் செய்துகொண்டான். பெண்ணை அவன் பார்த்துத் தேர்ந்துகொள்ளவில்லை. அவனுடைய பெற்றோரே பெண்ணைத் தேர்ந்தெடுத்து, கல்யாண நாளையும் நிச்சயித்தார்கள். அவனுக்குப் பகட்டான உடைகளையும் மணப்பெண்ணுக்கு வெள்ளி ஆபரணங்களையும் அணிவித்தார்கள். அவனைக் குதிரையிலேற்றிப் பித்தளைப் பாண்டு வாத்தியங்கள் முழங்க, பெண்வீட்டுக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். அங்கே நிக்காவும் பூர்த்தியாயிற்று. காஜியாரின் கேள்விகளுக்கெல்லாம் ஏதோ ஒரு யந்திரம் போல் ரகீம் தலையை ஆட்டினான். அவனுக்குத் தப்ப வழி இல்லை.

இருண்ட அறையிலே நாணத்துடன் தன் எதிர்கால வாழ்க்கையைப்பற்றி ஏதும் தெரியாமல் அருண்டு உட்கார்ந்திருந்த அந்தச் சிறுமியை எவரும் எதுவும் கேட்க

வில்லை. கல்யாணச் சடங்குகளெல்லாம் முடிந்ததும், "பயல் எப்படிப் பணிந்துவிட்டான்; பார்த்தாயா? இந்த ஏற்பாட்டுக்கு அவன் சம்மதிக்கவே மாட்டானோ என்று என்னவோ பயந்தாயே! இந்தப் பசங்கள் விஷயமெல்லாம் எனக்குத் தெரியாதா? கல்யாணம் தள்ளிப்போனால் சும்மா இருக்கமாட்டார்கள்; ஏதாவது முரண்டு பண்ணிக்கொண்டே இருப்பார்கள். அதனால்தான் நம் பெரியவர்கள் குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே கல்யாணம் செய்து வைக்கிறார்கள். ரகீம் இனிமேல் எல்லாம் சரியாய்ப் போய்விடுவான்" என்று ரகீமின் தகப்பன் தன் சாமர்த்தியத்தைத் தானே மெச்சிக்கொண்டான்.

அதே சமயத்தில் கொலையாளியை எதிர்நோக்கி நிற்கும் ஆட்டைப்போல் காத்திருந்த தன் மனைவியின் அறைக்குள் ரகீம் நுழைந்தான். தன் பெற்றோர்



......தோளில் கலப்பை;
முகத்தில் சிடுசிடுப்பு......

கள், குடும்பம், சமூகம் அனைவர் மீதும் வஞ்சம் தீர்த்துக்கொள்வது என்று அந்நேரத்திலே அவன் உறுதி செய்துகொண்டான். தன் வாழ்க்கைக் கனவைக் குலைத்தவர்கள் இவர்களே என்று மதித்தான். நியாயத்தை ஆராய்ந்து பார்க்கும் சக்தியற்று அவன் உள்ளம் குழம்

பிப்போயிருந்ததால், தான் பட்ட சகல கஷ்டங்களுக்கும் தன் மனைவியையே அவன் சின்னமாக மதித்து விட்டான். ஆகவே அவள்மீதே வஞ்சம் தீர்த்துக்கொள்ளவும் தீர்மானித்தான். கனிந்த அவன் உள்ளம் இரும்புபோல் கடினமாயிற்று. கதவைப் படீரென்று கோபத்துடன் திறந்தான்.

இருண்ட குடிசைக்குள் கட்டிலின்மீது படுத்தவாறே முப்பது வருஷங்களுக்கு முன் நடந்த இந்தச் சம்பவங்களை யெல்லாம் ரகீம் கான் ஞாபகப்படுத்திக்கொண்டான். இது வரைக்கும் பழி வாங்கியது போதாதா? முப்பது வருஷகாலம் தன் மனைவி, குழந்தைகள், மாடுகள் அனைத்தையும், அனைவரையும் ரகீம் கேவலமாக நடத்திவிட்டான். ஊரிலுள்ள எல்லோரிடமும் சண்டை பிடித்துக்கொண்டு, சமூகமே வெறுக்கும் கிராதகனாகி விட்டான். அனைவரும் தன்னை வெறுப்பது அவனுக்குச் சந்தோஷத்தையே அளித்தது.

உற்சாகமும் அன்பும் நிறைந்த இந்த வாலிபன் திடீரென்று இப்படி மிருகத்தனம் படைத்த காரணத்தை அவர்கள் புரிந்துகொள்ள வில்லை, புரிந்துகொள்ள முயலவும் இல்லை. அவனை அவர்கள் ஆரம்பத்திலே லேசாக வெறுத்தார்கள். பின்பு பயங் கலந்த அலட்சியத்தோடு பார்த்தார்கள். அவனுடைய சங்கடத்தை அறிந்து அவனிடம் அநுதாபப்படுபவர் எவரும் இல்லை. அனைவரும் புறக்கணித்த அவனோ, சமூகம் தனக்கு அளித்த மனைவிமீது உள்ளத்தை உறுத்தும் எரிச்சலுடன், தன் அதிகாரத்தைப் பிரயோகித்துத் திருப்தியடைந்தான்.

அவளும் முப்பது வருஷங்களாக அவன் இழைத்த கொடுமைகளை யெல்லாம் அடிமையைப்போல் தன் சமூக வழக்கப்படி சகித்துக் கொண்டாள். சமீபத்தில் சிறிது காலமாகக் கிழமை தவறினாலும் அவளுக்கு அடி கிடைக்கத் தவறுவதில்லை. ரகீம்கானைப் பொறுத்த வரைக்கும் மனைவியை அடிப்பது என்ற வேலை அவனுடைய தினசரிக் கடமைகளில் ஒன்றாகிவிட்டது. அவனுக்குத் தூக்கம் வந்தது. அப்போது அவன் தன்னிடம் ஒட்டி விட்ட இந்த வழக்கத்தை ஒழித்து விட்டு இனி எப்படி வாழ்வது என்று எண்ணமிட்டுக்கொண்டே படுத்தான். அவனுடைய வாழ்க்கையில் அன்றுதான் அவனுக்கு மனைவிமீது சிறிது பச்சாத்தாபம் ஏற்பட்டது. ஆனால் அவள்மீது அவனுக்கு அன்பு தோன்றிவிடவில்லை. அவள் இல்லாத தனிமை ஏதோ வெறிச் சென்று இருப்பதுபோல் அவனுக்குத் தோன்றியது.

காலையில் தூக்கம் கலைந்து அவன் எழுந்தபொழுது, சுள்ளென்று வெயில் எறித்தது. அதிகாலையில் தினமும் தன்னை எழுப்பும் மனைவி இல்லாதுபோகவே, அவளைத் திட்டிக்கொண்டே ரகீம் படுக்கையை விட்டு எழுந்தான். என்றும்போல் அன்று அவன் அவசரப் படவில்லை. சோம்பலுடன் எழுந்து கை கால் முகம் கழுவி, ஆட்டுப் பாலைக் கறந்து முதல் நாள் எஞ்சியிருந்த சப்பாத்தியை அதில் தொட்டுத் தொட்டுத் தின்று சாப்பாட்டை ஒருவாறு முடித்துக்கொண்டான். பின்பு தன் அருமை ஹுக்காவை அருகில் எடுத்து வைத்துக்கொண்டு புகை குடிக்கத் தொடங்கினான். திறந்த ஜன்னலின் வழியாகச் சூரிய கிரணங்கள் உள்ளே நுழைந்து அறைக்கு ஒளியும் சூடும் தந்தன. அறையின் ஒரு மூலையில் ஒட்டடை

படிந்திருப்பது அவன் கண்ணில் தென்பட்டது. அன்று வயலுக்குப் போவதில்லை என்று அவன் ஏற்கனவே தீர்மானித்துவிட்டான். ஆகையால், தன் குடிசையைச் சுத்தம் செய்ய முடிவு செய்தான். ஒரு நீண்ட கழியில் கந்தைகளைக் கட்டி ஒட்டடை அடிக்கப்போனான். அப்போது அவன் வீட்டு ஓட்டைக் கூரையிலே பறவைக் கூடு தொங்குவதைக் கண்டான். கீச்சுக் கீச்சென்று கத்திக்கொண்டு, அந்தக் கூட்டின் உள்ளும் புறமுமாக இரு சிட்டுக்கள் பறந்துகொண்டிருந்தன.

ஒரே அடியில் கூட்டை அழித்து விடவேண்டுமென்று முதலில் அவனுக்கு ஓர் எண்ணம் உண்டாயிற்று. ஆனால் உள்ளத்தினுள்ளே இருந்த ஏதோ ஒரு சக்தி அவனை அப்படிச் செய்யவொட்டாமல் தடுத்தது. கம்பை விட்டெறிந்துவிட்டு, ஒரு முக்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அதன்மீது ஏறிச் சிட்டுக்களின் கூட்டை நன்றாகக் கவனித்தான். இன்னும் சிறகு முளைக்காத இரண்டு சிட்டுக் குஞ்சுகள், மாமிசத் துண்டுகள்போல், கூட்டுக்குள் இருந்தன. அவை பிறந்து ஒரு நாள்தான் ஆகியிருக்கும். அவற்றின் தாய் தந்தைகளான இரண்டு சிட்டுக்களும் கீச்சிட்டுப் பயமுறுத்திக்கொண்டு ரகீம்கானின் முகத்தைச் சுற்றி வட்டமிட்டன. கூட்டின் உட்புறத்தை ரகீம் பார்த்து முடிக்கு முன்னே தாய்ச் சிட்டு அவனைத் தாக்கிக் கொத்திவிட்டது.

"அட மூதேவி, என் கண்ணையே பிடுங்கி விடுவாய் போலிருக்கே!" என்று ரகீம் தனக்கு வழக்கமான அசட்டுப் புன்சிரிப்புடன் கூறி, கீழே இறங்கினான். தன் வீட்டையும் குழந்தைகளையும் காப்பதற்காக அந்தச் சிறு குருவி புரிந்த வீரப் போராட்டம் அவனுக்கு வேடிக்கையாக இருந்தது. அன்று சிட்டுக்களின் கூடு தப்பியது. ரகீம்கானின் குடிசையிலும் அமைதி நிலவியது.

மறுநாள் முதல் ரகீம் மீண்டும் வயலில் வேலை செய்யச் சென்றான். என்றாலும், கிராமத்திலுள்ள எவரும் அவனுடன் பேசவில்லை. ஒவ்வொரு நாளும் காலை முதல் அந்திப் பொழுது வரைக்கும் வயலில் உழுது, தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்துவிட்டு, சூரியன் மறைவதற்கு முன் வீடு திரும்புவான். அதன்பின், கட்டிலில் சாய்ந்து கொண்டு ஹுக்காவைப் பிடித்தபடியே சிட்டுக்களின் குடும்ப வாழ்க்கையை ஆசையாய்ப் பார்த்துக் கொண்டிருப்பான். சின்னஞ் சிறிய சிட்டுக் குஞ்சுகள் இரண்டும் பெரியவையாகி அழகிய குருவிகளாக வளர்ந்துவிட்டன. பல வருஷங்களுக்கு முன்னே ஓடிப்போன தன் பிள்ளைகள் இருவருக்கும் வைத்திருந்த பூந்து, நூரு என்ற இரண்டு பெயர்களையுமே அந்தச் சிட்டுக்குஞ்சுகள் இரண்டுக்கும் ரகீம் சூட்டினான். இந்தப் பரந்த உலகத்தில் இந்தச் சிட்டுக்கள் நான்குமே அவனுடைய ஆப்த நண்பர்களாக இருந்தன. அவனுடைய அண்டை அயல் வீட்டுக்காரர்கள் அவனைக் கண்டு இன்னமுந்தான் பயந்தார்கள். அவனுடைய தற்போதைய மௌனத்தைக் கண்டு அவர்கள் சந்தேகித்தார்கள். சில காலமாக அவன் தன் மாடுகளை அடிக்கக் காணவில்லை. இது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. நாது, சித்ரா என்ற அந்த இரண்டு எருதுகளுமே இப்போது சந்தோஷமடைந்தன. அவற்றின் உடலில் பட்ட காயங்களும் ஆறிவிட்டன.

மழைக்காலத்தில் ஒரு நாள் மாலை. அன்று ரகீம்கான் தன் வழக்

கத்தைவிடச் சீக்கிரமாக வீடு திரும்பினன். வீதியில் சில குழந்தைகள் கூட்டமாக விளையாடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இவனைக் கண்டதும் பயந்து ஓடினர்கள். சில குழந்தைகள் அந்த அவசரத்தில் தங்கள் கால் செருப்பையும் விட்டுவிட்டு ஓடினர்கள். "ஏன் ஓடுகிறீர்கள்? நான் உங்களை அடிக்கமாட்டேன்" என்று ரகீம்கான் அன்போடு கூறியும் அவர்கள் அதைக் கேட்கவில்லை. இதற்குள் மழைத் துளிகளும் லேசாக விழவே பெரிய மழை பெய்வதற்கு முன்பு வீடுபோய்ச் சேர்ந்து மாடுகளைக் கட்ட எண்ணி ரகீம் அவசரமாக நடந்தான்.

குடிசைக்குள் நுழைந்து, காடா விளக்கை ரகீம் பற்ற வைத்தான். ரொட்டித் துண்டுகள் சிலவற்றைச் சிட்டுக்களுக்கு வைத்து, "ஓ நூரு! ஓ பூந்து!" என்று அவற்றைக் கூவி அழைத்தான். ஆனல், அன்று என்னவோ சிட்டுக்கள் வெளிவரவே இல்லை. தன் நண்பர்களுக்கு என்ன நேர்ந்தது என்று பார்க்க ஆவல் கொண்டு, சிட்டுக்களின் கூட்டுக்குள்ளே, ரகீம் உற்றுப் பார்த்தான். நான்கு குருவிகளும் பயந்து முடங்கி ஒன்ருேடு ஒன்று நெறித்துக்கொண்டு கூட்டுக்குள்ளே கிடந்தன. கூடு இருந்த இடத்துக்கு நேரே கூரை ஒழுகியது. ரகீம்கான் கொட்டுகிற மழையில் கூரைமீது ஏறி ஒழுக்கை அடைத்தான்.

அந்த வேலை முடிவடைவதற்குள் அவன் உடல் முழுதும் சொட்டச் சொட்ட நன்ருய் நனைந்துவிட்டது. அவன் கட்டிலில் உட்கார்ந்தபோது, அவனுக்குத் தும்மல் வந்தது. இயற்கையின் அந்த எச்சரிக்கையைக் கவனியாமல் ரகீம் தூங்கச் சென்ருன். மறுநாள் எழுந்திருந்தபோது அவனுக்குப் பலத்த காய்ச்சல் அடித்துக்கொண்டிருந்தது.

ரகீம்கான் பல நாட்களாக வயல் வேலைக்குப் போகாதிருப்பதைக் கண்ட கிராமவாசிகள், அவனுக்கு என்னவோ ஏதோ என்று சந்தேகப்பட்டார்கள். காரணம் என்ன என்று அறிய விரும்பிய சிலர் அவனுடைய குடிசை வாசலுக்கு வந்து கதவிடுக்கு வழியாக உள்ளே பார்த்தார்கள். கட்டிலில் படுத்தபடியே, "ஓ பூந்து! ஓ நூரு! நான் போன பின்பு யார் உங்களைக் காப்பாற்றப் போகிருர்கள்?" என்று ரகீம் தனக்குத் தானே பேசிக்கொள்வதை அவர்கள் கேட்டார்கள்.

கிராமவாசிகளுக்குப் பரிதாபமாக இருந்தது. "பாவம்! இவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. இவன் சம்சாரத்துக்குச் சொல்லி அனுப்புவோம். அவள் வந்து கவனிக்கட்டும்" என்று சொல்லிக்கொண்டார்கள். அப்படியே சிலர் ரகீமின் மனைவிக்குச் சொல்லியும் அனுப்பினர்கள்.

மறுநாள் ரகீமின் மனைவி தன் இரண்டு பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு, கவலையோடு கதறிக்கொண்டே ஓடிவந்தாள். அண்டை அயலாரெல்லாரும் அநுதாபத்துடன் வந்து கூடிவிட்டார்கள். கதவின் உட்புறம் தாழிடப்பட்டிருந்தது. இவர்கள் எவ்வளவு பலமாகத் தட்டியும் கதவு திறக்கவில்லை. கதவை உடைத்துக்கொண்டு, எல்லாரும் உள்ளே நுழைந்தார்கள். அறையின் நடுவே, எலும்பெடுத்த ரகீமின் பருத்த சடலம் படுத்துக் கிடந்தது. அறையிலே சிந்தனை தேங்கிய ஒரு மௌனம் நிலவியது. அதைக் கலைத்துச் சிறகடித்துக்கொண்டிருந்தன அந்த நான்கு சிட்டுக்களும்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

# இருபது மாதங்களில்

என்னுடைய தற்போதைய நிலைமையைவிடச் சிறை வாழ்க்கையே மிகவும் சௌக்கியமாக இருந்தது. நான் பதவியேற்றுச் சென்ற இருபது மாதங்களாக நடத்தும் வாழ்க்கை, பத்து வருஷச் சிறை வாழ்க்கையைவிட அதிகக் கடினமாக இருக்கிறது.

என்னைக் கையையும் காலையும் கட்டிப் போட்டது போல் தோன்றுகிறது. என் இஷ்டப்படி நடமாட முடியாமல் தவிக்கிறேன். என் வேலைகள் தொல்லையாக இருக்கின்றன. மெய்காப்பாளர் இல்லாமல் என்னால் வெளியே போக முடியவில்லை. உத்தியோகஸ்தர்களின் ஆலோசனையைக் கேளாமல், முக்கியமான எந்த வேலையையும் என்னால் செய்ய முடியவில்லை.

1946-ஆம் வருஷம் ஆகஸ்ட்டில் வர்தாவில் நடந்த காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்துக்குப்பின், நான் பம்பாய் சேர்ந்தேன். காங்கிரஸின் பிரதிநிதியாக மத்திய சர்க்காரை அமைக்கும்படி வைஸிராயிடமிருந்து எனக்கு அழைப்பு வந்தது. சில தினங்களில் மத்திய சர்க்காரோடு என் தொடர்பு ஆரம்பமாயிற்று. அதன்பிறகு பல சம்பவங்கள் நடைபெற்றன. ஆனால் நான் மாத்திரம் டில்லியிலேயே தொடர்ந்து இருந்து வருகிறேன்.

இந்த இருபது மாதங்களில் பற்பல மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன. சில சமயம் இந்தக் குறுகிய காலமே ஒரு நூற்றாண்டுபோல எனக்குத் தோன்றியதுண்டு. அந்தச் சம்பவங்களெல்லாம் மக்களுக்கு நன்றாக ஞாபகம் இருக்கும். பல கஷ்டங்களையும் சோதனைகளையும் சர்க்கார் அநுபவிக்க வேண்டியிருந்தது. மகத்தான துன்பங்களைக் கோடிக் கணக்கான மக்கள் அநுபவித்தார்கள். ஆனால் அவர்கள் சோர்வடையவில்லை; சர்க்காரிடம் நம்பிக்கையை இழக்கவுமில்லை. இது மிகவும் திருப்தியளிக்கக்கூடிய விஷயம். சர்க்காரிடம் மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்காக நான் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

—ஜவாஹர்லால் நேரு.

(23-1-'48 அன்று மாலை, பம்பாய் நகரசபை வரவேற்புக்கு அளித்த பதிலிலிருந்து.)

**Regd. No. M. 4975**

மஞ்சரி ஸர்வதாரி - சித்திரை மே '48


கனி குலுங்கும் சிம்மாசலம் . . . . . . ஆந்திர பத்ரிகா 1
கடத்திச்சென்ற பெண்கள் . . . . . . . . . . ஸ்த்ரீ 4
மனம் குழம்புவது ஏன்? . . . . . . . . . குறவஞ்சி 6
தேவி பேசுகிருள் . . . . . . . . . . . . திரிவேணி 9
மாப்பிள்ளை ஐயாவின் திண்டாட்டம் . . . . . . . . . 19
சித்தார்த்தன் துறவு . . . . . . . . . . அசுவகோஷர் 23
பிஹார் நாடோடிப் பாட்டுக்கள் . . . . . . . . பிரபாஸி 25
வழி காட்டிய வீரேசலிங்கம் . . . . . . . கிருஹலட்சுமி 30
மலையாளத்து யானை . . . . . . . . . மைலிண்டியா 33
அரிசியே மருந்து . . . . . . . . . . . . . . 37
வக்கீலைக் குழப்பிய சாட்சி . . . கேஸ் அண்ட் காமெண்ட் 41
இமயம் அழைத்த கலைஞர் . . . . . . . . . மாத்ருபூமி 46
பேய் உண்டா? . . . . . . . அஸ்ட்ரலாஜிகல் மகஸீன் 49
அழுகல் படங்களின் அவசியம் . . . . . . . . ஸவுண்ட் 54
டலாய் லாமா . . . . . . . . . . . ஆனந்தவாணி 58
ஸாதாராவில் போட்டி சர்க்கார் . . . . . . . விசால பாரத் 60
இலக்கியத்தில் ரகஸ்யவாதம் . . . . . . . ஜயகேரளம் 65
பாக்கெட் ரேடியோ . . . . . . . . . . . . . 70
முறைத் தலைவலி . . . . . . . . . . . விசுவவாணி 73
எதிர்த்துப் பேசும் குழந்தைகள். . . . பேரெண்ட்ஸ் மகஸீன் 75


## விசேஷப் பகுதிகள்


சொல் பொருந்துமா? . . . . . . . . . . . . . . . 22
நகைச் சித்திரம் . . . . . . . . . . . . . . . 28
காந்தி: வாழ்வும் வாக்கும் . . . . . . . . . . . . 44
குழந்தைகள் குறும்பு . . . . . . . . . . . . . . 68
எது சரி? . . . . . . . . . . . . . . . . . 74
பாபுராவ் பதில் சொல்லுகிருர் . . . . . . . . . . . 79
சிறுகதை: சிட்டுக்குருவிகள் - கே. ஏ. அப்பாஸ் . . . . . 81